எம்மவர் பாடிய ரி.எம்.எஸ்ஸின் அரிய

# முருகன் பாடல்கள்






தொகுப்பு - தயாரிப்பு

**இரா.தெய்வராஜன்**

திருக்கோவில்

எம்மவர் பாடிய ரி.எம்.எஸ்ஸின் அரிய

# முருகன் பாடல்கள்



தொகுப்பு - தயாரிப்பு
இரா.தெய்வராஜன்
திருக்கோவில்

## என்னுரை

ஒஸ்லோ நோர்வேயில் நிரந்தர வதிவிடம் கிடைத்து ஓய்வாக இருந்தவேளையில் திரு.ரி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் பாடிய பாடல்களில் முருகன் பாடல்களைத் தேர்ந்து சுமார் நூறு பாடல்களைப் பாடி இருந்தேன். அதுவும் கைபேசியில் உள்ள சுய காணொளி (Selfie Video) மூலமாக இந்தப் பணியை நிறைவேற்றி இருந்தேன். இப்பாடல்களுக்கான வாத்திய இசையை இசைப் பலகையூடாக (Key board) நானே இசைத்திருந்தேன். முகநூலில் (Facebook) இப்பாடல்களுக்கு பெரும் வரவேற்புக் கிடைத்திருந்தது.

இப்பாடல்களைத் தனியே ஒலிக் குறுவட்டாக (Audio CD) வெளியிட்டு அந்தப் பாடல்களுடன் நமது கவிஞர்கள் இ.பொ.த.வில்லியம்பிள்ளை, சங்கீதபூசணம் சி.கணபதிப் பிள்ளை, எஸ்.பி.கனகசபாபதி, கோவிலூர் செல்வராஜன், இரா.தெய்வராஜன் (அடியேன்) ஆகியோர் பாடிய முருகன் பாடல்களையும் தொகுத்து சிறிய நூல் வடிவத்தைக் கொடுத்துள்ளேன்.

மெருகூட்டி ஒலிப்பதிவு செய்த எம்.சி.ராஜ்குமாருக்கும், அழகுற அச்சிட்டு வழங்கிய யுவு அச்சகத்தாருக்கும், சரி பிழை பார்த்து பக்கமமைத்து உதவிய வினோதீபா லெதீஸ்ரூபனுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

ஓம் ஸ்ரீ சாய்ராம்

இரா.தெய்வராஜன்
திருக்கோவில்.
23.07.2017

## சமர்ப்பணம்

இப்புத்தகத்தை முருக
பக்தனான எனது தந்தை
திரு.சி.இராசதுரைப் போடியார்
அவர்களுக்கு
அன்புக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றேன்.

# பொருளடக்கம்


| பாடல்கள் | பக்கம் |
|---|---|
| 1. வேலெடுத்த வேலனை நான் பாடுவேன் | 1 |
| 2. முருகா காலைக் கதிரோனே | 2 |
| 3. அமுத நிலவே அழகின் வடிவே | 3 |
| 4. ஆறுமுகன் பெயரைச் சொல்லி | 4 |
| 5. நெஞ்சுக்குள் வாழும் கந்தனே | 5 |
| 6. நெஞ்சம் என்னும் கோவிலிலே | 6 |
| 7. முருகா இது என் முறையீடு | 7 |
| 8. முருகா உன் பெயர் இனிமை | 8 |
| 9. ஓராறு முகமும் ஈராறு கரமும் | 9 |
| 10. முருகனைக் கூப்பிட்டு | 10 |
| 11. நினைத்தபோது நீ வரவேண்டும் | 11 |
| 12. கந்தன் திருநீறணிந்தால் | 12 |
| 13. செந்தூர் செல்லும் தென்றல் காற்றே | 13 |
| 14. மண்ணானாலும் திருச்செந்தூர் | 14 |
| 15. கற்பனை என்றாலும் | 15 |
| 16. அரும்புகள் அசைந்திடும் | 16 |
| 17. உள்ளம் உருகுதைய்யா | 17 |
| 18. தித்திக்கும் தேன்பாகும் | 18 |
| 19. உனைப் பாடும் தொழிலின்றி | 19 |
| 20. அன்று கேட்பவன் அரசன் | 20 |
| 21. இசையால் வசமாகா | 21 |
| 22. உன்னையும் மறப்பதுண்டோ | 22 |
| 23. எந்தன் குரலில் இனிப்பதெல்லாம் | 23 |
| 24. நம்புங்கள் முருகன் நல்லவன் | 24 |
| 25. எனக்கும் இடம் உண்டு | 25 |
| 26. தந்தையுடன் அன்னை செய்த | 26 |
| 27. அன்னை என்னும் உறவு கூட | 27 |
| 28. முருகா உன் குணம் | 28 |

29. செந்தூர் கந்தையா 29
30. கந்தன் திருக்கோவில் வந்தால் 30
31. மண்ணில் ஒரு தெய்வமென்றால் 31
32. செந்தூரின் அலையோசை 32
33. மூவிரு கரமும் ஆறிரு கரமும் 33
34. துள்ளி வருகுதைய்யா வடிவேல் 34
35. தென் பழனி மலையில் வாழும் 35
36. வேல் முருகா என்றால் 36
37. மலை ஏறி உன்னைக் காண 37
38. காலையில் குகனை நினைத்தால் 38
39. முருகனுக்கெத்தனை அலங்காரம் 39
40. பால் தரும் தாய் அப்பா 40
41. மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவிருந்து 41
42. மெல்லச் சிரிக்கும் கந்தன் 42
43. பங்குனியில் உத்திரமாம் 43
44. உனைப் பாடும் பாடலுக்கு 44
45. காணக் காண கண் குளிரும் 45
46. சந்தன மேடையும் கந்தனின் 46
47. மாணிக்கவேல் ஐயா 47
48. காண கண்கள் போதாதையா 48
49. சொல்லாத நாளில்லை சுடர் மிகு 49
50. திருநீறணிந்தேன் 50
51. முருகா என் முன் வந்துவிடு 51
52. ஆறுபடை வீடுடைய 52
53. பன்னிரு விழியழகை முருகா 53
54. வருகின்றான் முருகன் வருகின்றான் 54
55. பச்சைக் கலைமயில் ஆட்டம் 55
56. எந்த நிலையிலும் இனிப்பது 56
57. மானோடும் வள்ளி மலை 57
58. படைவீட்டின் சுடர் வேலனே 58

59. முருகா என்பது மந்திரம் 59
60. மலர் சிறியது அதன் மணம் 60
61. முருகா குமரா அழகா 61
62. வளமான பெருவாழ்வை 62
63. சரவணபவ எனும் நாமத்தை 63
64. மணிமுடி ஓராறு மலர்விழி ஈராறு 64
65. திருநீறு பூசி வந்தோம் 65
66. தணிகையை நோக்கிச் செல்லுவோம் 66
67. முருகா எனும் நாமம் 67
68. அன்னை சொல்லித் தந்தையை 68
69. பழமுதிர்ச் சோலையில் கூவிடும் 69
70. படியாய் பிறந்தாலும் 70
71. காவடிகள் எடுத்து வந்தோம் 71
72. காவடியாம் காவடி கந்தனுக்கு காவடி 73
73. திருமணக்கோலம் பரங் குன்றிலே 74
74. அழகென்ற சொல்லுக்கு முருகா 75
75. சொல்லச் சொல்ல இனிப்பதொரு 76
76. மலைகள் எத்தனை தெய்வமலை 77
77. உகந்தை முருகனின் புகழைப் பாடினால் 78
78. திருச்செந்தூர் வேலன் 79
79. வருவாய் முருகா வடிவேல் அழகா 80
80. திருக்கோவில் வேலவன் நீ 81
81. திருக்கோவில் முருகனுக்கு திருவிழா 82
82. கடற்கரையினிலே 83
83. ஈழத்து திருச்செந்தூர் 84
84. வெள்ளை நாவல் 85
85. கற்பூரச் சட்டி கொண்டு 86
86. வீர வேல் வெற்றி வேல் 87
87. சித்திர வேல் 88
88. வாராய் சிவன் மகனே 89

89. நினைத்ததெல்லாம் வழங்கிடுவான் 90
90. சித்திரவேல் கந்தன் கையிலே 91
91. உகந்தைமலை வாழும் 92
92. உகந்தை மலை மீதிலாடும் 93
93. சுந்தர மலை 94
94. கந்த வேலா 95
95. காடுகள் கந்தனின் 96
96. உறக்கம் வரவுமில்லை 97
97. அரோகரா ஆறுமுகா 98
98. ஆடியமாவாசை வேலா 99
99. உந்தன் சந்நிதியில் 100
100. புலம் பெயர்ந்து 101
101. அரோகரா என்று சொல்லுங்க 102
102. அழகு திருக்கோவிலிலே 103
103. காவடி எடுப்பதில்லை 104
104. சொல்லாலாகுமா 105
105. வங்கக் கடலிலே 106
106. தங்க முருகா 107
107. துன்பங்களைத் தீர்ப்பவனே 108
108. ஊரெல்லாம் சுற்றி வந்த சூரன் 109
109. கந்த சஷ்டி நாயகனே 111
110. அந்நியனின் தேசத்திலே 112
111. சூரனை அழித்து 113
112. அழகு தமிழ் சொல்லெடுத்து 114
113. வண்ணக்குடை பிடித்து 115
114. கந்தப்புராணம் கேட்பவர்க்கெல்லாம் 116
115. திருமாலின் மருகனே 117
116. திருக்கோவில் முருகனை 118
117. தேரோடும் திருக்கோவில் 119
118. திருக்கோவில் பதியினிலே 120

119. திருக்கோவில் கடலோரம் 121
120. கடலோரம் குடிகொண் 122
121. ஆதிசிவன் நெற்றிக் கண்ணில் 123
122. அழகன் முருகனின் 124
123. அம்பிகையின் மைந்தன் 125
124. கந்தப் பாணக் குமரனுக்கு 127
125. ஊரெந்தன் ஊரது 128
126. திருக்கோவில் திருப்பதிகம் 129
127. முருகன் திருப்பள்ளி எழுச்சி 134
128. முருகன் கும்மி 138
129. முருகன் திருவூஞ்சற் பாட்டு 144
130. கந்த புராணச் சாரம் 146
131. தமிழ்க் குமரன் பாமாலை 157
132. முருகா முத்துக்குமரா 160
133. எனக்கும் இடம் உண்டு 167

**சாயி பாடல்கள்**

133. சிவசக்தி ஸ்வரூபனே சாயிநாதா 161
134. கலியுகத்தில் அவதரித்த 162
135. ஜெய் சாயி ராமா 163
136. சத்யசாயி பாபா சரணம் ஐயா 164
137. சத்யசாயி பாபா சமரசம் கமழ் பூவா 165
138. சத்யசாயி நாதன் சாந்தஸ்வ ரூபன் 166
139. சாயிநாமம் சாயி நாமம் 167
140. ஜோதிஸ்வரூபமான பாபா 168
141. ஒரு தரம் சத்யசாயி என்றால் 169
142. ஞானத்தில் உருவானவனே 170
143. உன்னைக் கேட்டுப் பார் 171
144. ஓம்கார ஓசையுடன் உலகை 172
145. மாயாவதாரா மங்களஸ்வரூபா 173

## பலதும் பத்தும்

146. ஆதிஷக்தி அம்மன் அருளால் 174
147. ஆயிரம் கண்ணுடையாள் 175
148. மங்கைமாரித் தாயாரே 177
149. ஜென்மம் நிறைந்தது 178
150. இந்தப் புறப்புத்தான் 180

## வேல் எடுத்த வடி வேலனை நான் பாடுவேன்

வேல் எடுத்த வடி வேலனை நான் பாடுவேன் - என்
வேதனைகள் தீர்த்திடவே தினம் நாடுவேன்
வெற்றிவேலன் அவன் சக்தி பாலனவன் - என்
செந்தமிழும் கந்தனவன் திருத்தாண்டவம்
(வேலெடுத்த)

நீறணிவேன் தினம் நெற்றியிலே
நெஞ்சின் நிம்மதி மத்தியிலே
ஆறுபடை வீட்டினிலே அருள் தேடுவேன்
அவன்முகம் சூரியனாம் இருவிழி சந்திரனாம்
மூவுலகும் ஆள்பவனாம் தேவர்களின் நாயகனாம்
(வேலெடுத்த)

அருணகிரி புகழ் ஓதிடுவேன்
குமரகுரு பதம் பாடிடுவேன்
வெற்றி தரும் வேலவனை தினம் நாடுவேன்
இதம் தரும் சரவணனாம் பதம் தரும் உமை மகனாம்
அதிசயமே புரிபவனாம் அடியவரைக் காப்பவனாம்
(வேலெடுத்த)

## முருகா காலைக் கதிரோனே

முருகா காலைக் கதிரோனே ஆறுமலை வேலனே
உன் மலர்களிலே உன் முகம் கண்டேன் - அந்த
மலர் முகம் கண்டு மயங்கி நின்றேன்
(முருகா)

ஓம் காவடி நான் தொட்டு ஆடி வந்தேன் ஓம் முருகையா
தென் பழனிக்குச் சொல் வடித்துப் பாடி நின்றேன்
வள்ளிக் குறத்தி கண்டு வலம் வந்து வணங்கி நின்றேன்
முருகையா........... ஆறு படை வேலையா
(முருகா)

உன்துணைவியர் இருவருக்கும் அரோஹரா ஓம்
முருகையா
அந்த தேவமகள் தெய்வயானை வாழ்த்தக் கண்டேன்
செந்தூர் கடலோசை அசைவினில் இசையைக் கண்டேன்
முருகையா........... ஆறு படை வேலையா
(முருகா)

என் ஆறுமலை வேலுக்கு அரோஹரா ஓம் முருகையா
அந்த சோலை வனம் யாவிலும் மயிலைக் கண்டேன்
கந்தன் தேரில் நீ வருவதைப் பார்த்து நின்றேன்
முருகையா........... ஆறு படை வேலையா
(முருகா)

## அமுத நிலவே அழகின் வடிவே

அமுத நிலவே அழகின் வடிவே ஆறுமுக வேலனே
மதுரை மீனாள் மடியில் ஆடும் அழகு சிவபாலனே

மாயவன் மாமன் மார்பில் நீயும்
மாணிக்கப் பூவாய் ஆடவா
தேவர்கள் யாவரும் பூ மழை தூவ
தேன் தமிழ் பாடவா
தேன் தமிழ் பாடவா.......... வாவா...........
(அமுத நிலவே)

மானுட ஜாதி வாழவேண்டி நீ சொல்ல வந்தாய் நீதியே
நீர்முடி சிவனார் நெற்றிக் கண் வழியே
தோன்றிய ஜோதியே
தோன்றிய ஜோதியே.......... வாவா.........
(அமுத நிலவே)

தேவி தெய்வானை தேதி பார்த்து திருமணம் செய்தார சொல்லியே
காதலை நாடி காட்டினில் தேடி
சேர்ந்தவள் வள்ளியே
சேர்ந்தவள் வள்ளியே....... வாவா..........
(அமுத நிலவே)

## ஆறுமுகன் பெயரைச் சொல்ல

ஆறுமுகன் பெயரைச் சொல்லி அலைகடலும் பாடுதையா
அவன் பாதம் தேடிக் கொண்டு மேகங்களும் ஓடுதைய்யா

தேன் சுமந்த பூக்கள் எல்லாம் கண் சிமிட்டி ஆடுதையா
தென்றல் காற்று மூங்கில் தொட்டு தென்னவரைப்
பாடுதைய்யா
ஓடுகின்ற நதிகள் யாவும் ஓம் என்று கூறுதைய்யா
உதிக்கின்ற கதிரும் இங்கே உன் முகத்தைக்
காட்டுதைய்யா
(ஆறுமுகன்)

வாழ்வளித்த வள்ளல் உன்னை வாய் நிறைய
வாழ்த்துகிறேன்
வழித்துணையாய் காக்கும் உந்தன் தாய் மனதைப்
போற்றுகிறேன்
பொருள் படைத்த சொந்தம் எல்லாம் உன்
சொந்தமாவதில்லை
உன் சொந்தம் என்னை விட்டு ஒரு நாளும் போவதில்லை
(ஆறுமுகன்)

## நெஞ்சுக்குள் வாழும் கந்தனே

நெஞ்சுக்குள் வாழும் கந்தனே - வேலையா
நீதானே எந்தன் சொந்தமே வே......லா......

நான் கண்ட இன்பம் யாவுமே கந்தையா
நீ கொண்ட அன்பு ஆகுமே
ஊர் போற்ற பேரும் வந்தது செல்வங்கள்
உன் கைகள் தானே தந்தது

மேகத்தைப் போல வந்த சோகங்கள் யாவும் இங்கே
நீ தொட்டுத் தானே சென்றது வே......லா
(நெஞ்சுக்)

ஊர்தோறும் உந்தன் கோவிலில் சிங்காரா
உயிர் மீட்டி கீதம் பாடினேன்
பூவாலே அன்னக் காவடி தோள் கொண்டு
வேல் குத்தி நானும் ஆடினேன்

கற்பூர தீபம் இட்டால் கந்தா உன் பாதம் தொட்டால்
எப்போதும் இல்லை துன்பமே வே......லா
(நெஞ்சுக்குள்)

## நெஞ்சம் என்னும் கோவிலிலே

நெஞ்சம் என்னும் கோவிலிலே
நித்தம் அன்புக் காவலிலே
வெள்ளி மயில் வேலா உன்னை
வேண்டி நின்று பாடுகிறேன்
(நெஞ்சம்)

வேண்டுதலை அவனிடத்தில் - நீ வைத்துவிடு துணிவோடு
வேல் கொடுத்த திருநீறு வெற்றி தரும் புகழோடு
நீ கொடுத்த தமிழைக் கொண்டு பாடவந்தேன் பணிவோடு
வேலவனே நேரில் வந்து வாழ்த்தி விடு கனிவோடு
(நெஞ்சம்)

கண் விழித்த நாள் முதலாய் கந்தனையே வணங்கி வந்தேன்
கற்பூர ஒளியினிலே உன் முகத்தைத் தெரிந்து கொண்டேன்
நாள்தோறும் ஆவல் கொண்டு உன் துணையை நம்பி வந்தேன்
நாயகனே எந்தன் வாழ்வில் உன்னால்த்தான் நன்மை கண்டேன்
(நெஞ்சம்)

## முருகா இது என் முறையீடு

முருகா இது என் முறையீடு - என்
குறைகள் களைவாய் பரிவோடு
உருகும் எனது மனதோடு - நின்
உறவைக் கேட்டேன் பணிவோடு

(முருகா)

குமரா இது என் கோரிக்கை - அருள்
கொடுத்தாய் கிடைத்தது நல் வாழ்க்கை
மனமே அடியவன் காணிக்கை - தெய்வ
மணியே மலரடி நம்பிக்கை

(முருகா)

அழகா இது என் வேண்டுகோள் - மெய்
அறிவெனும் சுடரின் தூண்டுகோல்
பழம் நீ உனை நான் சேரும் நாள் - என்
பழவினை எல்லாம் தீரும் நாள்

(முருகா)

# முருகா உன் பெயர் இனிமை

முருகா உன் பெயர் இனிமை
அதன் பின்தானே முக்கனிகள்
குறு நகை அழகே அழகு
அடுத்ததுதானே தேன் மலர்கள்
திருவடி பேரெழில் ஓவியம்
அதன்பின்தானே பொற் சிலைகள் - இதை
தெரிந்தவர் உன்னைப் பணிவார் - அதுவே
வாழ்வின் மங்கலங்கள்

(முருகா)

திருநீறணிந்திட மறந்தால்
நோய்களைத் தீர்ப்பது மருந்தாகும்
திருப்புகழ் கேளா உருவில்
அறுசுவை என்பது விருந்தாகும்
உண்மையைக் காணா கண்ணில்
மண்ணின் கலைகள் அழகாகும் - இதை
புரிந்தவர் உன் பதம் சேர்வார்
அதுவே அன்பின் வழியாகும்

(முருகா)

வடிவேல் காவல் இல்லையேல்
வல்லமை என்பது ஆறறிவு - உன்
வாசலும் கோவிலும் இல்லையேல்
மாளிகை கோட்டைகள் பேரழகு
உன் அருள் அறியா நெஞ்சில்
ஒவ்வொரு சொந்தமும் நல்லுறவு - இதை
உணர்ந்தவர் உன்னில் இணைவார்
அதுவே பிறவிப் பெருவாழ்வு

(முருகா)

# ஓராறு முகமும் ஈராறு கரமும்

ஓராறு முகமும் ஈராறு கரமும்
தீராத வினை தன்னைத் தீர்க்கும் - துன்பம்
வாராத நிலைதன்னைச் சேர்க்கும்
(ஓராறு)

ஆராவமுதென அருள் மழை பெய்யும்
கூரான வேல் கொண்டு கொடுமைகளைக் கொய்யும்
(ஓராறு)

சுவாமி மலையில் சிவ குருவென்றே - திருச்
சீரலை வாயிலில் சூரனை வென்றே
தேன் மதுர மொழியாள் தேவானையை மணந்த
திருப்பரங்குன்றில் தெரிசனந் தந்த - அந்த
(ஓராறு)

மாமனைப் போல் இரு மாதுடன் கூடி
மாலையில் பழமுதிர்ச் சோலையில் ஆடி
மா மயில் ஏறிட திருத்தணிகை தேடி
மோகமெல்லாம் தீர்ந்து ஆவி நன்குடிபெயர்ந்த
(ஓராறு)

## முருகனைக் கூப்பிட்டு

முருகனைக் கூப்பிட்டு முறையிட்ட பேருக்கு
முற்றிய வினை தீருமே - உடல்
பற்றிய பிணி ஆறுமே - வாழ்க்கை
முற்றிலுமே நலம் பெற்று இனிதுடன்
மெத்த இன்பம் சேருமே - அப்பன்
(முருகனைக் கூப்பிட்டு)

குமரனைக் கும்பிட்டு கொண்டாடுவோர்க்கு
குறைகள் யாவும் போகுமே - அவர்
குடும்பம் தழைத் தோங்குமே - சூர
சமர வேலாயுதம் பக்தர் துணை கொண்டால்
சகல பயம் நீங்குமே - ஐயன்
(முருகனைக் கூப்பிட்டு)

அறுமுகனை வேண்டி ஆராதனை செய்தால்
அருகில் ஓடி வருவான் - அன்பு
பெருகி அருள் புரிவான் - அந்த
கருணை உருவான குருபரன் என்றுமே
கைவிடாமல் ஆடுவான் - அப்பன்
(முருகனைக் கூப்பிட்டு)

கந்தனை எண்ணியே வந்தனை செய்வோர்க்கு
காரியம் கைகூடுமே பகை மாறி உறவாடுமே - சிவ
மைந்தன் அருளாலே மெய்யறிவுண்டாகி
மேன்மை உயர்வாகுமே - ஐயன்
(முருகனைக் கூப்பிட்டு)

## நினைத்தபோது நீ வரவேண்டும்

நீ வரவேண்டும் - முருகா நான் நினைத்தபோது
நீ வரவேண்டும்
முருகா நீ வரவேண்டும்

நினைத்தபோது நீ வரவேண்டும்
நீல எழில் மயில் வேலவர் வேலா
(நினைத்த)

உனையே நினைந்து உருகுகின்றேனே
உணர்ந்திடும் அடியார் உளம் உறைவோனே
(நினைத்த)

கலியுக தெய்வம் கந்தா நீயே
கருணையின் விளக்கமும் கடம்பா நீயே
மலை எனத் துயர்கள் வளர்ந்திடும்போதில்
மாயோன் மருகா முருகா என்றே
(நினைத்த)



## கந்தன் திருநீறணிந்தால்

கந்தன் திருநீறணிந்தால் கண்ட பிணி ஓடி விடும்
குந்தகங்கள் மாறி இன்பம் குடும்பத்தை நாடி வரும்
(கந்தன்)

சுந்தரவேல் அபிஷேச சுத்தத் திருநீறணிந்தால்
வந்தமர்ந்த மூத்தவளும் வழிபார்த்துப் போய்விடுவாள்
அந்தநேரம் பார்த்திருந்த அன்னை செல்வம் ஓடிவந்து
சிந்தையைக் குளிர வைக்க சொந்தம் கொண்டாடிடுவாள்
(கந்தன்)

மணம் மிகுந்த சாம்பலிலே மகிமை இருக்குதடா
மனமுடன் அணிவோர்க்கு மகிழ்ச்சியைப் பெருக்குதடா
தினந்தினம் நெற்றியிலே திருநீறு அணிந்திடடா
தீர்ந்திடும் அச்சமெல்லாம் தெய்வம் துணை காட்டுமடா
(கந்தன்)



## செந்தூர் செல்லும் தென்றல் காற்றே

செந்தூர் செல்லும் தென்றல் காற்றே முருகனைக்
காண்பாயோ - அவன்
சேவடி நிழலைச் சேர்ந்திட நானும் வருவதைச்
சொல்லாயோ
(செந்தூர்)

ஓடிடும் போதும் என் குறை கேட்க ஒரு நொடி நில்லாயோ
- துணை
தேடிடும் ஏழை நான் வரும் சேதி அவனிடம் சொல்லாயோ
(செந்தூர்)

நால்வகைப் பாடல் மல்லிகை முல்லை நறுமணம்
உன்னோடு - பெரும்
ஆசைகள் துன்பம் ஆயிரம் இங்கே அடியவன் என்னோடு
(செந்தூர்)

ஆழ்கடல் கூடும் ஆறுகள் எல்லாம் இணைந்தது
ஒன்றாகும் - நல்ல
தாய்மனம் கொண்ட வேலவன் முன்னால் அனைவரும்
ஒன்றாகும்
(செந்தூர்)

## மண்ணானாலும் திருச் செந்தூரில்

மண்ணானாலும் திருச் செந்தூரில் மண்ணாவேன் - ஒரு
மரமானாலும் பழமுதிர்ச் சோலை மரமாவேன் - கருங்
கல்லானாலும் தணிகை மலையில் கல்லாவேன் - பசும்
புல்லானாலும் முருகன் அருளால் பூவாவேன் - நா....ன்

பொன்னானாலும் வடிவேல் செய்யும் பொன்னாவேன் - பனி
பூவானாலும் சரவணப் பொய்கையில் பூவாவேன் - தமிழ்
பேச்சானாலும் திருப்புகழ் விளக்கப் பேச்சாவேன் - மனம்
பித்தானாலும் முருகன் அருளால் முத்தாவேன் - நான்

சொல்லானாலும் ஓம் என்றொலிக்கும் சொல்லாவேன் - பழ
சுவையானாலும் பஞ்சாமிர்தச் சுவையாவேன் - அருள்
உண்டானாலும் வீடும் பேறும் உண்டாவேன் - தனி
உயிரானாலும் முருகன் அருளால் பயிராவேன்

## கற்பனை என்றாலும்

கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்
கந்தனே உனை மறவேன் - நீ
அற்புதமாகிய அருட்பெருஞ் சுடரே
அருமறை தேடிடும் கருணை எம் கடலே

(கற்பனை)

நிற்பதும் நடப்பதும் நின் செயலாலே
நினைப்பதும் நிகழ்வதும் நின் செயலாலே
கற்பதெல்லாம் உந்தன் கனி மொழியாலே
காண்பதெல்லாம் உந்தன் கண் விழியாலே

(கற்பனை)



## அரும்புகள் அசைந்திடும் கொடிகளில்

அரும்புகள் அசைந்திடும் கொடிகளில் - இனி
அடுத்தது அழகிய மலர்களே
முருகனைப் பணிந்த பின் மனங்களில் - பற்றிப்
படர்வது பலவகை நலன்களே

(வேல் முருகா)
(அரும்புகள்)

மலைமுடி மருவிய முகில்களில் - பயிர்
விளைந்திட விழுந்தது மழைத்துளி
அழகனின் திருமிகு அடியினை - கண்டு
அடைந்தவர் அடைவது உயிர்த்துணை

(வேல் முருகா)
(அரும்புகள்)

குழல் வளி நுழைந்ததும் ஒலிகளின் - பெயர்
இசை என விளக்குதல் இயற்கையே
குறுநகைக் குமரனின் உறவினில் - நம்
குலம் வளம் பெருகுதல் இயற்கையே

(வேல் முருகா)
(அரும்புகள்)

பழந்தரும் பயன்மிகு மரங்களை - சுற்றிப்
பசிமிகும் பறவைகள் பறந்திடும்
அருள் தரும் குறிஞ்சியின் தலைவனை - தொழும்
அடியவர் திரள்வதும் தொடர்ந்திடும்

(வேல் முருகா)
(அரும்புகள்)

## உள்ளம் உருகுதைய்யா

உள்ளம் உருகுதைய்யா முருகா
உன்னடி காண்கையிலே
அள்ளி அணைத்திடவே எனக்குள்
ஆசை பெருகுதப்பா - முருகா

(உள்ளம்)

பாடிப் பரவசமாய் உன்னையே
பார்த்திடத் தோணுதையா
ஆடும் மயிலேறி முருகா
ஓடி வருவாயப்பா

(உள்ளம்)

பாசம் அகன்றதய்யா பந்த - உந்தன் மேல்
நேசம் வளர்ந்ததைய்யா
ஈசன் திருமகனே - எந்தன்
ஈனம் மறைந்ததப்பா

(உள்ளம்)

ஆறு திருமுகமும் உன் - அருளை
வாரி வழங்குதைய்யா
வீரமிகும் தோளும் கடம்பும்
வெற்றி முழக்குதப்பா

(உள்ளம்)

கண்கண்ட தெய்வமைய்யா நீயிந்த
கலியுக வரதனையா
பாவியென்றிகழாமல் - எனக்குன்
பதமலர் தருவாயப்பா

(உள்ளம்)

## தித்திக்கும் தேன்பாகும்

தித்திக்கும் தேன்பாகும் திகட்டாத தெள்ளமுதும்
தீன் சுவையாகவில்லையே - முருகையா
தீன் சுவையாகவில்லையே
எத்திக்கும் புகழ் கந்தன் இன்சொல் எழுத்தினைப் போல்
இன்பம் ஏதும் இல்லையே - குமரையா
இன்பம் ஏதும் இல்லையே

அத்தரும் ஜவ்வாதும் அள்ளியே பூசிடினும்
அங்கம் மணக்கவில்லையே - முருகையா
அங்கம் மணக்கவில்லையே
நித்தம் மணக்கும் செல்வக்குமரன் பெயரினைப் போல்
சீர் மணம் வேறு இல்லையே - குமரையா
சீர் மணம் வேறு இல்லையே

முத்தும் ரத்தினமும் முத்திரைப் பசும் பொன்னும்
முதற் பொருள் ஆகவில்லையே - முருகையா
முதற் பொருள் ஆகவில்லையே
சத்தியவேல் என்று சாத்தும் மொழியினைப் போல்
மெய்ப் பொருள் வேறு இல்லையே - குமரையா
மெய்ப் பொருள் வேறு இல்லையே

எண்ணற்ற தெய்வங்கள் எத்தனை இருந்தாலும்
எண்ணத்தில் ஆடவில்லையே - முருகையா
எண்ணத்தில் ஆடவில்லையே
மண்ணுக்குள் மகிமை பெற்ற மாமலை முருகன் போல்
மற்றொரு தெய்வமில்லையே - குமரையா
மற்றொரு தெய்வமில்லையே

(தித்திக்கும்)

## உனைப் பாடும் தொழிலின்றி

உனைப் பாடும் தொழிலின்றி வேறு இல்லை
எனைக் காக்க உனையின்றி யாரும் இல்லை -
முருகா...... முருகா

கற்பனையில் வருகின்ற சொற்பதமே - அன்பு
கருணையில் உருவான அற்புதமே
சிற்பச் சிலையாக நிற்பவனே - வெள்ளை
திருநீறில் அருளான விற்பனனே முருகா..... முருகா
(உனை)

அமுதம் இருக்கின்ற பொற்குடமே - இயற்கை
அழகு வழிகின்ற எழில் வனமே - குமுத
இதழ் விரிந்த பூச்சரமே - உந்தன்
குறுநகை தமிழுக்கு திரு வரமே முருகா...... முருகா
(உனை)

## அன்று கேட்பவன் அரசன்

அன்று கேட்பவன் அரசன் மறந்தால்
நின்று கேட்பவன் இறைவன்
நடுவில் மனிதன் வாழுகிறான்
வீணில் மனம் தடுமாறுகிறான் இறைவா........ இறைவா

(அன்று)

மனம்போல் மாங்கல்யம் என்பார் - தன்
மனமே சகலமும் என்பார்
தெரிந்தும் குணத்தை இழக்கின்றான்
இதயம் குலைந்து தவிக்கின்றான் இறைவா....... இறைவா

(அன்று)

அடிக்கும் அவன் கை அணைக்கும் - புவி
அனைத்தும் தலைவன் இயக்கம்
தலைவன் அணைத்தால் சிரிக்கின்றான்
தன்னை அடித்தால் பழிக்கின்றான் இறைவா...... இறைவா

(அன்று)

கற்றது கைமண் அளவு - கரை
கண்டவர் இங்கே குறைவு
கண்டு அறிந்தவன் ஓர் தலைவன்
யாவும் அருள்வான் நம் இறைவன் இறைவா...... இறைவா

(அன்று)

## இசையால் வசமாகா இதயம்

இசையால் வசமாகா இதயம் எது
இறைவனே இசைவடிவம் எனும் போது - தமிழ்
(இசையால்)

திசை எங்கிலும் பரவும் கீதம் அது - மலைத்
தேனுண்ட சுவையூட்டும் தன்மை அது - எனும்
(இசையால்)

அசைச் சொல்லின் தொடராலே
ஆனது ராகம் - பாடல்
அளவை முறைப்படுத்த அமைந்ததே தாளம்
இசையின் பொருள் விளங்கப் பாடுதல் பாவம்
எனக் கூறும் இவை மூன்றும் இணைந்து இன்பம் தரும்
(இசையால்)



## உன்னையும் மறப்பதுண்டோ

உன்னையும் மறப்பதுண்டோ - மறந்தால்
உள்ளத்தில் அமைதியுண்டோ முருகா - பயிர்
மண்ணையும் மறப்பதுண்டோ - மறந்தால்
மலரும் மணமும் உண்டோ முருகா - நான்
(உன்னையும்)

கண்ணையும் மறந்திருப்பேன் - கையுடன்
கால்களும் மறந்திருப்பேன் முருகா
எண்ணத்தின் ஒளிச்சுடரே - உன்னை
எப்படி நான் மறப்பேன் - நான்
(உன்னையும்)

பொற் பொருள் மறந்திருப்பேன் - இகழும்
புகழும் மறந்திருப்பேன் முருகா
என்னுயிர் ஆன உன்னை - மறந்தால்
எவ்விதம் வாழ்ந்திருப்பேன் - நான்
(உன்னையும்)

நீந்திய நதி மறப்பேன் - வீடும்
நிலமும் மறந்திருப்பேன் - வடிவேல்
ஏந்திய உனை மறந்தால் - உலகில்
எத்தனை நாள் இருப்பேன் - நான்
(உன்னையும்)

## எந்தன் குரலில் இனிப்பதெல்லாம்

எந்தன் குரலில் இனிப்பதெல்லாம் கந்தன் குரலே
இன்பம் தந்து காப்பதெல்லாம் கந்தன் அருளே
ஆ....... ஆ....... ஆ...... ஆ...... ஆ.......
(எந்தன்)

ஊருக்கு ஊர் போவேன் தினம் தினமே - அங்கு
உட்கார்ந்து பாடுவது கந்தன் புகழே
நாளுக்கு நாள் மாறும் நாகரீகமே - அதில்
நான் என்றும் மாறாத தனி இனமே
(எந்தன்)

கன்னித் தமிழ் பாடுவது புது சுகமே - அதில்
காண்பதெல்லாம் கந்தன் கவிநயமே
என்னையே தந்துவிட்டேன் கந்தனிடமே - அவன்
என்ன செய்தாலும் எனக்கு சம்மதமே
(எந்தன்)

## நம்புங்கள் முருகன் நல்லவன்

நம்புங்கள் முருகன் நல்லவன்
நம்மை நாடி வந்தே அன்பு செய்பவன் ஆண்டு கொள்பவன்
- அவனை
(நம்புங்கள்)

அழுபவர் கண்ணீரை முருகன் அன்பால் துடைக்கின்றான்
- தன்னை
தொழுபவர் வாழ்வினிலே - பிறவித் துயரைத்
தடுக்கின்றான் - அவனை
(நம்புங்கள்)

விரும்பும் மனிதருக்கு கந்தன் வெற்றியைக் காட்டுகிறான்
- பக்தி
அரும்பும் அடியவர்க்கு ஞான அமுதம் ஊட்டுகிறான் -
அவனை
(நம்புங்கள்)

இரவும் பகலும் இல்லை முதுமை இளமை பேதமில்லை
- அன்பின்
உறவு கொண்டவர்க்கு குமரன் உதவ மறந்ததில்லை -
அவனை
(நம்புங்கள்)

## எனக்கும் இடம் உண்டு

எனக்கும் இடம் உண்டு - அருள்
மணக்கும் முருகன் மலரடி நிழலில்
கார்த்திகை விளக்குப் பெண்களுடன் - திருக்
காவடி சுமக்கும் தொண்டருடன் - தினம்
பூத்திடும் ஞான மலர்களுடன் - ஒரு
புல்லாய் முளைத்துத் தடுமாறும்
(எனக்கும்)

நேற்றைய வாழ்வு அலங்கோலம் - அருள்
நெஞ்சில் கொடுத்தது நிகழ்காலம் - வரும்
காற்றில் அணையாச் சுடர் போலும் - இனி
கந்தன் தருவான் எதிர்காலம்
(எனக்கும்)

ஆடும் மயிலே என்மேனி - அதில்
அழகிய தோகை என் உள்ளம் - நான்
உள்ளம் என்னும் தோகையினால் - கந்தன்
உறவு கண்டேன் ஆகையினால்
(எனக்கும்)

## தந்தையுடன் அன்னை செய்த தவம்

தந்தையுடன் அன்னை செய்த தவம் போலும் - ஒரு
குழந்தையைப் போல் கனவில் திருக்கோலம்
தந்து விளையாடினான் கை மேலும் - கந்தன்
தந்தானத் தந்தான என்று மடி மேலும்
(தந்தை)

வெள்ளி நிற நிலவென்னும் பெண்ணோடு - அவன்
விட்டு விட்டு தொட்டுத் தொட்டு கண்ணோடு
தள்ளி விளையாடினான் பண்ணோடு - கந்தன்
தந்தானத் தந்தான என்று என்னோடு
(தந்தை)

சேவித்தகைகளுடன் கை கோர்த்து - என்
சிந்தை எனும் அரங்கத்தில் கால் பதித்து
தாவி விளையாடினான் தடம் பார்த்து - கந்தன்
தந்தான தந்தான என்று தமிழ் சேர்த்து
(தந்தை)

## அன்னை என்னும் உறவு

அன்னை என்னும் உறவு கூடப் புதியது - அது
ஐயிரண்டு திங்களில்தான் விளைந்தது
மன்னன் முருகன் உறவு பழையது - தாய்
மடியில் தோன்றும் அதற்கு முன்பும் இருந்தது

(முருகா...............)

(அன்னை)

அறிவு கொண்டு அறிவதென்ன பெரியது - ஒரு
கரையில் நின்று மறுகரையை அளப்பது
அன்பு என்னும் ஒரு பொருள்தான் உயர்ந்தது - வேல்
அழகன் கோவில் கருப் பொருளாய் அமைந்தது

(அன்னை)

இன்பங்களும் துன்பங்களும் நெடியது - அதில்
ஒன்று வந்தால் மற்றொன்று முடிவது
என்றென்றும் நிலைத்திருக்கும் நலம் எது - திரு
ஏரகனின் பேரருளாம் புகழ் அது

(அன்னை)

## முருகா உன் குணம் தன்னை

முருகா........ முருகா........ முருகா........ முருகா.......

முருகா உன் குணம் தன்னை அறிந்து கொண்டேன் -
உன்
முத்தான தத்துவமே புரிந்து கொண்டேன்

உருகாத மனந் தன்னில் நீ இல்லை - என்ற
உண்மையைக் கண்டு கொண்டேன் வேண்டுவதினில்லை
(முருகா உன்)

பொன் என்ற சொல்லை நான் சொல்கையிலே - உன்
பொன் மேனி என் நெஞ்சில் மறைகின்றதே
அன்பென்ற சொல்லை நான் சொல்கையிலே - அது
அழகான மயிலேறி வருகின்றதே
(முருகா உன்)

## செந்தூர் கந்தையா அருள் சேர்க்கும்

செந்தூர் கந்தையா அருள் சேர்க்கும் குமரையா - துணை
வந்தால் முருகையா நான் வாழ்வேன் வேலையா
(செந்தூர்)

தாய் ஐயா புவி எல்லாம் தாங்கும் நீ முருகையா..............
தூயோன் உன் திருவடியைத் தொழுகின்றேன் வேலையா
(செந்தூர்)

வேதமலர் தத்துவங்கள் விளங்கவில்லை முருகையா.......
- முருகா
பாதமலர் போதும் அதைப் பணிகின்றேன் வேலையா -
முருகா
(செந்தூர்)

காற்றடித்து என் வாழ்வு கலைந்துவிட்டால் முருகையா
போற்றும் உன் பொன்னடியில் பூ ஆவேன் வேலையா -
முருகா
(செந்தூர்)

## கந்தன் திருக்கோவில் வந்தால்

கந்தன் திருக்கோவில் வந்தால் வந்தவருக்கு
நன்மையுண்டு
சொந்தம் என்று ஏற்றருளும் சுப்ரமணிய சுவாமியுண்டு
(கந்தன்)

முந்தை வினை தீர்ப்பதற்கு முன்னிருக்கும் வேலுமுண்டு
வந்து வந்து ஆடுகின்ற வண்ண மயில் தானுமுண்டு
(கந்தன்)

சிந்தனையில் ஒளி கூட்டும் மந்திரங்கள் ஆறுமுண்டு
வந்த வினை ஒட்டி வைக்கும் வாசத் திருநீறுமுண்டு
(கந்தன்)

சந்தமிகும் திருப்புகழில் ஷண்முகனின் மேன்மையுண்டு
எந்தை அவன் கருணைக்கு ஈடாக என்ன உண்டு
(கந்தன்)

## மண்ணில் ஒரு தெய்வமென்றால்

மண்ணில் ஒரு தெய்வமென்றால் வேலனன்றி யாருமில்லை
கண்ணாலே கண்ட தெய்வம் வேறில்லையே
கோடிமலை கொண்டவனைத் தேடிவரும் பக்தருக்கு
தந்தையும் தாயுமாகி அருளைக் காட்டுவான்
(மண்ணில்)

கனி வேண்டி தினம் குன்று மலை ஏறினான்
தனி அரசாக ஒரு நாடு உருவாக்கினான்
வேலோடு மயிலேறி அரசாளுவான்
வேரூன்றி வினை நீக்கி நமைத் தேற்றுவான்
(மண்ணில்)

உருவாகும் உயிர் யாவும் அவன் தோற்றமே
ஒவ்வொன்றின் குணந்தானே அதில் மாற்றமே
மாறாத மனம் யாவும் அவன் சுற்றமே
சேராத இனம் கூட அவன் சொந்தமே
(மண்ணில்)

## செந்தூரில் அலையோசை

செந்தூரில் அலையோசை சங்கீதம் - அங்கு
சென்றவர்க்குத் தந்திடுமே அருட் போதம்
சிந்தையினை மயக்குகின்ற சுக நாதம் - மனம்
செம்மைதனை அடைந்திடவே அது போதும்
(திருச் செந்தூரில்)

அந்தமிகு கோபுரமே அல்லலைத் தடுத்திருக்கும்
அங்கு வரும் அன்பருக்கு அருளைக் கொடுத்திருக்கும்
பந்தம் என்ன பாசம் என்ன கந்தன் தாள் துணை இருக்கும்
பதமலர் பணிந்தவர்க்கு எவ்வாறு வினை இருக்கும்
(திருச் செந்தூரில்)



## மூவிரு முகமும் ஆறிருகரமும்

மூவிரு முகமும் ஆறிருகரமும்
முந்தை வினைகளைத் தீர்த்திடுமே
கூரிய வேலும் கூவிடும் மயிலும்
கோரிய வரங்களைச் சேர்த்திடுமே
(மூவிரு முகமும்)

அறுபடை வீடும் அமர்ந்த நல் வடிவும்
அனுதினமே நம்மைக் காத்திடுமே
அகம் புறம் யாவும் இனித்திடச் செய்யும்
அஞ்சுதலே இன்றித் துணை வருமே
துணை வருமே
(மூவிரு முகமும்)

பூவென்ற குணமும் புன்னகை முகமும்
அபயம் தனை தினம் கொடுத்திடுமே
பார் என்ற மனமும் பனிமலர் இதழும்
பரிவையும் பணிவையும் தந்திடுமே

காருண்ய விழியும் கனிந்த நல் பார்வையும்
கல்வியும் புகழையும் பெருக்கிடுமே
பெருக்கிடுமே
(மூவிரு முகமும்)

## துள்ளி வருகுதைய்யா

துள்ளி வருகுதைய்யா வடிவேல் துள்ளி வருகுதைய்யா
- எங்கள்

வள்ளிக் கணவனை வணங்கிடும் அடியார் தம்
வாழ்வினில் சூழ்ந்திடும் வல்வினை மாய்த்திட
(துள்ளி)

வெள்ளிப் பணித்தலை ஈசன் அவன் நெற்றிக் கண்ணில்
உதித்தவராம்
வள்ளல் குணமுடைய செல்வன் கழல் தன்னை வாயாரச்
சொல்பவர்கள்- தம்
அல்லல்கள் தீர்த்திட ஆனந்தம் சேர்த்திட
நெஞ்சில் நிலைத்திட நினைவில் ஜொலித்திட
(துள்ளி)

ஆறுபடை தன்னை நாடும் அடியவர் குறைகளைத்
தீர்ப்பவராம்
ஏறுமயில் ஏறும் வேலன் பதம் தன்னை என்றும்
நினைப்பவர்கள் - தம்
சஞ்சலம் மாற்றிட கங்கணம் போற்றிட
அஞ்சுதல் நீக்கிட மங்களமாக்கிட
(துள்ளி)

## தென் பழனி மலையில் வாழும்

தென் பழனி மலையில் வாழும் தெய்வம் எம் தெய்வம்
தேன் பொழியும் தமிழ்க் குமரன் தெய்வம் எம்
தெய்வம்
வாழ்வு தரும் வடிவேலன் தெய்வம் எம் தெய்வம்
வண்ண மயில் ஏறிவரும் தெய்வம் எம் தெய்வம்
(தென் பழனி)

குன்றுதோறும் விளையாடிய தெய்வம் எம் தெய்வம்
குஞ்சரி குறமங்கயரைத்தான் மணந்த தெய்வம்
கதிர்காமப் பதியில் வாழும் தெய்வம் எம் தெய்வம்
கைலைநாதன் ஈன்ற செல்வக் கண்மணி எம் தெய்வம்
(தென் பழனி)

சூரனை வதைத்த வீர சோதி எம் தெய்வம்
சுட்ட பழம் ஔவைக்கீந்த சுப்ரமணிய தெய்வம்
சித்திரவேல் தாங்கி நிற்கும் திருக்கோவில் தெய்வம்
சித்தாண்டிக் குடியில் வாழும் கந்தன் எம் தெய்வம்
(தென் பழனி)

வணங்கிட நல் வாழ்வளிக்கும் தெய்வம் எம் தெய்வம்
வையமெல்லாம் வாழ்த்தும் கலி வரதன் எம் தெய்வம்
மண்டூரில் வாழும் ஏறு மயிலேறும் தெய்வம்
மாமாங்க ஈஸ்வரனின் மைந்தன் எம் தெய்வம்
(தென் பழனி)

## வேல் முருகா என்றால்

வேல் முருகா என்றால் வினை தீருமே
என்று நான் தேடினேன் உன்னையே அடைந்தேன்
(வேல்)

காலமெல்லாம் உந்தன் நினைவாலன்றோ
கந்தனே கடம்பனே மனம் வாடினேன்
சந்ததம் நெஞ்சில் நீ நிறைவாகியே
இருப்பதை மறந்தே உனைத் தேடினேன் - நீ
(வேல்)

வேதமெல்லாம் உந்தன் மொழியால் அன்றோ
உலகெல்லாம் பரவியே ஒலிக்கின்றதே
உயிர்கள் யாவிலும் நிறைவாகியே
ஜொலிப்பதை மறந்தே உனைத் தேடினேன் - நீ
(வேல்)

## மலை ஏறி உன்னைக்

மலை ஏறி உன்னைக் காண வந்தோம்
மனமுருகி பாடி பாடி நின்றோம்
பன்னீரில் காவடியும் பால்க் குடங்கள் சுமந்தோமே
உனை நாடி தள்ளாடி அரோஹரா என்றோமே
(மலை ஏறி)

பங்குனித் திருநாளில் தேரேறும் உனைக் காண
அங்கத்தில் அலகேந்தி வந்தோம்
திருநீறும் சந்தனமும் துணையாகக் கொண்டோமே
உனை நாடி தள்ளாடி அரோஹரா என்றோமே
(மலை ஏறி)

பன்னிரு கை கொண்டவனே பரமனார் புத்திரனே
உன் பாதம் சரண் புகவே வந்தோம்
ஆறுமுகம் கொண்டவனே திருமாலின் மருகோனே
உனை நாடி தள்ளாடி அரோஹரா என்றோமே
(மலை ஏறி)

## காலையில் குகனை நினைத்தால்

காலையில் குகனை நினைத்தால் அவனே விடியலைக்
கூட்டிடுவான் - பல
நலங்களைத் தருவாய் முருகா என்றால் கருணையைக்
காட்டிடுவான்
(காலையில்)

மாலையில் அவனை நினைத்தால் வந்தே அமுதினை
ஊட்டிடுவான் - நல்
மனதினைத் தருவாய் அழகா என்றால் மந்திரம் கூறிடுவான்
(காலையில்)

நித்தமும் பாடி வருக என்றாலும் மயில் மேல்
தோன்றிடுவான் - தன்
சத்திய வாசகம் சரவணம் கூறி வேலன் வந்திடுவான்
(காலையில்)

## முருகனுக்கெத்தனை அலங்காரம்

முருகனுக்கெத்தனை அலங்காரம் - அவன்
முகத்தில் அழகின் அதிகாரம்
குமரனுக்கெத்தனை அபிஷேகம் - அவன்
கோவிலில் எத்தனை வைபோகம்
(முருகனுக்கு)

பால் தயிர் பழத்தால் அபிஷேகம் - தேன்
பன்னீர் பொழிந்து அபிஷேகம்
நெய்யுடன் சந்தன அபிஷேகம் - கந்தன்
நேர்த்திக்கு வேறேது இணையாகும்
(முருகனுக்கு)

மணிமுடி எங்கும் திருநீறு - மலர்
மாலைகள் சந்தனம் பட்டாடை
அணிமணி நகைகள் ஜவ்வாது - எனும்
அனைத்தும் கந்தனின் அலங்காரம்
(முருகனுக்கு)

வெண்மதி மண்ணில் திகழ்வது போல் - அருள்
மன்னவன் வேலவன் அலங்காரம்
புண்ணியம் செய்தவர் வாருங்கள் - இரு
கண்களும் குளிரப் பாருங்கள்
(முருகனுக்கு)

## பால் தரும் தாய் அப்பா

பால் தரும் தாய் அப்பா பண்பான தந்தை அப்பா
வேலா முருகப்பா வேறென்ன சொல்வேன் அப்பா
(பால்)

அன்பில் நண்பனப்பா அறிவூட்டும் ஆசான் அப்பா
எங்கள் குமரப்பா இன்னும் என்ன சொல்வேன் அப்பா
(பால்)

உதவும் துணைவனப்பா ஓங்காரத் தலைவனப்பா
மலைவாழ் பழனியப்பா மற்றும் என்ன சொல்வேனப்பா
(பால்)

களத்தில் வீரனப்பா கனிவான தெய்வம் அப்பா
என்னுயிர்க் கந்தப்பா எல்லாமும் நீதானப்பா
(பால்)

(முருகா........... முருகா.........)

## மண்ணுக்கும் விண்ணுக்கும்

மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவிருந்து
மனதுக்கம் நினைவிற்கும் வழி திறந்து
கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும்
கந்தனே நீ ஒரு கற்கண்டு

குன்றேறி நின்றாடும் கலை நீயன்றோ
குளிர் வீசி வரும் இன்ப இசை நீயன்றோ
மண் பார்த்துப் பெய்கின்ற மழை நீயன்றோ - என்
மனக் கோயில் ஒளியேற்றும் ஒளி நீயன்றோ
(மண்ணுக்கும்)

பாலுக்குள் நெய்யாகும் பொருள் நீயன்றோ - முருகா
பழத்துக்குள் சேறாகும் சுவை நீயன்றோ
பக்திக்குள் கனிகின்ற கனி நீயன்றோ - தமிழ்
பாட்டுக்குள் பொருளாகும் பொருள் நீயன்றோ
(மண்ணுக்கும்)

## மெல்லச் சிரிக்கும் கந்தன் புன்னகையில்

மெல்லச் சிரிக்கும் கந்தன் புன்னகையில் - எந்தன்
பிள்ளை மனம் பறி கொடுத்தேன்
அள்ளிக் கொடுப்பதில் வள்ளல் அவன் - கவிகள்
ஆயிரம் பாடவைத்துக் கேட்பதில் ரசிகன்
(மெல்லச்)

வள்ளி இளமயிலுக்கு இன்பமாய்
வாய்த்த பெருமை தரும் கட்டழகன்
தெள்ளு தமிழ் அமுதுடன் நல்லிசை
தெளிவு தந்தமைத்த பேராளன்
(மெல்லச்)

வெள்ளை மனம் கோவில் கொள்ளும் மன்னவன்
வெற்றி வடிவேலன் அவன் தென்னவன்
உள்ளமுடன் உயிர் இனிக்கச் செய்தவன்
உவமையில்லா அன் மலர் கொய்தவன்
(மெல்லச்)

## பங்குனியில் உத்திரமாம்

பங்குனியில் உத்திரமாம்
பழனியிலே வைபவமாம்
எங்கெங்கும் முருகனவன் திருநாளாம் - மலை
எல்லாமும் வடிவேலன் தொண்டர்களாம்
(பங்குனியில்)

ஆடியிலே கிரித்திகையாம்
அழகனுக்குக் காவடியாம்
ஏறிவரும் அன்பர் தொகை பல கோடி - அவர்
திருக்குமரன் புகழ் சொல்வார் இசை பாடி
(பங்குனியில்)

ஐப்பசியில் திருவிழாவாம்
அருள் சஷ்ட்டிப் பண்டிகையாம்
கடலாடும் செந்தூரில் கொண்டாட்டம் - எங்கள்
கந்தனுக்கு அபிஷேக வெள்ளோட்டம்
(பங்குனியில்)

தைமாசம் உற்சவமாம்
தைப்பூசக் கோலாகலம்
அடியார்கள் கொண்டுவரும் காவடியாம் - பக்தர்
அடைவதெல்லாம் கந்தனவன் சேவடியாம்
(பங்குனியில்)

## உனைப் பாடும் பாடலுக்கு

உனைப் பாடும் பாடலுக்கு ஈடு இல்லை - முருகா
உன் கோவில் இல்லாத ஊரும் இல்லை
உனை என்றும் வணங்காத நெஞ்சம் இல்லை - அந்த
உள்ளத்தில் ஒரு நாளும் துன்பமில்லை

(உனைப்)

ஆறாகும் உன் எழுத்து மந்திரங்கள் - முருகா
அடியார்கள் மனம் உந்தன் ஆலயங்கள்
ஆறாகும் படைவீடும் உன் இல்லங்கள் - வரும்
அன்பர்க்கு இன்பத்தின் மங்கலங்கள்

(உனைப்)

பன்னீரில் சந்தனத்தில் அபிஷேகமே - அதை
பார்க்கின்ற பெரும்பெறு என் இன்பமே
என்னென்ன திருமேனி அலங்காரமே - அவை
எல்லாமும் காண்பது என் வாழ்வாகுமே

(உனைப்)

அன்பான உமை அன்னை மகிழ் ஐயனே - மின்னும்
பொன் வண்ணக் கதிர்வேலா முருகையனே
உன் பாத நிழல் வேண்டும் செந்தூரனே - தெய்வ
ஒளியாக உருவான வடிவேலனே

(உனைப்)

## காணக் காணக் கண் குளிரும்

காணக் காணக் கண் குளிரும் - எங்கள்
கந்தன் பேரெழில் அலங்காரம்
வானிலும் மண்ணிலும் எங்கும் இல்லை - அந்த
வள்ளலின் புன்னகை சிங்காரம்

(காணக் காண)

தேனை உண்ட உடல் அழகு - அன்று
தினையை உண்ட இதழ் அழகு
மானை விஞ்சிய விழி அழகு - அந்த
மன்னவன் தோற்றம் பேரழகு

(காணக் காண)

நிறைந்த சந்தன நிறத்தழகு - திரு
நீறு மின்னிடும் நுதல் அழகு
குறிஞ்சி மணக்கும் தோள் அழகு - எங்கள்
குமரன் கோலம் பேரழகு

(காணக் காண)

## சந்தன மேடையும் கந்தனின்

சந்தன மேடையும் கந்தனின் மேனியும்
ஒரே நிறம் ஒரே நிறம் - எழில்
குங்குமமும் அவன் குருநகை இதழ்களும்
ஒரே நிறம் ஒரே நிறம்

(சந்தன)

கார்முகில் வண்மையில் கடம்பனின் தன்மையில்
ஒரே நலம் ஒரே நலம் - செங்
கதிரிலும் செவ்வேல் கண்மலர் ஒளியிலும்
ஒரே நலம் ஒரே நலம்

(சந்தன)

அன்புடையோர்களும் அவன் அடியார்களும்
ஒரே இனம் ஒரே இனம் - உயர்
அருள் தரும் ஏடும் அறுபடை வீடும்
ஒரே இனம் ஒரே இனம்

(சந்தன)

பாசத்தில் குழந்தைக்கும் சரவணபவனுக்கும்
ஒரே குணம் ஒரே குணம் - பெற்று
பால் தரும் தாய்க்கும் பழனி அப்பனுக்குமட
ஒரே குணம் ஒரே குணம்

(சந்தன)

## மாணிக்க வேல் ஐயா

மாணிக்க வேல் ஐயா - உன்
காணிக்கை நான் ஐயா
வேடிக்கை உலகையா - துணை
வேறேது கந்தையா
(மாணிக்க)

கோலத்தால் ஆண்டியப்பா - தெய்வ
குழந்தை நீ பழனி அப்பா
வேலப்பா உயிர்களெல்லாம் - உன்
விளையாட்டு பொம்மை அப்பா
(மாணிக்க)

உகந்தை முருகனப்பா - நான்
உன் பிள்ளை குமரப்பா
அகந்தையை நீ அழித்து - மன
ஆறுதலைத் தாருமப்பா
(மாணிக்க)

நான் உனது அடிமை அப்பா - நீ
நமச்சிவாயச் செல்வன் அப்பா
தேன் மணக்கும் மலை அப்பா - உன்
திருவடிகள் துணை அப்பா
(மாணிக்க)

## காண கண்கள் போதாதையா

காண கண்கள் போதாதையா - (உன்னைக்)
மயில் மீது அமர்ந்து வலம் வரும் அழகை நாளும்
(காண)

உனைக் காண வருகின்ற அடியார்களே - உன்
எழில் கோலம் ரசித்து மகிழ்வார்களே
கனிவான விழி கொண்டு மயங்க வைத்து - நீ
கருணையைப் பொழிவாயே அழகா......முருகா.....
உனையே
(காண)

அமுதாக இனிக்கின்ற தமிழாகியே நீ
மொழி பேசும் அழகே அழகாகுமே
மலை மீது தினந்தோறும் நடக்க வைத்து - என்
மனதினில் நிறைகின்றாய் அழகா........ முருகா..... உனையே
(காண)

தினைமாவும் தேனோடு அபிஷேகமே - உனக்கு
அலங்காரம் நடக்கும் தினந்தோறுமே
இளநீரில் பசும்பாலில் உடல் நனைத்தே - நீ
தேரேறி வருவாயே அழகா...... முருகா...... உனையே
(காண)

## சொல்லாத நாளில்லை

சொல்லாத நாளில்லை சுடர் மிகு வடிவேலா (உன்னை)
சுவையான அமுதே செந்தமிழாலே.......... (உன்னை)
(சொல்லாத)

கல்லாத எளியோரின் உள்ளமொரு ஆலயமோ
கழல் ஆறு படை வீடும் நிலையான ஜோதியுன்னை
(சொல்லாத)

இன்பமும் துன்பமும் இணைந்த என் வாழ்வில்
இணை இல்லா நின் திருப் புகழினை நான் பாட
அன்பும் அறநெறியும் அகமும் புறமும் நாட
அரஹர சிவ சுத மால் மருகா என அனுதினமொரு
தரம் ஆயினுமுன்னை
(சொல்லாத)

## திருநீறணிந்தேன் தினம்

திருநீறணிந்தேன் தினம் உன்னைப் பணிந்தேன்
அருளினை வேண்டி அழைத்தேன் முருகா
உனையே நினைத்தேன் வடிவேல் முருகா
உனையன்றி இனியார் துணையாய் வருவார்
(திருநீறணி..)

மலைமகள் ஈன்ற முருகா வருக
அலைமகள் போற்றும் மருகா வருக
கலைகள் யாவையும் எனக்கே தருக
நலமெல்லாம் வாழ்வில் நிலையாய் பெருக
(திருநீறணி..)

ஓம் என்னும் பிரணவப் பொருளினைக் கேட்டு
நான்முகன் தன்னையே சிறையினில் அடைத்து
தான் என்னும் ஆணவம் அகந்தையை அழித்து
ஆனினம் அறிந்திட அணைத்தருள் புரிந்தாய்
(திருநீறணி..)

## முருகா என் முன் வந்துவிடு

முருகா என் முன் வந்துவிடு - அது
முடியா தென்றால் சொல்லி விடு
வந்தால் ஏழை என் கண் குளிரும் - எதைச்
சொன்னால் உன் வரி செவி குளிரும்
(முருகா)

பார்க்கத் துடிக்கும் விழியுண்டு - தொட்டுப்
பழகத் துடிக்கும் மனம் உண்டு
வேல் போல் திகழும் குன்றமெல்லாம் - உன்னைத்
தேடுகின்றேனே நான் இன்று
(முருகா)

வானில் தெரிவது நீலமயில் - அதில்
வந்தால் அதில் உன் மேனி எழில்
காணும் பொருள்கள் எல்லாமும் - என்
கந்தா உனது வடிவாகும்
(முருகா)

அன்னை தந்தை ஆசான் நீ - என்றும்
அருளும் தெய்வம் யாவும் நீ
என்னைத் தனியாய் விட்டு விட்டால் - நான்
எங்கே போவேன் வாராய் நீ
(முருகா)

## ஆறுபடை வீடுடைய

ஆறுபடை வீடுடைய ஆறுமுக வேலனுக்கு
நூறுபடை ஏந்தி வரும் காவடி - அது
நோன்பிருந்து வணங்க வரும் சேவடி
தையில் ஒரு பூசம் உண்டு தமிழ்க் கடவுள் நேசமுண்டு
பையப் பைய நடந்து வரும் காவடி - அது
பால் எடுத்துப் பணிய வரும் காவடி

கந்தனுக்கு வேல்வேல் முருகனுக்கு வேல்வேல்

சிந்துநடைப் பாடம் சொல்லி சித்தனது நாமம் சொல்லி
கந்தன் திருப்பதியில் வரும் காவடி - அது
கார்த்திகையில் காணவரும் சேவடி
அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்ரமணிய தேவனுக்கு
அர்ப்பணங்கள் செய்ய வரும் காவடி - அது
அகம் குளிர பார்க்க வரும் சேவடி

(ஆறுபடை)

சுட்ட திருநீறணிந்து சொக்கன்பிள்ளை பேரணிந்து
எட்டு திக்கும் ஏறிவரும் காவடி - நம்மை
எக்கணமும் காக்கும் அவன் சேவடி
சக்தியுடன் கவசம் சொல்லி சகசமுடன் பதிகம்
சொல்லி
சக்தி மகன் கந்தனுக்குக் காவடி - நம்மை
சந்ததமும் ஆதரிக்கும் சேவடி

(கந்தனுக்கு வேல்....)

## பன்னிரு விழியழகை முருகா

பன்னிரு விழியழகை முருகா பார்த்தால் பசி வருமா -
உன்
பனி மொழி வாய்த் தமிழை முருகா கேட்டால் துயர்
வருமா

(பன்னிரு)

கண் இரண்டிருந் தென்ன உன் கதிர்வேல் அழகைப்
பாராமல்
கால் இரண்டிருந் தென்ன உன் குன்றத்தில் வந்து சேராமல்
(பன்னிரு)

பொன் பொருள் எதற்காக உன் புன்னகை இன்பம்
இல்லாமல்
என் உயிர் எதற்காக உன் இணையடி போற்றிக்
கொள்ளாமல்
(பன்னிரு)

ஓசைகள் எதற்காக ஓம் ஓமென்றொருதரம் பாடாமல்
ஆசைகள் எதற்காக உன் அருள் பெறும் வழியை
நாடாமல்
(பன்னிரு)

## வருகின்றான் முருகன் வருகின்றான்

வருகின்றான் முருகன் வருகின்றான் - இந்த
வையத்தினை மாற்ற வாழும் வழி கூற
(வருகின்றான்)

பெறுகின்ற பொருளாலே பெருமானையே மறக்கும்
பித்தரின் தலைமேலே பிரம்பால் அடித்திடவே
(வருகின்றான்)

துன்பத்தில் அவன் பாதம் நாடிவிட்டு - அவன்
துணையாலே வாழ்வெல்லாம் ஏறிவிட்டு
இன்பத்தில் அவன் நாமம் தன்னை மறைக்கின்ற
ஈனரைப் பதம் பார்க்க இன்றேதான் இறங்கி
(வருகின்றான்)

கடவுள் பெயர் சொல்லி பொருள் சேர்த்து - பின்பு
காணாமல் போகின்ற சிறியோரை
அடையாளமே இன்றி அழித்திடவே - வெகு
ஆவேசமாய் கடம்பை கையோடு கொண்டு
(வருகின்றான்)

## பச்சைக் கலைமயில் ஆட்டம்

தன்னத்தனத்தனதானா தன தானன தானன தானா

பச்சைக் கலைமயில் ஆட்டம் புகழ் பாடும் அடியவர் கூட்டம்
பலர் - படைவீடுகள் அடைவார் கந்தன் அடி சேர்ந்திட
வடிவேல் விழி காட்டும் நலம் கூட்டும்
(பச்சைக் கலைமயில்)

அண்ணல் திருப்புகழ் பாடி அவன் அன்பில் கலந்துறவாடி
ஓம் - முருகா ஓம் முருகா என நிறை காதலில் வருவார்
பலர்
கோடி அருள் தேடி
(பச்சைக் கலைமயில்)

திங்கள் கதிரவன் என்னும் விதம் கந்தன் முகமலர் மின்னும்
அந்த - திருவேரகன் ஒரு பார்வையில் குறை யாவுமே
நிறைவேறிடும்
எண்ணம் அது திண்ணம்
(பச்சைக் கலைமயில்)

முத்து மணித்திரள் போலே வள்ளல் முருகன் சிரிப்பதனாலே
அவன் - முன்வந்தவர் இன்னோர்புறம் செல்லாரென
சொல்லும் அருள் நூறே தரை மேலே
(பச்சைக் கலைமயில்)

## எந்த நிலையிலும் இனிப்பது

எந்த நிலையிலும் இனிப்பது மணப்பது
கந்தன் பெயரல்லவோ - இங்கு
எல்லா உயிருக்கும் நல்லருள் வழங்கும்
வள்ளல் அவனல்லவோ
(எந்த நிலையிலும்)

வளர்ந்தால் கரும்பு பிழிந்தால் சாறு
கொதித்தால் பாகு வடித்தால் வெல்லம்
கசப்பது என்பது கரும்பினில் இல்லை
கந்தனும் அதுபோல் இன்பத்தில் எல்லை
(எந்த நிலையிலும்)

கறந்தால் தீன்பால் உறைந்தால் தயிராம்
கடைந்தால் சுவை மோர் திரண்டால் வெண்ணை
பாலுக்குள் அமைந்தது தீன்சுவை ஒன்றே
வேலவன் அருள்வதும்பேரின்பம் ஒன்றே
(எந்த நிலையிலும்)

துறவில் பழனி உறவில் தணிகை
அழகில் இளமை அறிவில் முதுமை
முருகா எனும் நலம் அடியார் அறிவார்
முருகனைப் பிரிந்தால் அதை யார் தருவார்
(எந்த நிலையிலும்)

## மானோடும் வள்ளி மலை வேல்

மானோடும் வள்ளி மலை வேல் முருகா வேல் வேல்
மயிலாடும் தணிகை மலை வேல் முருகா வேல் வேல்
தேனூறும் பழநிமலை வேல் முருகா வேல் வேல்
தேடி வந்து வணங்குகிறோம் வேல் முருகா வேல் வேல்
(மானோடும்)

கந்தமலை மருதமலை வேல் முருகா வேல் வேல்
கைத்தமலை விராளிமலை வேல் முருகா வேல் வேல்
கழுகுமலை செந்தில் மலை வேல் முருகா வேல் வேல்
கண்டு உனை வணங்குகிறோம் வேல்முருகா வேல் வேல்
(மானோடும்)

உகந்தைமலை கதிரைமலை வேல் முருகா வேல் வேல்
குமரமலை மயிலைமலை வேல் முருகா வேல் வேல்
தாந்தாமலை அண்ணாமலை வேல் முருகா வேல் வேல்
பொருத்தி உனை வணங்குகிறோம் வேல்முருகா வேல்வேல்
(மானோடும்)

பத்துமலை ரத்தினகிரி வேல் முருகா வேல் வேல்
பார்வதிமலை பரங்குன்றம் வேல் முருகா வேல் வேல்
சுவாமிமலை சுருளிமலை வேல் முருகா வேல் வேல்
சுற்றி உன்னை வணங்குகிறோம் வேல்முருகா வேல் வேல்
(மானோடும்)

## படைவீட்டின் சுடர் வேலனே

படைவீட்டின் சுடர் வேலனே - ஞான
பழம் நீயே கதிர் வேலனே
இடர் தீர்க்கும் வடிவேலனே - என்றும்
இன்பங்கள் அருள் ஐயனே
(படை)

அலை மேவும் செந்தூரனே - மின்னும்
அழகான போரூரனே
கயல் பாயும் வயலூரனே - வந்து
கடல் போல அருள் ஐயனே
(படை)

குன்றாடும் குமரப்பனே - நல்ல
குணமோங்கும் முருகப்பனே
அன்பான கந்தப்பனே - இந்த
அடியார்க்கு அருள் ஐயனே
(படை)

உமை அன்னை திருச் செல்வனே - உலக
உயிர் யாவும் தொழும் தேவனே
தேவானை மணவாளனே - உந்தன்
திருப்பாதம் அருள் ஐயனே
(படை)

திருக்கோவில் குமரேசனே - என்றும்
தித்திக்கும் தமிழ் நேசனே
மண்டூரின் முருகேசனே - என்றும்
மங்கலம் அருள் ஐயனே
(படை)

## முருகா என்பது மந்திரம்

முருகா என்பது மந்திரம் - நான்
முதலில் கற்ற மந்திரம்
உருகும் நெஞ்சின் மந்திரம் - என்
உயிரில் கலந்த மந்திரம்
(முருகா என்பது)

ஆறு எழுத்துக்கள் மந்திரம் - அவை
அழகனின் அடிப்படை மந்திரம்
சீராய் அறியார் வாழ்விலும் - நலம்
சேர்க்கும் பெயர்தான் மந்திரம்
(முருகா என்பது)

ஓம் என்னும் பொருள் திரு மந்திரம் - கந்தன்
ஒரு நாள் உணர்த்திய மந்திரம்
மாந்தர்கள் எளிதாய் உணரவே - எங்கள்
மன்னவன் பெயர்தான் மந்திரம்
(முருகா என்பது)

சந்தம் நிறைந்த திருப்புகழ் - அன்று
சாற்றிய அருள் திரு மந்திரம்
அன்றும் இன்றும் கடம்பனை - அன்பர்
அழைக்கும் பெயர்கள் மந்திரம்
(முருகா என்பது)


## மலர் சிறியது அதன் மணம் கொஞ்சமா

மலர் சிறியது அதன் மணம் கொஞ்சமா - கந்தன்
மலை சிறியது பெரும் புகழ் கொஞ்சமா
(மலர்)

குழல் சிறியது அதன் இசை கொஞ்சமா
வறை நிலம் சிறியது நிறை வளம் கொஞ்சமா
(மலர்)

கனி சிறியது அதன் சுவை கொஞ்சமா - வள்ளல்
இதழ் சிறியது நகை எழில் கொஞ்சமா
(மலர்)

சுடர் சிறியது அதன் ஒளி கொஞ்சமா - அண்ணல்
பெயர் சிறியது தரும் பயன் கொஞ்சமா
(மலர்)



## முருகா குமரா அழகா

முருகா குமரா அழகா - உன்
மூவிரு முகம் அழகா - எழில்
மோகன விழி அழகா

ஆடும் மயில் அழகா உன் அருள் வேல்தான் அழகா
தேடும் குறவள்ளி மகள் தெய்வானை பேரழகா
(முருகா)

ஆறுபடை வீடு கொண்ட அதிபதியே அழகா
சூரர் படை மாய்த்த தேவர் தளபதியே அழகா
அறுமுகனே அழகா உகந்தைமலை அழகா
கதிரைமலை அழகா கருணை மயில் அழகா
கந்தன் என்ற பெயர் படைத்த கனகமணித் தேர்அழகா
(முருகா)

தேவர் குலம் காக்க வந்த சிவக் கொழுந்தே அழகா
சேவல் கொடிதான் எடுத்த சிவ வடிவேல் அழகா
கோலமயில் அழகா குறத்தி மயில் அழகா
கொஞ்சு தமிழ் அழகா குளிர் நிலவே அழகா
குமரனென்ற பெயர் படைத்த குறிஞ்சிமலைத் தேர்அழகா
(முருகா)

## வளமான பெருவாழ்வை

வளமான பெருவாழ்வை வடிவேலன் தருவான்
வருந்தாமல் இரு நெஞ்சமே - என்றும்
மயங்காமல் இரு நெஞ்சமே

வேலய்யா சித்திர வேலய்யா
முருகையா மண்டூர் முருகையா

நிலையில்லா வாழ்வை நிரந்தரம் என்றே
அலைவதில் ஆசைதான் மிஞ்சுமே - மாய
வலையென நீ உணர்வாய் நெஞ்சமே

வினைகளை அறுத்தே விடியலைக் காண
வழிவகை தந்திடுவான் வடிவேல் முருகனே

வேலய்யா சித்திர வேலய்யா
முருகையா மண்டூர் முருகையா
(வளமான)

பயன் கருதாமல் திருப்பணி தொடர்ந்தால்
பவ வினை கரைத்திடுவான் கந்தனே - மரண
பயமின்றி வாழ வைப்பான் முருகனே

உனை நீ அறிவாய் உண்மையைக் காண்பாய்
உயிர்களுள் உறைவது முருகன் என்றுணர்வாய்

வேலய்யா சித்திர வேலய்யா
முருகையா மண்டூர் முருகையா
(வளமான)

பாடல் : இரா.தெய்வராஜன்

## சரவணபவ எனும் நாமத்தை

சரவணபவ எனும் நாமத்தைச் சொன்னால்
சகலமும் சேர்ந்திடுமே
கடலெனப் பெருகும் கருணையை வேண்டி
அவர் பெயர் சொல்வோமே - நாமே
அனுதினமும் துதிப்போமே

(சரவணபவ)

நெஞ்சில் அலையும் ஆசையும் அகலும்
மந்திர மொழிதானே - அவனது
மந்திர மொழிதானே
நாளும் தொடர்ந்திடும் நற்பலன் யாவுமே
அவனருள் என்போமே
அந்தகன் தோன்றி அழைத்திடும் போதும்
அவர் பெயர் சொல்வோமே - நாமே
அனுதினம் துதிப்போமே

(சரவணபவ)

விண்ணும் மண்ணும் யாவும் ஒன்றாய்
நிறைந்திடும் ஒலிதானே - நிதமும்
நிறைந்திடும் ஒலிதானே
ஓம் எனும் தாரக மந்திரம் யாவுமே
அவன் தந்த மொழிதானே
உலகினில் நாளும் நலன்களைச் சேர்க்கும்
அவர் பெயர் சொல்வோமே - நாமே
அனுதினம் துதிப்போமே

(சரவணபவ)

## மணிமுடி ஓராறு மலர்விழி

மணிமுடி ஓராறு மலர்விழி ஈராறு
பணிபவர் துணைவரும் உன்னைத் தேடி - வரும்
பக்தர்கள் தொகை பல நூறு கோடி

சிவனுக்கு ஐந்தெழுத்து செல்வனுக்கு ஆறெழுத்து
அவனிக்கு அருள் தரச் செல்லும்பொது - அந்த
பவனியை விளக்கிடப் பாடல் ஏது
(மணிமுடி)

கயிலையில் தாய் இருக்க கண்முன்னே நீ இருக்க
மயிலுடன் உலவிடும் ஆறுவீடு - உன்
மனம்தனில் தொண்டர்க்கு கோடிவீடு
மனம்தனில் தொண்டர்க்கு கோடிவீடு
(மணிமுடி)

கணபதி தலைவாசல் கந்தனுக்கு மலை வாசல்
துணைவியர் இருபுறம் உன்னைச் சேர - உடன்
தொண்டர்கள் பல்லாண்டு வாழ்த்துக் கூற
தொண்டர்கள் பல்லாண்டு வாழ்த்துக் கூற
(மணிமுடி)

## திருநீறு பூசி வந்தோம் முருகா

திருநீறு பூசி வந்தோம் முருகா வேல் முருகா
திருமுகத்தைக் காணவந்தோம் முருகா வேல் முருகா
திருப்புகழைப் பாடி வந்தோம் முருகா வேல் முருகா
திருவடியைச் சேரவந்தோம் முருகா வேல் முருகா

ஆறுபடை வீடு வந்தோம் முருகா வேல் முருகா
அழகுமலை ஏறி வந்தோம் முருகா வேல் முருகா
சேவல் கொடி தேடி வந்தோம் முருகா வேல் முருகா
சேவடியைச் சேர வந்தோம் முருகா வேல் முருகா

சரவணத்தில் மூழ்கி வந்தோம் முருகா வேல் முருகா
சரவணபவ சொல்லி வந்தோம் முருகா வேல் முருகா
புன்னகையைத் தந்து வந்தோம் முருகா வேல் முருகா
பொன்னடியைச் சேர வந்தோம் முருகா வேல் முருகா

கைகூப்பி வணங்கி வந்தோம் முருகா வேல் முருகா
காவடிகள் கொண்டு வந்தோம் முருகா வேல் முருகா
மயிலாட்டம் பார்க்க வந்தோம் முருகா வேல் முருகா
மலர்ப் பாதம் சேர வந்தோம் முருகா வேல் முருகா

## தணிகையை நோக்கிச் செல்லுவோம்

தணிகையை நோக்கிச் செல்லுவோம் - வழி
தவறிய பேர்க்கும் சொல்லுவோம்
மணிமலர் திகழும் அருள் நதி தவழும்
வடிவேல் குமரனின் படை வீடாகும்
(தணிகை)

நான்முகனோடு அகத்தியரும் - சிவ
நந்தியுடன் அந்த இந்திரனும்
நாரத வாசுகி தேவர்களும் - வந்து
நம்பித் தொழுது நலம் பெற்றுத் திகழும்
(தணிகை)

ஷண்முகன் வடிவேல் பெற்ற நிலம் - அன்பு
பொங்கிடும் வள்ளியை மணந்த தலம்
எண்ணிய வண்ணம் இன்பமெல்லாம் - அன்பர்
என்றும் அடையும் கந்தனிடம் - அந்த
(தணிகை)

## முருகா என்னும் நாமம் சொல்ல

முருகா என்னும் நாமம் சொல்லச் சொல்ல
முன்னேழு பிறவி செய்த வினை தீரும்
உருகாத மனமெல்லாம் உருகும் - உள்ளம்
உருகியே நினைவோர்க்கு வளமெல்லாம் பெருகும்
(முருகா)

திரு வேதப் பொருள் கண்ட ப்ரம்மன் - முருகனின்
ஒரு வேதப் பொருளறியா நிலை என்ன என்ன....
அருளாளன் தாள்அன்றித் துணை என்ன (அந்த) -அவன்
திருநாமம் சொல்வோர்க்கு வினை என்ன என்ன
(முருகா)

மலை தன்னை இருகூறாய்ச் செய்தான் - அந்த
மதங் கொண்ட அரக்கரை அடியோடு கொய்தான்
- (உந்தன்)
நிலை தன்னை உயர்த்திட வேண்டு - அவன்
நாமத்தை பக்தியுடன் நாள்தோறும் பாடு
(முருகா)

## அன்னை சொல்லித் தந்தையை

அன்னை சொல்லித் தந்தையை அறிந்தேன்
அனைவரும் சொல்லி உன்னை அறிந்தேன்
என்னுயிர் உடல் பொருள் நீயே முருகா
எண்ணத்தின் ஒளியாய் வருவாய் அழகா
(அன்னை)

ஆசான் சொல்லி கல்வியை அறிந்தேன்
கல்வியினால் உன் பெருமையை அறிந்தேன்
எண்ணின் தொகைகள் உன் அருள் முருகா
எடுத்துச் சொன்னால் விளங்கும் அழகா
(அன்னை)

அறிவால் உலகில் ஆயிரம் அறிந்தேன்
ஆயினும் உனை நான் அன்பால் அறிந்தேன்
அன்பின் கடலே ஐயா முருகா
அடைக்கலம் திருவடி அடைக்கலம் அழகா
(அன்னை)

## பழமுதிர்ச் சோலையில் கூவிடும்

பழமுதிர்ச் சோலையில் கூவிடும் குயில்கள்
- குமரா குமரா எனக் கூவும்
பார்வதி மைந்தனின் - திவ்ய நாமமும் அதனால்
உலகம் மெங்கும் பரவும்
(பழமுதிர்)

சுகந்த மணம் நிறைந்த காற்று அசைக்கும் மரங்களும்
- அதன் பாடல் இசைக்கும்
கதிரவன் ஒளியினைக் கண்டிடும் பனித்துளி கந்தனை
- நினைத்தே உருகும் - அந்த
(பழமுதிர்)

வனத்தில் நிறைந்த மலர்களில் நுழையும்
- தென்றலும் குழல் இசை பொழியும்
மரங்களின் இடையே நிறைந்து வீசும்
- காற்றிலும் மத்தளம் ஒலிக்கும்
(பழமுதிர்)

## படியாய் பிறந்தாலும்

(கோவில்) படியாய் பிறந்தாலும் - சேவல்
கொடியாய் பிறந்தாலும்
பாலன் உந்தன் அருகில் இருக்கும் பாக்கியம்
அடைந்திருப்பேன்

மணியாய் பிறந்தாலும் மேனி அணியாய்ப் பிறந்தாலும்
அழகா உந்தன் மேனியை என்றும் நாடி வந்திருப்பேன்
சுடராய்ப் பிறந்தாலும் கோயில் கதவாய்ப் பிறந்தாலும்
கந்தா உந்தன் காந்த முகத்தினை என்றும் ரசித்திருப்பேன்
(படியாய்)

நீராய்ப் பிறந்தாலும் பூசும் திருநீறாய்ப் பிறந்தாலும்
தினமும் உந்தன் மேனியைத் தீண்டும் இன்பம்
அடைந்திருப்பேன்
மலராய்ப் பிறந்தாலும் வண்ண மயிலாய்ப் பிறந்தாலும்
மலைமகள் மகன் உன் மேனியைத் தீண்டும் மகிமை
அடைந்திருப்பேன்
(படியாய்)

## காவடிகள் எடுத்து வந்தோம் கந்தையா

காவடிகள் எடுத்து வந்தோம் கந்தையா - நாங்க
- எங்க கந்தையா
காவியுடை தரித்து வந்தோம் வேலய்யா
- எங்க வேலய்யா
சேவடிகள் பணிய வந்தோம் முருகையா - நல்ல
- எங்க முருகையா
சேதி ஒண்ணு சொல்ல வேணும் குமரய்யா
- எங்க குமரய்யா
(காவடிகள்)

கட்டழகப் பெட்டகமே கந்தையா - உன்
- எங்க கந்தையா
கருணைமுகம் காண வந்தோம் சுப்பையா
- எங்க சுப்பையா
பன்னீரைச் சுமந்து வந்தோம் முருகையா - எங்க
- எங்க முருகையா
பாவமெல்லாம் தீர்க்க வேணும் பாரய்யா
- முகம் பாரய்யா
(காவடிகள்)

கந்தனுக்கு அரோஹரா
முருகனுக்கு அரோஹரா
கடம்பனுக்கு அரோஹரா
குமரனுக்கு அரோஹரா

ஜவ்வாது கொண்டு வந்தோம் கந்தையா - நல்ல
- எங்க கந்தையா
சந்தனமும் எடுத்து வந்தோம் குமரய்யா
- எங்க குமரய்யா
கடம்பமாலை தொடுத்து வந்தோம் - உனக்கு
கனிவகைகள் படைக்க வந்தோம் முருகையா
(காவடிகள்)

ஆறுபடை வீடு கண்டோம் கந்தையா - உன்
- எங்க கந்தையா
அழகு முகம் பார்த்து வந்தோம் வேலய்யா
- எங்க வேலய்யா
வேறுபடை ஏதுக்கையா முருகையா
- எங்க முருகையா
வேல்ப்படையே போதும் ஐயா குமரய்யா
- எங்க குமரய்யா
(காவடிகள்)

கந்தனுக்கு அரோஹரா
முருகனுக்கு அரோஹரா
கடம்பனுக்கு அரோஹரா
குமரனுக்கு அரோஹரா

கார்த்திகையின் பாலகனே கந்தையா - எங்க
- எங்க கந்தையா
கதிரைமலை வேலனே முருகையா
- எங்க முருகையா
தேடி உன்னைச் சரண் அடைந்தோம் வேலய்யா - ஈழ
- எங்க வேலய்யா
செந்தூரின் ஆண்டவனே குமரய்யா
- எங்க குமரய்யா
(காவடிகள்)

கந்தனுக்கு அரோஹரா
முருகனுக்கு அரோஹரா
கடம்பனுக்கு அரோஹரா
குமரனுக்கு அரோஹரா

வேல் முருகா வெற்றி வேல் முருகா////
- அரோஹரா

## காவடியாம் காவடி கந்தனுக்கு காவடி

காவடியாம் காவடி கந்தனுக்கு காவடி
சேவடியைக் காணவே சேர்ந்து வரும் காவடி
மூங்கிலிலே பட்டுத் துணி கட்டி வைத்த காவடி
முன்னும் பின்னும் மயில்த்தோகை ஆடிவரும் காவடி
எங்கெங்கும் திருநீறு மின்னலிடும் காவடி
எடுக்கும் முன்னே பூசை செய்து தோளில் வைத்த காவடி
(காவடி)

வேண்டுதலைச் சொல்லிவிட்டு வேல் குத்தும் காவடி
வேலனுக்குச் சற்கரையைக் கட்டி வரும் காவடி
பஞ்சாமிர்தம் செய்வதற்கு நெய் கொடுக்கும் காவடி
பழனியப்பன் திருவடிக்கே திரண்டு வரும் காவடி
(காவடி)

பாலகனாம் முருகனுக்கு பாலாலே காவடி
வகை வகையாய் மணம் பரப்பும் பூவாலே காவடி
ஞானப் பழக் குமரனுக்கு பழத்தாலே காவடி
காலமெலாம் காத்தருளும் கந்தனுக்குக் காவடி
(காவடி)

முருகா......................//

## திருமணக் கோலம் பரங் குன்றிலே

திருமணக் கோலம் பரங் குன்றிலே - நீ
ஆண்டியாய் நின்றாய் பழனியிலே
அரசனும் ஆண்டியும் ஊழ்வினைதானென
உணர்த்திடக் கோலங்கள் கொண்டாயோ

(திருமண)

கனி வேண்டி மயில் ஏறும் வடிவாகினாலும்
புவி ஏழும் வலம் வந்து சினம் கொண்டபோதும்
தாய் தந்தை தானே உலகென்று கூறும்
உண்மைக்கு உயிர் தந்து துணை நின்றாய்

(திருமண)

படைவீடு யாவும் உந்தன் உருமாறினாலும்
பரிவோடு நாவில் கூறும் பெயர் மாறினாலும்
சரவணம் கூறும் குருவான போதும்
சகலமும் நீயே என்று வடிவாகினாய்

(திருமண)

## அழகென்ற சொல்லுக்கு முருகா

அழகென்ற சொல்லுக்கு முருகா - உந்தன்
அருளன்றி உலகிலே பொருளேது முருகா
(அழகென்ற)

சுடராக வந்த வேல் முருகா - கொடுஞ்
சூரரைப் போரிலே வென்ற வேல் முருகா
கனிக்காக மனம் நொந்த முருகா - முக்
கனியான தமிழ் தந்த செல்வமே முருகா
(அழகென்ற)

ஆண்டியாய் நின்ற வேல் முருகா - உன்னை
அண்டினோர் வாழ்விலே இன்பமே முருகா
பழம் நீ அப்பனே முருகா - ஞானப்
பழம் உன்னை அல்லாது பழமேது முருகா
(அழகென்ற)

குன்றாரும் குடி கொண்ட முருகா - பக்தர்
குறை தீர்க்கும் வள்ளல் நீ அல்லவோ முருகா
சக்தி உமை பாலனே முருகா - மனித
சக்திக்கு எட்டாத தத்துவமே முருகா
(அழகென்ற)

ப்ரணவப் பொருள் கண்ட திருமுருகா - பரம்
பொருளுக்கு குருவான தேசிகா முருகா
அரஹரா சண்முகா முருகா - என்றே
பாடுவோர் எண்ணத்தில் ஆடுவாய் முருகா
(அழகென்ற)

அன்பிர்க்கு எல்லையோ முருகா - உந்தன்
அருளுக்கு எல்லைதான் இல்லையே முருகா
கண் கண்ட தெய்வமே முருகா - எந்தன்
கலியுக வரதனே அருள் தாரும் முருகா
(அழகென்ற)

## சொல்லச் சொல்ல இனிப்பதொரு மந்திரம்

சொல்லச் சொல்ல இனிப்பதொரு மந்திரம் - அது
சுவாமி நாதன் சுப்ரமண்ய மந்திரம்
நல்ல நல்ல வாழ்வு தரும் மந்திரம் - வள்ளி
நாயகனின் திருப் பெயராய் மந்திரம்
(சொல்ல)

படை வீட்டில் அரசாளும் மன்னவன் - வந்து
பணிவார்க்கு உறவாகும் வேலவன்
திருநீற்றால் நோய் தீர்க்கும் வல்லவன் - அவன்
திசை நான்கும் புகழ்பாடும் நல்லவன் - பெயரைச்
(சொல்ல)

ஆதிசிவன் அன்னை உமை திருமகன் - உயர்
அருள் தெய்வம் திருமாலில் மருமகன்
ஆனைமுகன் கணபதிக்கு இளையவன் - ஸ்ரீ
ஐயப்பன் சுவாமிக்கு மூத்தவன் - பெயரைச்
(சொல்ல)

அருணகிரி உயிர் காக்க வந்தவன் - அன்று
ஔவைக்குச் சுட்ட பழம் தந்தவன்
செருக்கடக்கி சூரப் பகை வென்றவன் - திருச்
செந்தூரன் திருமுருகன் ஆண்டவன் - பெயரைச்
(சொல்ல)

## மலைகள் எத்தனை தெய்வமலை

மலைகள் எத்தனை தெய்வமலை - இந்த
மண்ணில் எங்கும் முருகன்மலை
நிலையாய் நிறைவாய் அருள் வழங்கும் - அந்த
நீல மயிலோன் வாழும் மலை
(மலைகள்)

தண்டபாணியின் பழனி மலை - அன்று
தத்துவம் உரைத்த சுவாமி மலை
வள்ளியை மணந்த தணிகை மலை - சித்தர்
வாழும் பதியாம் மருத மலை
(மலைகள்)

வேண்டுதல் வழங்கும் விராளி மலை
விரும்பித் திரளும் கதிரை மலை
குறைகள் தீர்க்கும் உகந்தை மலை - அவன்
கோவில் திகழும் தாந்தா மலை
(மலைகள்)

## உகந்தை மலை முருகனின் புகழைப் பாடினால்

உகந்தை மலை முருகனின் புகழைப் பாடினால் அகந்தை அழிந்திடுமே
பன்னிருகையோன் பாதம் பணிந்தால் முன்வினை முடிந்திடுமே
தன்னிகர் இல்லா முருகனை நினைத்தால் தன்னலம் அழிந்திடுமே
(உகந்தை)

கந்தபாணந்துறை குமரனைப் பார்த்தால் கவலைகள் மாய்ந்திடுமே
எந்த மனச் சுமையும் கந்தனின் அருளால் எளிதாய் அகன்றிடுமே
செந்தில் வேலனைத் தேடி ஓடினால் சங்கடம் விலகிடுமே
சுந்தர முருகன் சந்நிதி அடைந்தால் சஞ்சலம் மறைந்திடுமே
(உகந்தை)

கதிரைமலையானின் கூர்வடிவேலால் புண்ணியம் சேர்ந்திடுமே
கலியுக வரதன் கார்த்திகேயனால் கண்யம் உயர்ந்திடுமே
செல்வச் சந்நிதி ஆண்டவன் அருளால் செல்வம் செழித்திடுமே
நல்லூர்ப் பதியில் காவடி எடுத்தால் நல்லவை நடந்திடுமே
(உகந்தை)

சூரசம்ஹாரன் சுப்ரமணியனால் சூழ்ச்சிகள் தகர்ந்திடுமே
சரவணபவனின்
ஸஸஸ் சக்திவேலினால் சமத்துவம் நிலவிடுமே
சண்முகநாதன் பாலமுருகனால் சிந்தனை தெளிந்திடுமே
மண்டூர் முருகன் மகிமை கூறினால் மாருதம் வீசிடுமே
(உகந்தை)

## ஈழத்திருச் செந்தூர் வேலன்

ஈழத்திருச் செந்தூர் வேலன் திருக்கோவில் முருகன்
வீதியில் பவனி வந்தான்
ஆடி அமாவாசை நாளில் அலங்கார ரதத்தில்
அழகாய் காட்சி தந்தான்

கார்த்திகைப் பெண்களின் கையில் தவழ்ந்திட்ட
கார்த்திகேயனே சரவணனே
சேவற் கொடியோடு ஆறுமுகம் காட்டி
புள்ளி மயில் மீது அமர்ந்தவனே
பத்மா சூரனை வதைத்து தேவரைக் காத்த
மகிழ்ச்சியில் வலம் வந்தான்

வாகூர மலை பிளந்து வங்கத்தில் வீழ்ந்தெழுந்த
தங்கவேல் தங்கியதோ வெண்ணாவலில்
மண்டூர் வேலனாய் அழகனாய் நல்லூர்க் கந்தனாய்
அமர்ந்தவனும் நீயோ

(ஈழ)

தெய்வானை வள்ளியுடன் கதிர்காமப் பதி உறையும்
தேவ சேனாதிபதியே முருகையா
தாந்தா மலையிலே குமரனாய் உகந்தையிலே - வாழும்
சண்முகனும் நீயோ

(ஈழ)

ஓம் என்னும் தத்துவத்தை எடுத்துரைத்த
சுவாமியே ஸ்ரீஸ்கந்தா வடிவேலா
சித்ரவேலனாய் முருகனாய் சித்தாண்டியில் வதியும்
சிவபாலனும் நீயோ

(ஈழ)

## வருவாய் முருகா வடிவேல் அழகா

வருவாய் முருகா வடிவேல் அழகா வேல் முருகா
குருவாய் என்றும் துணையாய் நிற்பாய் மால் மருகா
அருள்வாய் குமரா கதிர் வேலவனே ஆறுமுகா - உன்னை
நம்பி வாழ்கிறோம் கந்தசுவாமியே வா முருகா
(வருவாய்)

சரவணப் பொய்கையில் நம் சரவணன் தோன்றினான்
பிரம்மனைக் கூடவே வெஞ்சிறையினில் தள்ளினான்
சூரனை வீழ்த்தியே இருபாதியாய் ஆக்கினான்
தேவர்கள் வாழ்ந்திடவே வெற்றி வாகையும் சூடினான்
(வருவாய்)

தினைப் புனம் நாடியே வன வேடனாய் வந்தவன்
நினைத்ததை முடிக்கவே வேங்கை மரமென நின்றவன்
கிழவனாய் மாறியே வள்ளி மனத்தையே வென்றவன்
கஜமுகன் துணையுடனே அன்று கடிமணம் புரிந்தவன்
(வருவாய்)

திருப்புகழ் ஓதுவோம் தீவினைகளை மாற்றுவோம்
திருப்பங்கள் நிகழுமே வாழ்வு வசந்தமாய் மாறுமே
கவசங்கள் பாடினால் கலியுகமுமே இனிக்குமே
சஷ்டியில் நோன்பிருந்தால் தர்ம சங்கடம் விலகுமே
(வருவாய்)

## திருக்கோவில் வேலவன் நீ

திருக்கோவில் வேலவன் நீ சக்தி உமை பாலகன் நீ
தீராத வினை தீர்க்கும் ஷண்முகன் நீ
சித்தாண்டிக் குடியினிலே சிங்கார வேலவன் நீ
சித்தமெல்லாம் நிறைந்த சரவணன் நீ
(திருக்கோவில்)

கதிர்காமக் கந்தனும் நீ கலியுக வரதனும் நீ
கார்த்திகைக் கன்னியரால் வளர்ந்தவன் நீ
உகந்தையில் உறைபவன் நீ அகந்தையைஅழிப்பவன் நீ
ஊழ்வினை கொடியதென்றால் தணிப்பவன் நீ
மண்டூரில் வாழ்பவன் நீ கண் போலக் காப்பவன் நீ
மாமாங்க ஈஸ்வரனின் மைந்தனும் நீ
(திருக்கோவில்)

மாவிட்டபுரத்தினிலே மணிவண்ணன் மருமகன் நீ
வாதிட்ட அசுரனையே வென்றவன் நீ
நல்லூர்ப் பதியினிலே நல்ல குருநாதனும் நீ
வெல்வதற்கு யாரும் இல்லா வல்லவன் நீ
ஐங்கரன் சோதரன் நீ செந்தமிழ்க் காவலன் நீ
சங்கரனின் நெற்றிக் கண்ணில் உதித்தவன் நீ
(திருக்கோவில்)

செல்லச் சந்நிதி வதியும் ஸ்ரீஸ்கந்தசுவாமியும் நீ
அல்லலின்றி வாழும் வரம் தருபவன் நீ
ஔவைக்கு காட்சி தந்து அமுத மொழி கேட்பவன் நீ
அருணகிரி திருப்புகழில் நனைந்தவன் நீ
அறுபடை வீடிருந்தும் அவனியெல்லாம் வாழ்பவன் நீ
அடியார்கள் மனச் சிறையில் நிரந்தரம் நீ
(திருக்கோவில்)

## திருக்கோவில் முருகனுக்கு திருவிழா

திருக்கோவில் முருகனுக்கு திருவிழா
தெய்வானை வள்ளியுடன் மணவிழா
அருட்கோல வேலனுக்கு பெருவிழா - அந்த
ஆறுமுகக் கந்தனுக்கு திருவிழா பெருவிழா
(திருக்கோவில்)

ஆடிமாத தேரினிலே அமர்பவன் - அந்த
அமாவாசை இருளினிலே ஒளிர்பவன்
நாடிவந்து பக்தர்களை காப்பவன்
தேடிவந்து இன்னல்களைத் தீர்ப்பவன் - முருகன்
(திருக்கோவில்)

வீதி வலம் வந்து காட்சி தருபவன் - நல்ல
நீதிமுறை நின்று ஆட்சி புரிபவன்
நாதியற்று நலிந்தவர்க்கும் நல்லவன்
நாவல் மர நிழலினிலே வாழ்பவன் - முருகன்
(திருக்கோவில்)

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## கடற்கரையினிலே...

கடற்கரையினிலே ஞானப் பழமிருக்குது
கந்தபாணத்துறையில் அந்தக் கனி இருக்குது
கழனியிலே வெள்ளை நாவல் கனி இருக்குது - அந்த
கனியினிலே சித்திரவேல் ஒளி தெறிக்குது

வேல் முருகா வேல் முருகா
வா முருகா வடிவேல் அழகா

முருகா என்றே கடலின் அலை முழங்குது - அந்த
முழக்கத்திலே முத்தமிழின் இசை விளங்குது
அருகாக திருமுறையின் கவி முழங்குது - அந்த
அருட்கவியில் அருணகிரி புகழ் விளங்குது

திருக்கோவில் பதியினிலே மணி ஒலிக்குது - அந்த
ஒலியினிலே ஓங்காரப் பொருள் விளங்குது
அருட்கோவில்தனில் ஆறுமுகமிருக்குது - அந்த
ஆறுமுகம் தொழுமடியார் பிணி பறக்குது

பாடல் : சங்கீதபூசணம்சி.கணபதிப்பிள்ளை

## ஈழத்து திருச்செந்தூர்

ஈழத்து திருச்செந்தூர் வேலவா
ஈசன் உமை இளையோனே பாலகா
ஆறுமுகம் காட்டி அருளமுதையூட்டி
ஏறுமயில் மீதமர்ந்து எமைப் பாருமையா

வேழமுகன் சோதரனே முருகா
திருக்கோவில் பதி வாழ்பவனே கந்தா
வா வேலவா வா வண்முகா
தாளலயத்தோடு எந்நாளும் உனைப்பாட
நாவிலருள் நல்கவேண்டும் ஐயா

சோதி வடிவானவனே முருகா - தேவ
நீதியினைக் காத்தவனே கந்தா
வா வேலவா வா சண்முகா
பக்தி ரசத்தோடு எப்போதும் உனை நாட
சக்தியெல்லாம் தாரும் எங்கள் ஐயா

பாடல் : சங்கீதபூசணம்சி.கணபதிப்பிள்ளை

## வெள்ளை நாவல்

வெள்ளை நாவல் மரத்தில் வந்து
வேலாய் நின்றவனே...
கொள்ளை இன்பம் தந்து - எம்மை
நாளும் காப்பவனே
முருகா முருகா முருகா.....

கந்தப்பாணத் துறையோன் என்ற
பெயரைக் கொண்டவனே - அங்கு
தாளம் போட்ட பாட்டி உயிரை
மீட்டுத் தந்தவனே
கொத்துப் பந்தல் கோவில் தன்னில்
கொலுவாய் இருந்தவனே
முத்துப் பவளம் மார்பில் மின்னும்
கந்தா குகனே - ஈழ முத்துப் பவளம் மார்பில் மின்னும்
கந்தா குகனே

வடக்காய் இருந்த வேலைத் திருப்பி
கிழக்காய் வைத்தவனே - அந்த
ஊரின் பெயரை மாற்றி
திருக்கோவில் என்றவனே....
மூர்த்தி தலம் தீர்த்தம் என்று
முறையைக் கொண்டவனே....
கோவில் தன்னில் வாழும்
சித்ரவேலாயுதனே - திருக்கோவில் தன்னில் வாழும்
சித்ரவேலாயுதனே

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

# கற்பூரச் சட்டி கொண்டு

கற்பூரச் சட்டி கொண்டு நேர்த்தி முடித்தேன்
காவடி எடுத்துக் கந்தா உன்னைத் துதித்தேன்
கோலமயில் மீதமர்ந்த பால முருகா
திருக்கோவில் பதி வாழும் சித்திர வேலா

எட்டுத் திக்கும் சொந்தம் கொள்ளும் ஆறுமுகனே -
உந்தன்
பட்டுப் பாதம் தொட்டுக் கொள்ள வா வா குகனே
கிட்ட வந்து எம்மைக் காக்க வா குகனே - நீ
எட்ட நிற்கலாமோ உமையாள் மகனே

ஆனைமுகன் துணை நாடினவனே - வள்ளி
மானையடைய வழி தேடினவனே
ஞாலம் வலம் வந்து நின்ற வேலவனே
திருக்கோவில் தலம் வாழும் சிவனார் மகனே

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## வீரவேல் வெற்றிவேல்

வீரவேல் வெற்றிவேல் ஞான சக்திவேல்
வெள்ளை நாவல் வீற்றிருக்கும் வீர சக்திவேல்
தீரவேல் சித்ரவேல் திருக்கோவில் ஞானவேல்
சூரதாரகன் உடலை துளைத்திட்ட தீரவேல்

வாகூரக் கல் பிளந்த வச்ர ஞான சக்திவேல்
வேல் வேல் வெற்றிவேல்
வேல் வேல் வீரவேல்
வாது செய்யும் அரக்கர் யாக்கை
வாட்டி வெட்டும் வீரவேல்
கந்தவேள் தந்த வேல் ஸ்ரீ சித்ர வேல்

கந்தப்பாணத்துறையமர்ந்த ஞானசக்தி வீரவேல்
வேல் வேல் வெற்றிவேல்
வேல் வேல் வீரவேல்
கன்னி வள்ளி தெய்வயானை காதலுக்கு சொந்தவேல்
கந்தவேள் தந்த ஸ்ரீ சித்ர வேல்

ஐந்துமுகம் தந்த சக்தி ஆறுமுக கந்தவேல்
வேல் வேல் வெற்றிவேல்
வேல் வேல் வீரவேல்
ஆருமற்ற ஏழையர்க்கும் அன்னை தந்தை ஆன வேல்
கந்தவேள் தந்த ஸ்ரீ சித்ர வேல்

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## சித்திரவேல்

சித்திரவேல் தாங்கி நிற்கும்
திருக்கோலம் தான்
தங்கமயில் வீற்றிருக்கும்
எழில் கோலம்தான்
அதிரைக் கடற்கரையின்
அருட்கோவில்தான்
ஆறுமுகன் வாழ்ந்திருக்கும்
திருக்கோவில்தான்.......

அரகரோகரா என்றே பக்த கோடி பாடிடும்
ஆடியமாவாசை அன்று திரள் கூடிடும்
தெய்வயானை வள்ளியுடன் திரு ஊஞ்சல் ஆடிடும்
சேவடிகள் வாழ்கவென்றே மலர் சூடிடும்

சலசலென கடலலைகள் சரணமெனப் பாடிடும்
சரவணபவாய நமோ எனக் கூறிடும்
கலகலென கனகமணி பரதமாடிடும்
கணபதி சகோதரனின் கவி சூடிடும்

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## வாராய் சிவன் மகனே

வாராய் சிவன் மகனே
வரம் தாராய் வடிவேலனே
வெண் நாவல் நிழலினிலே
வீற்றிருக்கும் உமைமகனே
துள்ளி நீயும் ஓடிவந்து
நல்லருள் வழங்கிடவே ஓடி
(வாராய்)

தங்கமயில் மேல் இருப்பவனே
திருக்கோவில் பதியினில் வாழ்பவனே
உன் பார்வையை எம்மீது வீசிடவே - நாம்
பாரினில் உமை என்றும் போற்றிடவே ... ஓடி
(வாராய்)

ஈழத் திருச்செந்தூர் வேலவனே - அந்த
வேழமுகத்தோனின் சோதரனே - உன்
பாதமலர் தன்னை வணங்கிடவே - நாம்
பாமாலை தினம் தினம் சூடிடவே ஓடி
(வாராய்)

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## நினைத்ததெல்லாம் வழங்கிடுவான்

நினைத்ததெல்லாம் வழங்கிடுவான்
திருக்கோவில் முருகன்
நிலையான நலன் தருவான்
திருக்கோவில் முருகன்
அணைத்த கையிலே இருப்பான்
திருக்கோவில் முருகன்
அளைந்து கொஞ்சி அரவணைப்பான்
திருக்கோவில் முருகன்

கனிந்த நறும் கனி தருவான்
திருக்கோவில் முருகன்
கலந்து என்றும் சுகம் கொடுப்பான்
திருக்கோவில் முருகன்
இனித்த நறும் தேன் தருவான்
திருக்கோவில் முருகன்
இணைந்து என்றும் ஆதரிப்பான்
திருக்கோவில் முருகன்

வாசுரக் கல் பிளந்தான்
திருக்கோவில் முருகன்
வரும் வழியில் அமர்ந்து கொண்டான்
திருக்கோவில் முருகன்
வடக்காகத் தானிருந்தான்
திருக்கோவில் முருகன்
கிழக்காகத் திரும்பி விட்டான்
திருக்கோவில் முருகன்

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## சித்திரவேல் கந்தன் கையில்

சித்திரவேல் கந்தன் கையில்
சக்தி வடிவேல் இருக்க
நித்திரையிலும் பயமேன் நீலக் குயிலே
அத்திரைக் கடற்கரையில்
ஆடிக்கடல் பாடிக்கூடி ஆறுமுகா வாழியென்று
நாடியடியார் வணங்கும்....

பக்தரை அணைக்கும் ஞானப்
பால தண்டபாணியென்று
பண் பொருந்த அருணகிரி
பாடல் இசை முழங்கும்
இத்தரையில் தேவர் மூவர்
யாவருக்கும் ஆறெழுத்தின்
தத்துவத்தைச் சொன்ன
சிவன் மைந்தன் வதியும் இந்த

முத்தமிழ் மணக்கும் - திருக்
கோவில் பதி நாடிவந்து
நித்தமும் அருள் வழங்கி
சிந்தை குளிர வைக்கும்
சத்தமிட்டு முழங்கி நிற்கும்
நீலக் கடல் ஓரத்திலே
சந்ததமும் அமர்ந்திருந்து
எங்கள் குறை தீர்க்கும் இந்த

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## உகந்தைமலை வாழும்...

உகந்தைமலை வாழும் முருகா - என்
உள்ளம் குளிர நீ வா வா
அகந்தை இருள் நீக்கும் தலைவா - உன்
அன்புக் கரம் கொண்டு அருள் தா

தங்க மயிலோடு வந்து - அங்கு
பொங்கும் கடலோரம் நின்று - வெண்
சங்கின் ஒலிகேட்டு மகிழ்ந்து - அருள்
தங்குதடையின்றி தருவாய்

உச்சி வெயில் நேரம் வருவேன் - உன்
பச்சை மயிலோடு வருவாய்
பக்தி தலைக்கேறி வருவேன் - நல்
முக்தி என்றும் நீ தருவாய்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## உகந்தைமலை மீதிலாடும்

உகந்தைமலை மீதிலாடும் குழந்தை வேலனே
உன் பாதச் சதங்கையாக நாங்க வாழவேண்டுமே
கடம்பமாலையாக உந்தன் மார்பின் மீதிலே - நாங்க
கிடந்து இன்பம் காணவேண்டும் குழந்தை வேலனே

அழகொழுகும் அருள் நிறையும் அருவி நிறை
சுனையருகில்
அழகு வள்ளி மானைக் கூடும் கருணைநாதனே
பழகுமிசை பண்ணொலிக்கும் பாவலர்கள் உளந்திருந்து
பாருலகை ஆட்சி செய்யும் கருணைநாதனே

தனனதனோம் தகதிமிதோம் தகிடத்திமி என நடிக்கும்
தங்கமயில் மீதிலாடும் கந்தநாதனே
தேவ சரவண ஓம் சரணமென அனுதினமும் பாடியாடி
தாள்பணியும் என்னுயிரின் சொந்த நாதனே

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## சுந்தர மலை

உகந்தைமலை முருகன் உறைந்த மலை - நாளும்
உமைமகனின் விளையாடல் நிறைந்த மலை
சுகந்தைமலை சுகம்தரும் குமரன் மலை - அடியார்
துணைவருடன் துதிபாடும் சுந்தரமலை

அகந்தையில்லா குழந்தைகளை அழைக்கும் மலை - முருகன்
அடியவர்கள் மனம் மகிழ்ந்து துதிக்கும் மலை
சுகந்தம் நிறை திருமணத்தை விளைக்கும் மலை - ஞான
சுடர் வடிவேல் குமரனுடன் நிலைக்கும் மலை

மானினமும் மயிலினமும் ஆடும் மலை - முருகன்
வள்ளியுடன் மனம் மகிழ்ந்து கூடும் மலை
தேனிலவும் தென்றலிசை பாடும் மலை - ஞான
தெள்ளு தமிழ் தேனருவி ஓடும் மலை

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## கந்த வேலா

உகந்தைமலை உறைந்த கந்த வேலா
உந்தன் குழந்தை என் துயர் களைந்து வாழ வா வா
அகந்தை கொண்ட அசுரர் படைகள் வீழ - வெற்றி
வேலை ஏந்தி நீ ஓடி வா வா

கலியுகத்தில் அரசாளும் வேந்தனே - எந்தன்
கருணைமிக்க கடவுளே ஸ்ரீ காந்தனே
பழியுகத்தை அழிவு செய்யும் சேந்தனே - தேவ
பகை முடித்த தீரனே ஏகாந்தனே

உனையன்றி தஞ்சம் யாரையா - உந்தன்
உளமிரங்கி ஏழை என்னைப் பாரையா
அன்னை தந்தையாகி வந்து காரையா - உந்தன்
அருள் தந்து வாழ்வில் இன்பம் சேரையா

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

# காடுகள் கந்தனின்

காடுகள் கந்தனின் கதை கூறும் - மணல்
மேடுகள் வேலனின் அருள் கூறும்
நீரோடைகள் முருகனின் துதிபாடும்
வண்ண மாமயில் குமரனை தினம் தாங்கும்

கடலலை அழகனைத் தாலாட்டும் - தமிழ்
கடவுள் அவனெனப் பாராட்டும்
குயிலினம் குமரனைச் சீராட்டும் - வள்ளி
மயிலினின் திருமகன் எனப் போற்றும்

பறவைகள் பாலனை நீராட்டும் - அவை
பலவித மொழிகளில் ஓராட்டும்
கழனிகள் கலியுகன் புகழ்பாடும் - உகந்தை
மலையினில் எப்போதும் ஒளி வீசும்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## உறக்கம் வரவுமில்லை

உறக்கம் வரவுமில்லை - அவனை
மறக்கவும் முடியவில்லை - விட்டு
இருக்கவும் இயலவில்லை - இது
ஏனென்று தோன்றவும் இல்லை இல்லை....... எனக்கு

பறக்கவும் சிறகு இல்லை - முருகனை
பணியவும் உறவும் இல்லை
வெறுக்கவும் முடியவில்லை - நினைவை
துறக்கவும் துணிவும் இல்லை

நெஞ்சில் வஞ்சம் இல்லை - முருகனை
நினைக்கையில் துன்பம் இல்லை
கெஞ்சலில் குறைவுமில்லை - அவனை
கொஞ்சவும் முடியவில்லை

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## அரோகரா ஆறுமுகா

அரோகரா ஆறுமுகா அரோகரா ஆறுமுகா
கந்தன் மகிழும் மகிழும்மலை உகந்தை - அவன்
காதல் விளையாடும் மலை உகந்தை
திருக் கார்த்திகேயன் வள்ளியுடன்
தீர்த்தமாடியே களிக்கும் உகந்தை ஞான சுகந்தை

அத்திமுகன் சித்தமுடன் வாழும் - இங்கு
ஆவலுடன் மானினங்கள் சூழும் - தினம்
அரோகரா ஆறுமுகா அரோகரா ஆறுமுகா
ஆடுமயிலோடு பெடை கூடி உறவாடி அன்பாய் வாழும்
இன்பம் நாளும்......

சித்த வேதர் தெய்வ மலர் கொண்டு - கந்தன்
சேவடிக்கு நாளும் செய்வார் தொண்டு
அரோகரா ஆறுமுகா அரோகரா ஆறுமுகா - அன்னை
தெய்வயானை வள்ளியுடன் சேர்ந்திருக்கும் காட்சிதனைக் கண்டு
இன்பம் கொண்டு

பாடல் : சங்கீதபூசணம்.சி.கணபதிப்பிள்ளை

## ஆடியமாவாசை வேலவா

ஆடியமாவாசை வேலவா - உனை
பாடி நாடும் பக்தருக்கு
ஓடி வந்து அருள் வழங்கும்
ஆடியமாவாசை வேலவா
தேடியுந்தன் தலத்தில் வந்து
தீர்த்தமாடி துதிக்கம்போது
நாடி வந்து நலன்கள் தந்து அன்பு கொண்டு
அரவணைக்கும்.........

எட்டுத் திக்கு பக்தர்களும்
முட்டி மோதும் திருவிழாதான்
பட்டுச் சாற்றிப் பார்த்து உன்னை
கட்டிக் காக்கும் பெருவிழாதான்
சரவணனே சண்முகனே சக்தியுமை இளையவனே......

வம்மி மர நிழலினிலே
வந்து கூடும் அடியவர்க்கு
இம்மிகூட இன்னல் வந்து
ஏற்படாமல் காத்து நிற்கும்
நாயகனே தூயவனே ஆதிசிவன் பாலகனே......

சூரனையே கொன்றொழித்து
தேவர்களைக் காத்து நின்றாய்
ஆடித் தேரில் அமர்ந்திருந்து
வீதியுலா செல்லுகின்றாய்
மால்மருகா வேல்முருகா தங்கமயில் மீதமர்ந்த....

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

# உந்தன் சந்நிதியில்......

உந்தன் சந்நிதியில் உருண்டு பிரண்டு நான்
நேர்த்தி முடிக்க வேண்டும்
உள்ளமுருகி நான் உன்னை நினைத்துத்தான்
பாட்டுப் படிக்கவேண்டும்
திருக்கோவில் முருகனே சித்ரவேலின் முதல்வனே
திருக்கோவில் முருகனே சித்ரவேலனே
தீர்த்தமாடவேண்டும் உன்னை பார்த்துப் பேசவேண்டும்

ஆடித்திங்களில் அமாவாசையில்
ஓடியோடி வரவேண்டுமே - உனை
பாடிப்பாடி அழவேண்டுமே
காவடி எடுத்து கற்பூரம் ஏந்தி
பூவடி தொழுதிட வேண்டுமே - உன்
சேவடி பணிந்திட வேண்டுமே
முருகா முருகா முருகா முருகா

அடியார்களோடு அமர்ந்து இருந்து - உன்
அழகை ரசித்திட வேண்டுமே - உன்
அருளை ருசித்திட வேண்டுமே
தோளில் சுமந்து வீதியில் நடந்து
கோபம் தணித்திட வேண்டுமே - என்
பாவம் தொலைத்திடவேண்டுமே
முருகா முருகா முருகா முருகா.......

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## புலம் பெயர்ந்து....

புலம் பெயர்ந்து நாங்களெல்லாம் வாழ்ந்திருந்தாலும்...
சித்திரவேல் முருகன் உன்னை நாம் மறவோமே....
தாய் நிலத்தை விட்டு நாங்களெல்லாம் பிரிந்திருந்தாலும்
திருக்கோவில் முருகன் உன்னை நாம் மறவோமே...
இங்கிருந்து பாடினாலும் எங்கள் நெஞ்சம் அங்குதான்
அங்கிருக்கும் முருகன் உந்தன் அருள் எமக்கு இங்குதான்

நீலக்கடல் அலைகளிலே கால் நனைத்து நின்றோம் - உன்
கோவில் மணி ஓசை கேட்டு கும்பிடுகள் போட்டோம்
திருவிழாக்கள் நடக்கும்போது உன் திருமுகத்தைப் பார்த்தோம் - நீ
திருவுலாவில் வரும்பொழுது எங்களையே மறந்தோம்
நாங்கள் எங்களையே மறந்தோம்

வம்மிமரக் கொப்பினிலே ஊஞ்சல் போட்டு பறந்தோம்
இம்மிகூட கவலையின்றி எங்களூரில் திரிந்தோம்
நம்பி உன்னை நாளும் பொழுதும் இங்கு வாழுகின்றோம் - மனம்
வெம்பி வெம்பி உனை நினைத்து நாங்கள் பாடுகின்றோம்
நாங்கள் உன்னை பாடுகின்றோம்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## அரோகரா என்று சொல்லுங்க

ஆரோஹரா....... ஆரோஹரா......
ஆரோஹரா என்று சொல்லுங்க - நீங்க
ஆறுமுகன் சொந்தக்காரனுங்க...
ஆடியமாவாசை தானுங்க - அவன்
ஆலயத்தில் ஒன்று கூடுங்க
வந்து பாருங்க இதயத்தை தந்து பாருங்க
சித்திர வேலாயுதனை கண்டு செல்லுங்க

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி நின்றீங்க
போடாத வேஷமெல்லாம் போட்டு நின்றீங்க
தேடாத தெய்வமெல்லாம் தேடி நின்றீங்க
தேடி வந்த முருகனையே நாடி நில்லுங்க
வந்து பாருங்க இதயத்தை தந்து பாருங்க
சித்திர வேலாயுதனை கண்டு செல்லுங்க

பட்ட துன்பமெல்லாம் பறந்து போகுங்க
கெட்ட குணங்களெல்லாம் மாறிப் போகுங்க
நல்லவழி காட்டுபவன் முருகன் தானுங்க
அந்தவழி வேண்டுமென்றால் வந்து பாருங்க
வந்து பாருங்க இதயத்தை தந்து பாருங்க
சித்திர வேலாயுதனை கண்டு செல்லுங்க

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

# அழகு திருக்கோவிலிலே

அழகு திருக்கோவிலிலே
ஆடியமாவாசையிலே
அடியவர்கள் கூடுகிறார்கள்
அழகனவன் முருகன் என்றும்
அம்பிகையின் குமரன் என்றும்
உளமுருகிப் பாடுகிறார்கள் - அவன்
அருளதனை நாடுகிறார்கள்

காவடி எடுத்தவர்கள் கற்பூரம் எரித்தவர்கள்
பூவடியைத் தேடுகிறார்கள் - கந்தன்
பூவுடியைத் தேடுகிறார்கள்
தேரிழுத்து நின்றவர்கள் தேவாரம் படித்தவர்கள்
சேவடியை நாடுகிறார்கள் - முருகன்
காலடியில் கூடுகிறார்கள்

விரதம் இருந்தவர்கள் விம்மி விம்மி அழுதவர்கள்
வீதியுலா காணுகிறார்கள் - வேலன்
வீதியுலா காணகிறார்கள்
வினைகள் நிறைந்தவர்கள் விக்கினங்கள்
கொண்டவர்கள்
வேலினைப் பூஜிக்கிறார்கள் - முருகன்
தாளினையே நேசிக்கிறார்கள்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

# காவடி எடுப்பதில்லை

காவடி எடுப்பதில்லை கற்பூரம் எரிப்பதில்லை
சேவடி தஞ்சமென்று சேவை செய்கிறேன்
காலடி கொஞ்சும் மண்ணை நாடி வருகிறேன்
தேங்காய் உடைப்பதில்லை தேவாரம் படிப்பதில்லை
எங்குமே நிறைந்தவனாய் உன்னைப் பார்க்கிறேன் - நீ
தங்கமயில் ஏறி வரும் காட்சி காண்கிறேன்
முருகா முருகா நீ வருவாய் முருகா
முருகா முருகா திருக்கோவில் முருகா

ஆரத்தி எடுப்பதில்லை அர்ச்சனைகள் செய்வதில்லை
ஆபத்தில் உதவி செய்ய விரைந்து செல்கிறேன்
மற்றவரை மகிழ வைத்து உன்னை ரசிக்கிறேன்
விரதங்கள் இருப்பதில்லை வேண்டுதல் செய்வதில்லை
பசியெனக் கேட்பவர்க்கு உணவு தருகிறேன்
பசிப்பிணி மருத்துவனாய் உன்னை பார்க்கிறேன்

மந்திரங்கள் சொல்வதில்லை மன்றாடிக் கேட்பதில்லை
தாய் தந்தை தெய்வமென்று அரவணைக்கிறேன்
தானதர்மம் செய்து வாழ்வை வென்று வருகிறேன்
தீயில் நடப்பதில்லை தீட்சையும் பெற்றதில்லை
நோயில் வீழ்ந்தவரை தேற்றி வருகிறேன்
நோய் தீர்க்கும் வைத்தியனாய் உன்னைப் பார்க்கிறேன்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## சொல்லாலாகுமா

சொல்லாலாகுமா அதை சொன்னால் புரியுமா
வேல்முருகன் புகழைச் சொல்ல என்னால் முடியுமா
சித்திர வேலனாக திருக்கோவில் பதியிருந்து
நித்தமும் அருள் புரியும் வெள்ளை நாவல் வேலவனை.....

ஆடித் திங்களில் அவன் வருவான் தெரு உலா
அமாவாசை இருளிலும் அவனுக்குத்தான் பெருவிழா
அடியார்கள் மனங்களில் என்றென்றும் ஒருவிழா
ஆண்டாண்டு காலம் வரும் ஆறுமுகன் திருவிழாவை......

உகந்தையில் இருப்பவன் கதிரமலையை ஆழ்பவன்
அகந்தை அழித்தவன் அசுரனையும் அணைத்தவன்
சேவற் கொடியுடனே புள்ளி மயில் ஏறுவான்
சேயோனாய் காட்சி தந்து சங்கடங்கள் தீர்ப்பவனை.....

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## வங்கக் கடலிலே

வங்கக் கடலினிலே வருடத்துக் கொருதடவை
தந்தையை இழந்தவர்கள் நாங்கள் தீர்த்தம் ஆடுகிறோம்
சித்திர வேலனையே சிந்தையில் நினைத்தபடி
ஆடித் திங்களிலே அவன் புகழ் பாடுகிறோம்

அலையலையாக அடியவர் கூட்டம்
ஆடுதுபார் கடலலையிலே தீர்த்தம்
தொலையிது எங்கள் பிணிகள் - விட்டு
மறையிது எங்கள் குறைகள்
அம்பிகை பாலன் அருள் மிகு முருகன்
நம்பிக்கையாக நலமே தருவான்

வீதிகள் தோறும் காவடியாட்டம்
நடக்குதுபார் இது முருகனின் கோட்டம்
அடியார் எங்களை அழைக்கின்றார் - நல்ல
அமுது தந்து மகிழ்கின்றார்
திருக்கோவில் முருகன் திருத்தலம் வந்து
தீர்த்தம் ஆடி செல்கின்றோம்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## தங்க முருகா

தங்க முருகா சித்திர வேலா
எங்களூரில் வந்த பாலா
வெள்ளை நாவலில் உந்தன் வேலா
கொள்ளை அழகு கொண்ட பாலா
கங்கையாடி வந்த நேசா
மங்கைமாரி அம்மனின் தாசா

அரசர்கள் மானியம் வழங்கிய பதியம்
திருப்படைகளிலே முதற்படை உனதாம்
அசுரரை அழித்தபின் வடக்கிருந்தாயாம்
அமைதியடைந்த பின் கிழக்கிருந்தாயாம்

கருவறைதனிலே கடலலை அடிக்கும்
கடலலைதனிலே கதிரொளி தெறிக்கும்
அழகிய மயில் உனை அருகினில் ரசிக்கும்
பழகிய குயில்களும் பறந்துனை துதிக்கும்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## துன்பங்களைத் தீர்ப்பவனே

துன்பங்களைத் தீர்ப்பவனே - என்றும்
துணையாக வருபவனே
நலம் தந்து காப்பவனே - வெள்ளை
நாவலில் அமர்ந்தவனே
சித்திர வேலவனே - எங்கள்
திருக்கோவில் ஆண்டவனே

அதிகாலை நேரம் சுதி சேர்த்து உன்னை
திருப்பள்ளி எழப் பாடுவேன்
அதுகேட்டு எழுந்து கவி பாடும் என்னை
பணிவோடு பார்ப்பாயா
அமாவாசை இருளில் ஒளி தந்து என்னை
வழிகாட்டி செல்வாயா - தீய
வினைமாறச் செய்வாயா

உள் வீதி வந்து அண்ணனை வணங்கி
உன்னருகில் நான் வருவேன்
உளமாற என்னை ஒரு பார்வை பார்த்தால்
இடையூறை நான் தாண்டுவேன்
கடல் தீர்த்தம் ஆடி அலை மீது நின்று
அருட்காட்சி தருவாயா - மன
இருள் மாறச் செய்வாயா

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

# ஊரெல்லாம் சுற்றி வந்த சூரன்

ஊரெல்லாம் சுற்றி வந்த சூரன் - தன்னை
யாரென்று காட்டிவிட்ட வீரன்
கோவிலடி வீதியிலே வந்துவிட்டான்
போர்புரிய ஆயத்தங்கள் பண்ணிவிட்டான்
சஷ்டி அறும் நேரம் சக்தி மகன் வெல்வான்
சகலருக்கும் முருகன் சித்தியினைத் தருவான்

மூன்றாம் வீதியிலே மக்கள் கூட்டம் கூடிவிடும் - முருகன்
உள்வீதி சுற்றிவர அது அவனை நாடிவிடும்
சூரனையும் ஒரு கூட்டம் சூழ்ந்திருக்கும் - அவன்
சூட்சுமங்கள் அறிந்திடவே பாத்திருக்கும்
ஆனைத் தலையுடனே சூரனிருப்பான் - அவன்
அண்ணன் கணபதியாய் உருவெடுப்பான்
சஷ்டி அறும் நேரம் சக்தி மகன் வெல்வான்
சகலருக்கும் முருகன் சித்தியினைத் தருவான்

அரோஹர ஒலியுடனே சூரன் எழுந்திடுவான் - தலை
ஆட்டியாட்டி வீதியெல்லாம் சுற்றி சுற்றி அவன் திரிவான்
அறுமுகனை அண்டி வந்து போர் புரிவான் - முருகன்
அறுத்திடுவான் அவன் தலையை ஓட்டம் பிடிப்பான்
ஞாலங்கள் காட்டியே சூரன் வருவான் - முருகன்
ஜாளித் தலையினையும் கொய்துவிடுவான்
சஷ்டி அறும் நேரம் சக்தி மகன் வெல்வான்
சகலருக்கும் முருகன் சித்தியினைத் தருவான்

தன் தலையும் அறுபட்டு நிற்கதியாய் நின்றிருப்பான் - சூரன்

தந்திரங்கள் புரிந்திடவே தருணத்தைப் பார்த்திருப்பான்
மாமியார் மூலைக்குள் அவன் வருவான் - தன்னை
மாங்கொத்துக்குள் மறைத்து போர் புரிவான்
மால்மருகன் மனசுக்குள்ளே சிரிப்பான் - அவனை
சேவலும் மயிலுமாகவே சேர்ப்பான்
சஷ்டி அறும் நேரம் சக்தி மகன் வெல்வான்
சகலருக்கும் முருகன் சித்தியினைத் தருவான்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## கந்தசஷ்டி நாயகனே

கந்தசஷ்டி நாயகனே கணபதியின் சோதரனே
சித்திரவேல் தாங்கி நிற்கும் சக்தியுமை பாலகனே
திருக்கோவில் ஊரினிலே அருளாட்சி செய்பவனே
வருமடியார் துயரங்களை கருக வைக்கும் காங்கேயனே
திருக்கோவில் வேலவனே..... திருக்கோவில் வேலவனே

பட்டதெல்லாம் போதுமையா பன்னிருகை வேலவனே
பக்தர்களின் வேண்டுதலை தீர்த்து வைக்கும் சத்கருவே
திருக்கோவில் வேலவனே..... திருக்கோவில் வேலவனே

வல்லரக்கன் பத்மா சூரன் உடல் கிழித்த சம்ஹாரனே
கல்லான உள்ளத்தையே கசிந்துருக வைத்தவனே
திருக்கோவில் வேலவனே.... திருக்கோவில் வேலவனே

பாடல் : இரா.தெய்வராஜன்

## அந்நியனின் தேசத்திலே

அந்நியனின் தேசத்திலே
அழுதழுது பாடுகின்றேன்
திருக்கோவிலிலே எதிரொலிக்குமா
சித்ர வேலவனின் காதில் கேட்குமா

கந்தசஷ்டி விரதத்தையே
காலமெல்லாம் பிடிக்கவேண்டும்
கந்தனது கருணையினை
சந்நிதியில் காணவேண்டும்
சூரனையே சாய்தவன்தானே - முருகன்
ஆனைமுகன் சோதரன்தானே

ஆழியலை அடித்தபோதும்
அப்படியே தானிருந்தான்
அலைகடலும் மேவிச் சென்றும்
அசையாமல் அவனிருந்தான்
அற்புதத்தின் உச்சமல்லவா - வேலன்
பொற்பதமே தஞ்சமல்லவா

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## சூரனை அழித்து...

சூரனை அழித்து தேவரைக் காத்த
வீரவேல் தாங்கும் பதியாம்
வெள்ளை நாவல் மரம் நின்ற பதியாம்
திருக்கோவில் பெயர் கொண்ட பதியாம்
நாகர் முனை என்ற ஊரினிலே
கந்தப் பாணத்துறை திருத்தலமாம்
கிழக்குமுகம் கோவில் திரும்பியதால்
திருக்கோவில் என்று மாறியதாம்

மூர்த்தி தலம் தீர்த்தம் வாய்ததினால் - இது
கீர்த்தி மிக்க தலமானதாம்
நீலக் கடலோரம் இருப்பதனால் - இது
ஈழ செந்தூராய்ப் போனதாம்
வரலாறு கண்டதிந்த வேல்முருகன் கோவில்
வந்தாரை வாழவைக்கும் எங்கள் திருக்கோவில்

பலவூரும் திருப்பணி செய்வதனால் - இது
தேசத்துக் கோவிலாய் உயர்ந்ததாம்
அரசர்கள் மானியம் வழங்கியதால் - இது
திருப்படைக் கோவிலாய் சிறந்ததாம்
வரலாறு கண்டதிந்த வேல்முருகன் கோவில்
வந்தாரை வாழவைக்கும் எங்கள் திருக்கோவில்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## அழகு தமிழ் சொல்லெடுத்து

அழகுதமிழ் சொல்லெடுத்து
அனுதினமும் உனை நினைந்து
அறுமுகனே உனைத் தேடுவோம் - நாம்
வறுமையிலும் உனைப் பாடுவோம் - முருகா
மறுமையிலும் உனை நாடுவோம்

சூரனை வதம் செய்து சுடராக வந்தமர்ந்த
வேலினை நாம் துதிப்போம் - உந்தன்
தாளினை நாம் பணிவோம்
ஆறிரு கண்களிலே ஓரிரு கண் பார்த்தால்
எங்களின் துயர் தீருமே - உலகில்
உன்னருள் புகழ் வாழுமே

உகந்தையிலும் இருப்பாய் மண்டூரிலும் இருப்பாய்
அகந்தையை நீ அழித்தாய் - அந்த
அசுரனையும் ஒழித்தாய்
ஆறுதினம் கந்தசஷ்டி விரதம் இருந்தோமப்பா
ஏறுமயில் மீது வருவாய் - வந்து
எங்களையே காத்து அருள்வாய்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## வண்ணக் குடை பிடித்து

வண்ணக் குடை பிடித்து
எண்ணங்களை நன்கறிந்து
வெள்ளைக் குதிரையிலே வாறான் - மனதை
கொள்ளை கொண்டே வேலன் போறான்

தென்னைகள் சூழ்ந்திருக்கும்
திருக்கோவில் பதியினிலே
தன்னந் தனிமையிலே வந்தான்
சித்ர வேல் வீசி சூரனையே வென்றான்
சேவலும் மயிலுமாக மாற்றி அவனை
தன்னருகே வைத்துக் கொண்டான் - முருகன்
பகைவனையும் அணைத்துக் கொண்டான்

ஆறுதினம் கந்தசஷ்டி அனுஷ்டிக்கும் பக்தருக்கு
ஆறுதலை என்றும் தருவான் - முருகன்
அனைவரிலும் கருணை பொழிவான்
வீதியில் எழுந்தருளி வருவான் அவன்
ஆரோஹரா ஒலியினிலே மிதப்பான் - முருகன்
அடியார்களை நோக்கி அழைப்பான்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## கந்தபுராணம் கேட்பவர்க்கெல்லாம்

கந்தப்புராணம் கேட்பவர்க்கெல்லாம்
கந்தனின் அருள் கிடைக்கும்
சஷ்டியில் விரதம் இருப்பவர்க்கெல்லாம்
கைமேல் பலன் கிடைக்கும்
சுந்தர முகத்தான் சுப்ரமணியனை
வந்தனை செய்பவர்க்கு
முந்தைய வினைகள் முற்றிலுமகன்று
சிந்தை தெளிந்து விடும்

சரவணபவனாம் சங்கரன் புதல்வன்
சங்கடம் தீர்த்திடுவான்
சித்திரவேலன் திருமால் மருகன்
சித்திகள் தந்திடுவான்
பக்தியுடன் அவன் பதமலர் பணிந்தால்
நித்திய வரம் அருள்வான்

சக்தி வழங்கிய வேலினை எறிந்தே
சூரனின் உடல் கிழித்தான்
சஷ்டி அறுந்ததும் சங்கார வேலன்
சமசரம் ஆகிக் கொண்டான்
சேவலும் மயிலுமாய் அசுரனை மாற்றி
தன்னுடன் சேர்த்துக் கொண்டான்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## திருமாலின் மருகனே

திருமாலின் மருகனே திருக்கோவில் வேலவனே
அருமருந்தே பிணியை தீருமையா
உமையாள் மைந்தனே ஐங்கரன் சோதரனே
எமைக் காக்க இங்கு வருவாயையா

வாகூர மலை பிளந்து வங்கத்தில் நீராடி
நாவல்பதி அமர்ந்த குருபரனே
சேவற் கொடி வீரனே - முருகா
திருவடி நிழல் தா ஐயா

சூர சம்ஹார சுப்ரமணிய தேவா
சரவணபவ என்னும் ஆறுமுகா
சரணடைந்தோம் சண்முகா - வேலா
தடைகளைத் தடுப்பாய் ஐயா

பாடல் : இரா.தெய்வராஜன்

## திருக்கோவில் முருகனை

திருக்கோவில் முருகனையே தினம் துதித்தாலே
தீராதோ வினைகளெல்லாம் - நல்ல
தேனாலும் பாலாலும் அபிசேகம் செய்தாலே
போகாதோ குறைகளெல்லாம் - வந்து
சேராதோ நலன்களெல்லாம்

கதிரமலை மீதிருந்து கனகமயில் மீதமர்ந்து
கடல்வழியே நீ வருவாய் - இதை
கண்டவர்கள் சொல்வதுண்டு
கந்தனை புகழ்வதுண்டு
அதிசயமாய் நீ இருப்பாய் - நல்ல
அதிசயமாய் நீ இருப்பாய்
மால்மருகா அருள் தருவாய்
வேல்முருகா இன்ப தமிழ் தருவாய்

ஆடியமாவாசையிலே அடியவர்கள் துயர் துடைக்க
அமர்ந்தாயே தேரினில் - உனை
பாடிவரும் பக்தருக்கு
பாவ வினை அறுத்து - அருள்
புரிந்தாயே ஊரினிலே
மால்மருகா அருள் தருவாய்
வேல்முருகா இன்ப தமிழ் தருவாய்

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## தேரோடும் திருக்கோவில்

தேரோடும் திருக்கோவில் தேடுங்கடா
தென்றல் விளையாடுமூரை பாடுங்கடா
ஊரோடும் உறவோடும் ஊறுங்கடா
உலகாளும் செந்தமிழை உணருங்கடா

நெய்தல் நில நீலக்கடல் தானுங்கடா
நெல்லுமணி கதிர்கள் காண வாருங்கடா
செய்யப்பல தொழில்கள் இங்கே காணுங்கடா
சேயோனின் திருக்கோவில் சேருங்கடா

காவல் தெய்வம் கந்தவேளை கேளுங்கடா
காணிக்கை இன்றி வரம் வேண்டுங்கடா
நாவல் மர நாயகனை நாடுங்கடா - இங்கே
நடப்பதெல்லாம் நன்மைக்கென்று நம்புங்கடா

வள்ளி தெய்வயானையுடன் வேலவன்டா
வாழ்ந்தே வரமளிக்கும் கோவிலடா
பள்ளி கொள்ளும் பாணத்துறை பாருங்கடா
பழமை ஈழ செந்தூரில் வாழுங்கடா

பாடல் : எஸ்.பி.கனகசபாபதி

## திருக்கோவில் பதியினிலே

திருக்கோவில் பதியினிலே
விருப்போடு குடிவந்து
அருட்சக்தி மகனாக வீற்றிருந்தாய்
உனைத் தேடி வருமடியார்
உன் புகழைப் பாடிவர
முனைப்போடு கேட்பாயே முருகையா

வலை கொண்டு படகோடும்
வளம் மிக்க கடலோரம்
வேலாக வந்தவனே முருகையா
அலை துள்ளி விளையாடும்
ஐயா உன் கருவறையில்
அது கண்டு மகிழ்வாயே குமரையா

வயலுண்டு வரப்புண்டு
மலையுண்டு காடுண்டு
வடிவேலன் சொத்தாக பலதுமுண்டு
வரமள்ளித் தருபவனே
கரம் தந்து காப்பவனே
வாகூர மலை பிளந்த வேலையா

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

# திருக்கோவில் கடலோரம்

திருக்கோவில் கடலோரம்
தென்னை மரச் சோலையிலே
திருச் செந்தூர் வேல்முருகன் காட்சி தந்தான்
அருட்சோதி வடிவழகன்
ஆறுமுகன் ஆலயத்தில்
திருப்புகழ் பாடிடவே சக்தி தந்தான்

கற்பூர தீபத்திலே சுவர்ணவேல் பளபளக்கும்
காவடிகள் வீதியிலே பவனி வரும்
பொற்பதங்கள் தேடி வரும்
பக்தர்களின் முகம் மலரும்
அற்புதங்கள் செய்வாயே வேல்முருகா

தணிகை மலை தென்பழனி
பரம் குன்றம் சுவாமி மலை
திருச்செந்தூர் பழமுதிரும் சோலை எனும்
அறுபடை வீடுகளை கோபுரத்தில் தாங்கி நிற்கும்
திருக்கோவில் முருகன் துணை நாடிடுவோம்

பாடல் : இரா.தெய்வராஜன்

## கடலோரம் குடிகொண்ட

கடலோரம் குடிகொண்ட கந்தா உன் அருள் வேண்டி
பாமாலை நாம் சூடினோம்
அலை கொஞ்சி விளையாடும் அழகான திருக்கோவில்
பதிவந்து உனை வேண்டினோம் - அங்கு
அழகான குயில் கூவ எழிலான மயிலாட
அருட்சோதி எமைச் சூழுமே
முறையாக உமைத்தேடி துதிக்கின்ற அடியார்க்கு
முழுதாக வினை மாறுமே

உடல்மீது முள்பாய்ச்சி உணர்வோடு ஒன்றாகி
காவடிகள் நாம் தூக்கினோம்
உனை தேடியோடி உன் சந்நிதியை நாடி
சேவடிகள் தினம் போற்றினோம்
ஒரு பார்வை பாராயோ கந்தாகுகா
வருவாயோ என் முன்னே வேலாயுதா

கற்பூரம் கையேந்தி பொற்பாதம் பூஜித்து
கந்தா உன் கடலாடினோம்
இனிவாழ்வு இனிதாகி என்றென்றும் மணம்வீச
முருகா உன் வரம் வேண்டினோம்
ஒரு பார்வை பாராயோ கந்தாகுகா
வருவாயோ என் முன்னே வேலாயுதா

பாடல் : கோவிலூர் செல்வராஜன்

## ஆதிசிவன் நெற்றிக் கண்ணில

ஆதிசிவன் நெற்றிக் கண்ணில்
அவதரித்த சண்முகனே
அன்னை சக்தி அணைத்தெடுத்த
ஆறுமுக சரவணனே
அடிதொழுவோம் முருகா அருள் தருவாய்
அகமகிழ்வோம் நாமும் அருகிருந்தால்.....

கருணை தரும் தெய்வம் கலியுக வரத்தான்
கார்த்திகேயன் எம்மை காத்திடும் தெய்வம்
கண்கண்ட தெய்வம் என்றே வாழுகின்றோம்
கர்மவினை நீக்கி எமை ஆளுகின்றாய்
அடிதொழுவோம் முருகா அருள் தருவாய்
அகமகிழ்வோம் நாமும் அருகிருந்தால்......

கந்தசஷ்டி விரதம் கவலையை மாற்றும்
வந்த துன்பம் யாவும் பறந்தே போகும்
சொந்த மண்ணில் நொந்து மனம் வாடுகின்றோம்
செந்தில் வேல் காக்குமென்றே நம்புகின்றோம்
அடிதொழுவோம் முருகா அருள் தருவாய்
அகமகிழ்வோம் நாமும் அருகிருந்தால்........

பாடல் : இரா.தெய்வராஜன்

## அழகன் முருகனின்..

அழகன் முருகனின் திருக்கோவில்
அலைகடல் மேவிய தமிழ்க் கோவில்
சிங்கார முருகனுக்கு திருக்கோவில் - ஈழ
செந்தூரெனும் பெயரில் பெரும் கோவில்

சூரசம்ஹாரன் வாகூரத்தை
சுக்குநூறாக்கிய கந்தப்பாணம்
போரதின் வேகம் தணிந்திடவே
பொய்கையில் தோய்ந்து ஆடியதே

முத்திரை பதித்த வெண்நாவற்பதி
முத்தமிழ் வாழும் திருக்கோவில் பதி
சித்தரவேல் வந்து சேர்ந்த பதி
சித்தாண்டி மண்டூர் செப்பும் பதி

சங்கமன்கண்டியில் அவன் அண்ணன்
சந்தமுடன் தம்பிலுவில் அவன் பக்கம்
மங்கைமாரி தோட்டத்தில் அவன் தாயார்
மனம்கொள் உகந்தையிலும் பூசை காண்பான்

பாடல் : எஸ்.பி.கனகசபாபதி

# அம்பிகையின் மைந்தன்

அம்பிகையின் மைந்தன் குமரன்
ஆனைமுகன் தம்பி வேலன்
ஏறுமயிலேறி வருவான்
ஆறுபடை வீட்டு அழகன்
நீலத் திருமாலின் மருகன் - அவன்
ஈழத் திருக்கோவில் முருகன்

ஆதவன் எழுமுன் எழுந்து அபிசேக நீர்கொடுத்து
ஆலயத் திருப்பணி முடித்து ஆரோகரா ஒலியில் திளைத்து
ஐயனின் அருட்கோலம் கண்டோமே
ஆனந்த சாகரத்தில் நின்றோமே
திருமுறை ஓதி உணர்ந்தோமே
திருப்புகழ் பாடி மகிழ்ந்தோமே

பண்ணிய பாவங்கள் எல்லாம்
பன்னிரு தோள்கள் தாங்கும்
எண்ணிய நல்லவை எல்லாம்
எளிதாய் எம் வசமாகும்
அமாவாசை தீர்த்தமாடி வந்தாலே
ஆறுமுகன் அருட்பார்வை பட்டாலே
பனியாய் துன்பம் விலகிடுமே
இனிதாய் வாழ்வு மாறிடுமே

பாடல் : இரா.தெய்வராஜன்

## கந்தப்பாணக் குமரனுக்கு...

கந்தப்பாணக் குமரனுக்கு காவடியாட்டம்
கலியுகத்துக் குமரனுக்கு குறத்தியில் நாட்டம்
சொந்தமான மயிலேறி எடுத்தான் ஓட்டம்
சொர்க்கபூமி திருக்கோவில் சுவாமியின் கோட்டம்

ஆறுமுக வேலவனுக்கு அரகர கோசம்
ஆறுகால பூசை காண அடியார் நேசம்
கூறுமடியார்கள் திருக்கோவிலில் வாசம்
கொக்கரக்கோ சேவல் சத்தம் கேட்டிடும் தேசம்

அழுதவரின் கண்ணீரைத் துடைத்திடும் வேலன்
அன்பர்களின் வேண்டுதலை தருவான் சீலன்
தொழுதவர்கள் வினைகளெல்லாம் துரத்திடும் பாலன்
தோடுடையோன் பிள்ளையவன் தோத்திர லோலன்

வடக்குமுக வெள்ளை நிற நாவலிலன்று
வண்ணமான சித்திரவேல் ஆயுதமொன்று
தொடக்கு முடிந்தபின்னே கிழக்காய் நின்று
தோன்றியதே அழகு திருக்கோவில் இன்று

பாடல் : எஸ்பி.கனகசபாபதி

# ஊரெந்தன் ஊரது...

ஊரெந்தன் ஊரது திருக்கோவில் ஊரது
உலகத் தமிழடியார் உவக்குமந்த ஊரது
கூரந்த வேலது குமரனின் வேலது
குன்றான வாகூரம் குடைந்து வந்த ஊரது

சின்னசுவாமி சேந்தன் சிரித்திருக்கும் ஊரது
சீரடியார் போற்றும் சேயோனின் ஊரது
பக்தர்களை காத்து நிற்கும் வேலோனின் ஊரது
பாதி மதி சூடிய பரமன் மகன் ஊரது

ஓடோடி உலகெங்கும் ஓடுகின்றபோதுமே
ஒரு கணமேனும் உன்னை மறவாமல் எண்ணுவேன்
நாடோடி வாழ்க்கையை நான் நினைக்கும் போதிலே
தேவலோக சுகம்தானே நம்ம திருக்கோவிலே...

களனியுண்டு காடுண்டு கல்வெட்டுமுண்டு
கட்டுமரத்தோடு கவின் பாட்டுக்களும் உண்டு
தின்னப் பழமுண்டங்கே தேன் பாகுமுண்டு
தித்திக்கும் செந்தமிழும் என்னூரில் உண்டு

வீணைக்கொடி இராவணனும் விரும்பி வந்த ஊரது
விந்தையான ஊரது வீரவேலன் ஊரது
தாண்டியடி சேனைக்காடு போட்டாகுளம் ஊரக்கை
தாமரைக்குளத்திலும் செந்நெல் விளை ஊரது

பாடல் : எஸ்.பி.கனகசபாபதி

## திருக்கோவில் திருப்பதிகம்

தரணி புகழ் மேவுதிருக் கோவில் வாழும்
சண்முகனே உன்மீதில் பதிகம் தன்னை
அரவணிந்தோன் தன்னருளால் அடியேன் சொல்ல
அருள்புரிவாய் ஆனைமுக முடையகோவே
வரமருள வேணுமம்மா வாணியென் மேல்
மாதாவே யோர்குறையும் வராவண்ணம்
சிகரமுறுந் திருக்கோவி லுறையும்தேவே
சுவாமி சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தாங்கவொண்ணா நோயதனா லடியேன்மிக்க
சஞ்சலங்கள் பட்டுமனந் தயங்கிவாடி
ஏங்கியே புலம்புகிறேன் ஐயா நீயும்
எளியேனின் பிணியதனை அகலச் செய்வாய்
மாங்கனிக் காகவென்று மயில் மீதேறி
வலமாக வந்தெதிர்த்த வள்ளி வாழ்வே
கோங்குமர மேவுதிருக் கோவில் வாழும்
சுவாமி சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

திகழுமணி முடியாறும் முகங்களாறும்
திருக்கரங்க ளீராறும் சீர்கொள் வேலும்
புகழ்பெருகு வள்ளி தெய்வ யானையோடு
புள்ளிமயில் மீதேறிப் புகலுந்தேவா
என் அகமதில் உற்றதுயர் தன்னையுந்தன்
அருள் வேலால் அறுத்தெறியும் அமரர்கோவே
சிகரமுறுந் திருக்கோவி லுறையும்தேவே
சுவாமி சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தீராகுஷ்ட மொடுவாத பித்தம்
சிலேட்டுமங்க ளுள்ள தொரு தீமையெல்லாம்
வாராதே யுந்தனிட நாமங் கேட்டால்
வழிவிலகி யோடுமே வடிவேலோனே
காரானை முகற்கிளைய கந்தவேளே
கருத்துடனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
தாராருந் திருக்கோவி லுறையுந் தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

துன்பங்க ளணுகிடுமோ ஐயாவுன்னைத்
தொழுதோற்குப் பழுதொன்று வருமோசாமி
அன்பாக அடியேன்சொல் விண்ணப்பத்தை
அப்பனே கேட்டு உந் னருளேசெய்வாய்
வன்போடு மாமனைமுன் வதைத்தமாயன்
மருகனெனச் சரவணையில் வந்ததேவே
தென்பகுதி மேவுதிருக் கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தாவிமயில் மீதேறி அடியேன் முன்னே
தோன்றியென் மீதிலுற்ற துயரந்தன்னை
ஏவலோடு பேய் பில்லி சூனியங்கள்
எல்லாமுன் கைவேலா லெறிந்தேநீக்காய்
காவிலுறை மானுடனே மழுவுமேந்தும்
கண்ணுதலோ னீன்றெடுத்த கந்தவேளா
தீவினைகள் போக்குதிருக் கோவில்வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தெய்வானை தன்கொழுந னென்னாமுன்னந்
தேவர்தனக் குற்றபெருஞ் சிறையைமீட்டாய்
எந்தாயே எழியேன் செய் விண்ணப்பந்தான்
எந்தையேயுன் செவியேறா திருப்பதேனோ
கொல்வாயென் நோய்பிணிகள் குலைந்தேஓடக்
கொற்றவனே அடியேன்மேல் சித்தம் வைத்து
செய்வாய்நீ திருக்கோவி லுறையுந்தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தேடுதற்கு மெட்டாத பெருமானீன்ற
செல்வன் நீ மெய்ப்பொருளே எளியேன்மிக்க
வடுகின்றே னையாவென் முன்னே வந்து
வல்பிணிகள் நீங்கவரம் நல்கவேணும்
சாடியே வாகூரப் பொருப்பைக்கூறாய்
தகர்த்து வெள்ளை நாவலிலே தங்குந்தேவே
தேடுதமிழ் மேவு திருக்கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தையல்நல்லார் தங்களுக்கு அடிமையாவேன்
சாமியுன் சேவடிக்கு ஏவல் செய்வேன்
மையலே நினைவாகித் திரிந்தேனல்லால்
வள்ளலே யுன்பாதம் மனதிலில்லை
மெய்யனே இவ்வெளியேன் பிரேமைநீங்கி
மோட்சவீ டளித்தருளும் முருகவேளே
திவ்யபுகழ் மேவுதிருக் கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தொட்டதண்டு பாசமுடன்சூலங் கொண்டு
துரிதமொடு கடாவேறி இயமன்தானும்
கட்டியே இழுத்து எந்தன் ஆன்மாதன்னை
கலக்கமது செய்யமுன்னங் கர்த்தனேநீ
வட்டமிடும் பச்சைமயில் மீதேறி
வடிவேலுங் கரமிலங்க வருவீரையா
திட்டமுடன் திருக்கோவி லுறையுந்தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தோராத வலிமை பெற்ற சூரன்தன்னைச்
சுடர்வேலா லறுத்தெறிந்த துரையேயென்முன்
வாராயோ வள்ளிதெய்வ யானையோடு
வடிவேலே இதுசமயம் வருகின்றேன் நான்
பாராரும் பார்த்தன்வில் லடியும்பட்டு
பாசுபத மீர்ந்தருளும் பரமன்சேயே
சேராயோ திருக்கோவி லுறையுந்தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

தௌவையெனை அணுகாமல் காக்கவேணும்
சண்முகனே யுன்பாதம் துதிக்கவேணும்
ஔவியங்கள் பேசாம லிருக்கவேணும்
ஆண்டவனே என்பிணிக ளகலவேணும்
செய்ய கந்தவெற்பதனில் பிரமன் தன்னை
சிறை செய்த மெய்ப் பொருளே செந்தில்வேலே
திவ்யபுகழ் மேவுதிருக்கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

இத்தலத்திற் கற்றறியாச் சிறியேன்யானும்
ஏந்தலே யுன்மீதி லன்புகொண்டு
பத்துடனே மூன்றுதிரு விருத்தந்தன்னைப்
பாடினே னிவ்வெளியேன் பலருஞ்சொல்லி
நித்தமுமிப் பாடல்தனை நினைப்போர் தங்கள்
நீடுவினை தீர்த்தருள்வாய் நிமலர்கோவே
சித்தமுறுந் திருக்கோவில் வாழுகின்ற
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே

பாடல் : சி.பொ.த.வில்லியம்பிள்ளை
(தம்பிலுவில்)

## திருக்கோவில் சித்திர வேலாயுதன் காவடிப் பாடல்கள்

திருக்கோவில் வேலனைப் பாடவந்தோம்
தித்திக்கும் செந்தமிழைத் தாரும் ஐயா
தெருவெல்லாம் காவடிகள் ஆடிவந்தோம்
தேவர் துயர் தீர்த்தவனே வாரும் ஐயா
சங்கமான் கண்டியனின் கால் பணிந்தோம்
சங்கடங்கள் நேராமல் காரும் ஐயா
தங்கமயில் மீதமர்ந்த உமையாள் மைந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சிவனிடமே வரம் பெற்ற அசுரர் அன்று
செருக்குற்றுத் தேவரையே அடிமையாக்க
சினங் கொண்ட சிவனும் ஒரு முடிவு காண
சங்கார வேலனாக உனைப் படைத்தான்
சிங்கமுகன் தாரகா சூரன் என்ற
பத்மா சூரன் தம்பிகளை சங்கரித்தே
சூரனின் உடல் கிழித்து மறுவாழ்வும் தந்தாய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

வாகூரமலை பிழந்து வந்த கூர்வேல்
வங்காளக் கடலினிலே தீர்த்தம் ஆடி
வெண்ணாவல்பதியாம் திருக்கோவில் நாடி
வந்துறைந்த பதிதேடி நாங்கள் வந்தோம்
எங்கள் துயர் தீர்த்திடவே எழுந்துவாராய்
தங்கவேல் ஆயுதனே விரைந்து வாராய்
தமிழர்களின் தன்மானம் காக்க நீவா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

இராவணனின் காலத்துப் பழைய கோவில்
ஈராறாம் நூற்றாண்டில் வளர்ந்த கோவில்
நாகர்முனை வெண்ணாவல் பதிஎன்றோதும்
மாகோனின் ஆட்சியிலே மிளிர்ந்தகோவில்
ஈழத்தில் வரலாறு படைத்த கோவில்
சோழநாட்டுச் சிற்பிகளால் உயர்ந்த கோவில்
சேவற்கொடிதாங்கியோன் உவந்த கோவில் - உறையும்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

அருணகிரி திருப்புகழில் அமர்ந்த வேலா
குருபரனின் கலி வெண்பா நுழைந்தவேலா
ஔவையின் தமிழ்கேட்டு மகிழ்ந்தவேலா
அனைவரையும் காப்பாற்றும் சக்திவேலா
துன்பமே அணுகாது காக்க வாரும்
தூயவனே மாயவனின் மருகாவாவா
தமிழர் துயர் துடைத்தெறிய வாரும் ஐயா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சங்கரனின் நெற்றிக் கண் நெருப்பால் வந்தாய்
சரவணப் பொய்கையில் நீ வளர்ந்துவந்தாய்
சக்தி உடை கைவேலைத் தாங்கி நின்றாய்
சண்டாளன் சூரபத்மனை வதைத்தாய்
உலகெங்கும் அலைகின்றோம் அமைதிதாராய்
உன்னை நம்பி வாழும் எங்கள் துயரம் தீராய்
உரிமையுடன் எமைக் காக்க ஓடிவாராய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சக்தி வடிவேலனே சண்முகனே
சங்கரனார் புத்திரனே கார்த்திகேயா
பச்சைமயில் ஏறி வந்து காக்க வேண்டும்
பன்னிருகை கொண்டு எம்மைத் தூக்கவேண்டும்
அச்சமின்றிப் பணிவிடைகள் செய்யவேண்டும்
ஐயன் உன் திருத்தலங்கள் சுற்றவேண்டும்
சன்னிதியின் வேலவனும் நீதான் ஐயா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஆடி அமாவாசை தேடி நாங்கள் வந்தோம்
ஆறுமுகன் உற்சவத்தைக் காணவந்தோம்
தேரோடும் திருக்கோவிற் கந்தவேளை
தரிசிக்க காவடியும் ஆடி வந்தோம்
கற்பூரச் சட்டியுடன் தாய்க்குலங்கள்
கந்தனுக்கு அரோகராய் பாடுதையா
கடலிலே தீர்த்தம் ஆடக் கூடுதையா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

தீராத மனக்கவலை தீர்ப்பாய் என்று
திக்கெட்டும் இருந்து வந்த பக்தர் கூட்டம்
சேயோனின் திருக்கோலம் தேரில் கண்டு
நெஞ்சுருகி மனக்கவலை மறந்திட்டார்கள்
மாமாங்கக் கணபதியின் தம்பி நீயே
மயிலேறும் ஈழத்துச் செந்தூர் வேலா
மடிப்பிச்சை கேட்டோம் தாய் மண்ணைக்காராய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கந்தன் உறை திருக்கோவில் காண வாரீர்
கடலோரம் தென்னைமரச் சோலை பாரீர்
சிந்தனையை நல்வழியில் மாற்றிவைப்பான்
சித்தம் எல்லாம் நிறைந்து வழிகாட்டி செல்வான்
சீரான நல்வாழ்வு எம்மைச் சேரும்
கூரான வேல் வந்து எம்மைக் காக்கும்
சோழவம்சக் குளக்கோட்டன் செப்பம் இட்ட - கோவில்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

மண்டூர் முருகனையும் இங்கு கண்டோம்
மாவிட்ட புரக்கந்தன் கோலம் கண்டோம்
சித்தாண்டி வேலவனின் சிறப்புக் கண்டோம்
தாந்தாமலை முருகனின் தோற்றம் கண்டோம்
உகந்தை வடிவேலனின் உருவங் கண்டோம்
கதிர்காமக் கந்தனின் அழகும் கண்டோம்
அனைத்து ஊர் முருகனையும் இங்கு காண்போம் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

எங்கள் குலம் காத்துநிற்கும் தமிழ்க்குமரா
எல்லை இல்லாக் கருணை உள்ள தங்கவேலா
தங்கு தடையின்றி இங்கு நாங்கள் வாழ
தந்திடுவாய் விடுதலையை வெற்றிவேலா
கால் நடையாய்க் கதிர்காமம் சென்று வந்தோம்
கதிரைமலை ஏறியும் கண்டு வந்தோம்
கனகமயில் மீதேறிக் காட்சி தந்தாய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

பெருவெள்ளம் மூடாமல் தடுத்து நின்றாய்
பேரலையின் சீற்றத்தைத் தணியச் செய்தாய்
பெரும் பஞ்சம் நிகழாமல் காத்து வந்தாய்
பெருமானுன் திருவருளால் மீண்டு வந்தோம்
அழகு தமிழ்க்குமரன் என நாமம் பெற்ற
ஆனைமுகன் சோதரனே அருகில் வாராய்
அன்னை சக்தி அரவணைத்த அரனார் மைந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கடம்பனை கடலோசை அரவணைக்கும்
கந்தனது கருணையினால் அல்லல் தீரும்
தென்னைமரத் தென்றலும் கீதம் பாடும்
தேனினும் இனிய தமிழ்க்காற்றில் பாயும்
திருக்கோவில் குமரனது புகழைப்பாட
தீராத நோய் பிணிகள் விலகி ஓடும்
சீரான வாழ்வு எம்மை நாட வேண்டும் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

திருமாலின் புத்திரிகள் இரண்டு பேரும்
முருகன் மேல் ஆசை கொண்டு தவம்புரிந்தார்
தேவேந்திரன் புதல்வியாகி அமிர்தவல்லி
தேவசேனா நாமம் உடன் வாழ்ந்து வந்தாள்
தேவர்மூவர் யாவருமே சேர்ந்து வாழ்த்த
திருப்பரங்குன்றமதில் முருகவேளும்
தேவயானை கைப்பிடித்தே மகிழ்ந்தே நின்றாய் - எங்கள்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

மான்வயிற்றுக் குழந்தையாகி சுந்தரவல்லி
நம்பிராசன் தம்பதியின் கண்ணில்பட்டாள்
வள்ளிக் கொடிமத்தியில் கண்டதாலே
வள்ளியம்மை நாமம்இட்டு வளர்த்துவந்தர்
வள்ளி அவள் தினைப்புனத்தைக் காவல் செய்ய
வேடுவனாய் கிழவனாக வேடம் இட்டு
வேல்முருகா வள்ளியை நீ வதுவை செய்தாய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

நினைக்காமலே கொடுக்கும் கற்பகம் நீ
கேளாமலே கொடுக்கும் காமதேனு
விரும்பாமலே கொடுக்கும் சிந்தாமணி
திருக்கோவில் வாழும் உமைக் காணவந்தோம்
அழைக்காமலே வருவாய் கந்தவேளா
ஆபத்தில் உதவிடுவாய் கார்த்திகேயா
அடியாரை வழிநடத்தும் சுப்ரம்மண்யா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கங்கையிலே அவதரித்த காங்கேயன் நீ
கார்த்திகைப் பெண் வளர்த்த கார்த்திகேயா
சரவணப் பொய்கையிலே சரவணன் நீ
தாரகனைக் கொன்றழித்த தாரஹாரி
சக்தியிடம் வேல் பெற்ற சக்திவேலா
சிவனுக்கே பாடம் சொன்ன சுவாமி நாதா
சிவபூசை ஆனந்தம் காண வந்தோம் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஈழத்துச் திருச்செந்தூர் வேல் முருகா
வேழமுகன் சோதரனே மால் மருகா
தெய்வயானைக் கரம்பிடித்த சுப்ரம்மண்யா
சிங்கார வேலவனே நல்லூர்க் கந்தா
மங்காத வெண்ணாவல் பதியில் வாழும்
மாயூர வாகனனே உமையாள் மைந்தா
மறவாமல் கேட்ட வரம் அருள்வாய் ஐயா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கந்தா உன் தந்தை சிவன் கோவில் செல்வோம்
தான் தோன்றி ஈஸ்வரனை பணிந்து நிற்போம்
மாமாங்க ஈஸ்வரனின் மகிமைபாடி
முனீஸ்வரம் தலம் சென்று பூசை காண்போம்
கோணேசர் கேதீசர் தலங்கள் சென்று
கண்விழித்துச் சிவராத்திரி நோன்பும் நோற்று
கடுகளவும் பயம் இன்றித் திரும்பவேண்டும் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

முருகாற்றுப்படை நூலின் பெருந்தலைவா
அருணகிரியார் பாடும் தமிழ்க்குமரா
ஆறுபடை வீடமர்ந்த கார்த்திகேயா
ஐங்கரனின் தம்பியே சம்பு மைந்தா
இருளோடி விலகவே ஒளியாய் நீவா
திருக்கோவில் முருகனே ஓடிவாவா
தெய்வானை வள்ளி மகிழ்தங்கவேலா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சொந்த மண்ணில் நிரந்தரமாய் வசிக்கவேண்டும்
சொந்தபந்தம் கலையாது காக்கவேண்டும்
எல்லோரும் ஒற்றுமையாய் வாழவேண்டும்
வல் அசுரர் மாய்த்த உன் துணையே வேண்டும்
தொல்லை இன்றித் தொழில் செய்து உயரவேண்டும்
நல்லகுருநாதன் உனைப் பாடவேண்டும்
செல்வனே திருக்கோவில் உறையும் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஆடி அமாவாசை தீர்த்தம் காணவந்தோம்
அழகனே உன் புகழைப்பாட வந்தோம்
தேடியே உன் பாதம் பணிய வந்தோம்
அரோகரா ஓசையிலே மெய் சிலிர்த்தோம்
அலைகடலாய் மக்கள் வெள்ளம் கடந்து வந்தாய்
ஆழியிலே தீர்த்தமாடும் காட்சி தந்தாய்
பிறந்தபயன் இன்று நிறைவேறுதையா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

வேல் திரும்பி வரலாறு படைத்த கோவில்
கல்வெட்டில் பட்டயங்கள் பதித்த கோவில்
தேசத்துக் கோவில் என விரிந்த கோவில்
பூபால கேந்திரர் பணி ஆற்றும் கோவில்
மன்னர்களால் புதுப்பொலிவு பெற்ற கோவில்
திருக்கோவில் வேல் முருகன் வாழுங்கோவில்
தேடியே நாம் இங்கு கூடினோமே - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

மூர்த்தி - தலம் - தீர்த்தம் என்ற மூன்றும் உண்டு
தேர் ஓட நாற்புறமும் வீதி உண்டு
அமாவாசை அமுது ஆக்கத் தோப்பும் உண்டு
அன்னதானம் வழங்க வன்னி நிழலும் உண்டு
அத்தனையும் அமைந்த திருக்கோவில் வாழும்
வித்தகனே வினை தீர்க்க எழுந்து வாராய்
கத்தும் கடல் ஓரம் வாழும் சுப்ரம்மண்யா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கலியுகவரதனைக் காண வந்தோம்
கண்கண்ட தெய்வத்தைப் போற்றவந்தோம்
சலியாது உன்நாமம் பாட வந்தோம்
சம்புக்குமாரனுனை வாழ்த்த வந்தோம்
சஸ்டி விரதமும் நோற்று வந்தோம்
சக்தி வடிவேலன் உனைத் தேடி வந்தோம்
சூரனை இரு கூறாய் பிளந்தவேலா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்று
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

பாடல் : இரா.தெய்வராஜன்

## முருகன் திருப்பள்ளி எழுச்சி

அலைகடல் மடியினில் ஆதவன் எழுந்தான்
அருணனின் கதிர்களால் பூமகள் மகிழ்ந்தாள்
நிலைபெறு உழவர்கள் விளைநிலம் புகுந்தார்
நீர் நிலைத்தாமரை இதழ்களை விரித்தாள்
மலைகளை விரும்பியே வலம்வரும் முருகா
மாதங்கவதனன் தம்பியே குமரா
சிலைவடிவாகவே அமர்ந்திடும் அழகா
சித்திரவேலனே எழுந்தருளாயே

பரமனின் பார்வையில் தோன்றிய சுடரே
பார்வதி மகனே பன்னிரு கரனே
சரவணப் பொய்கையின் சரவணபவனே
சமர் செய்து தேவரை மீட்ட சண்முகனே
தரணியின் தீமைகள் பொடிபட வந்தாய்
தாரணி போற்றிடும் தமிழ்த் தெய்வம் ஆனாய்
பிரம்மனைக் கடிந்து நீ சிறையினில் அடைத்தாய்
பீதாம்பரன் மருகா எழுந்தருளாயே

வங்கக் கடற்கரையை நாடியே வந்தாய்
வாகூர மலை பிளந்த வேல் தாங்கியே நின்றாய்
தெங்குசூழ்திருக்கோவில் தேடியே அமர்ந்தாய்
செந்தூர்த்தலம் எனவே வேலுடன் நுழைந்தாய்
மங்காப் புகழ் உடைய மயில்வாகனனே
மாமங்கக் கணபதியின் தம்பியே குகனே
மங்கைமாரித் தாயாரின் மனம்கவர் மணியே
சிங்கார வேலவனே எழுந்தருளாயே

மாதா பிதாவை உலகம் என்றுணர்த்த
மாமயில் ஏறியே மேதினி அளந்தாய்
மாதங்க முகனை வென்றிட வைத்தாய்
மாங்கனி நாடகம் நடத்தியே முடித்தாய்
மண் வளங்கள் நிறைந்த திருக்கோவில் பதியில்
மாணிக்க வடிவேல் தாங்கிய திருவே
விண்ணவர் போற்றிடும் ஈசனின் மகனே
வீர வேலாயுதனே எழுந்தருளாயே

மண் சுமந்த பெருமான் மகிமையில் விளைந்தவனே
மலைத்துணை துயர்வரினுத் பனி என மறைப்பவனே
மண்டூர்ப் பதி சென்றும் பக்தரைக் காப்பவனே
மாதவன் மனங்கவர்ந்த மருகனே குருபரனே
வெண்ணாவல் பதி அமர்ந்து வேதனைகள் தீர்த்தவனே
விந்தைகள் பல புரிந்து சிந்தையில் நிறைந்தவனே
தொண்டர்கள் சூழ்ந்திருக்கும் திருக்கோவில் உறைந்தவனே
தேவ சேனாபதியே எழுந்தருளாயே

உகந்தையிலும் உறையும் உமையாள் திருக்குமரா
ஊறிய தீவினையை உலர்த்திடும் வேல் முருகா
அகந்தையில் அறிவிழந்தோம் அணைத்திடவா சண்முகா
ஆறிரு தோள்உடைய ஆண்டவன் நீ அல்லவா
சுகந்த மணம் கமழும் கடம்பணிமார்பழகா
சூரசம் ஹாரனே திருக்கோவில் சுப்ரமண்யா
இகத்திலும் இன்பம் தரும் வரதனே தமிழ்க்குமரா
ஈஸ்வரன் குலக்கொழுந்தே எழுந்தருளாயே

கதிர் காமக் கந்தனும் நீ கதிர் வடிவேலனும் நீ
கலியுக தெய்வமும் நீ காங்கேயக் கடவுளும் நீ
கதி எமக் கேதும் இல்லை காத்திட வாரும் ஐயா
கார்த்திகைப் பெண்வளர்த்த பாலகன் நீ அல்லவா
விதிஎன நாட்களை நாம் கழித்திடவே மாட்டோம்
வேலன் உன் கால்களையும் கைவிடவே மாட்டோம்
நதிமதி சூடிய பரமனின் மகனே
நவநிதியே பள்ளி எழுந்தருளாயே

தாந்தாமலை சென்று தங்கிடும் மணி விளக்கே
தரணியில் தமிழர்கள் போற்றிடும் பேரொளியே
சிந்தையில் நிறைந்திருக்கும் சித்தாண்டி வேலவனே
சிவசக்தி பாலகனே தேவர்கள் தளபதியே
முந்திரிமூன்றுகனிச் சோலைகள் சூழ்ந்திருக்கும்
முத்தமிழ்க் கவின்கலைகள் விளங்கிடும் ஊரினிலே
கத்தும் கடல் அலைகள் கந்தா உன் கால் நனைக்கும்
சத்துரு சம்உறாரனே எழுந்தருளாயே

நல்லூர்க் கந்தன்என விளங்கிடும் நவமணியே
நான்மறைத் தத்துவங்கள் நிறைந்த பெருங்கடலே
கல்லையும் பிளந்துருக்கும் கதிர்வேலாயுதனே
காவலாய் இருப்பவனே ஐயப்பன் சோதரனே
நல்லதை நாடவைக்கும் வண்ணமயில் வாகனனே
கல் நெஞ்சும் கசிந்துருகும் கருணையைப் பொழிபவனே
வல்லவனே நல்லவனே வள்ளி மனோகரனே
வேலவனே பள்ளி எழுந்தருளாயே

மாவிட்டபுரம்சென்று மகிமைகள் புரிந்திடுவாய்
மக்களின் குறை அகற்றி மாண்புடன் வாழவைப்பாய்
நீவிட்டவழி எனவே நெருப்பாறும் நாம் கடந்தோம்
நீதியை நிலைக்கவிடு நீல மயில் வாகனனே
ஔவையின் தமிழ்கேட்க நாவற்பழம் பறித்தாய்
அருணகிரிநாதர் திருப்புகழில் திளைத்தாய்
தித்திக்கும் செந்தமிழில் உன்புகழ் பாடவைத்தாய்
திருக்கோவில் வேலவனே எழுந்தருளாயே

பாடல் : இரா.தெய்வராஜன்

## முருகன் கும்மி

தம்பிலுவில் பதி வீற்றிருக்கும் வர
சித்தி விநாயகர் தாள் பணிந்து
கும்மிப் பாடல்களைப் பாடவந்தோம் - நீ
எம்மோடிருந்து உதவிடய்யா

கந்தப் பாணந்துறை என்றழைக்கப்படும் வெள்ளை
நாவற்பதியினில் வந்தமர்ந்த
சித்திர வேலனைப் பாடவந்தோம் - அம்மா
நாமகளே நாவில் வந்திடம்மா

வங்கக் கடற்கரை ஓரத்தில் வந்து
தங்கி இருக்குது சித்திரவேல்
எங்கள் துயரங்கள் ஏக்கங்கள் யாவையும்
உங்களிடம் சொல்ல ஓடிவந்தோம்

இராமாயணகால இராவணனும் வந்து
நீராடி உன்தாள் பணிந்து நின்றான்
போராடி வாதாடித் தீர்வேதும் காணாமல்
சோர்வான எம்குலம் காத்திடையா

வடக்காகத் தங்கிய தங்க வேலாயுதம்
கடற்கரை நோக்கித் திரும்பியதால்
திரும்பிய கோயிலாய் நாமம் பெற்றுயர்ந்த
திருக்கோவில் ஊர் வாழும் வேல்முருகா

சோழரின் வம்சத்தில் வந்துதித்த வீரர்
காலிங்க மன்னர்கள் செப்பனிட்ட
கோவிலிலே உறை கந்த வேளே - எங்கள்
குற்றம் களைந்தெம்மைக் காருமையா

தீட்டிய கல்லையே கூர்பார்க்க எண்ணி
தேவர்குலத்தையே சீரழித்த
சூரபத்மனது ஆணவம் அழித்த
சித்திர வேலாயுதன் தாள் பணிவோம்

அப்பனுக்கே உபதேசங்கள் சொல்லியே
அழகு சுவாமிமலை போய் அமர்ந்தாய்
ஆறுபடை வீடும் போதாதென்று நீ
அடியவர் நெஞ்சிலும் வாழுகின்றாய்

ஔவையின் நற்றமிழ் கேட்டிடவே அன்று
ஆடுகள் மேய்ப்பன் வேடமிட்டு
நாவல் மரத்திலே ஏறி உலுப்பியே
நாடகம் ஆடிய வேலவனே

சூரனைப் பிளந்து சேவல் மயிலாக்கி
திருப்பரம் குன்றம் திரும்பியதம்
தெய்வானை அம்மனைக் கைபிடித்து நீயும்
தேவ சேனாதிபதி ஆகினீரே

மான் மகள் வள்ளியைக் கைப்பிடிக்க அன்று
மாறு வேடங்களில் நீ அலைந்தாய்
தேனும் தினை மாவும் வாங்கியே உண்டு நீ
தணிகை மலையில் மணம் முடித்தாய்

அமிர்தவல்லியான தேவயானையையும்
சுந்தரவல்லியாம் வள்ளியையும்
வேல்முருகன் மணம் செய்ததனால் அவன்
மால் மருகன் என்ற நாமம் பெற்றான்

கான மயிலாட நீலக்குயில் கூவ
கண்டுகளிக்கும் உகந்தை வேலா
ஈனப்பிறவியாய் ஊனமுற்று வாழும்
ஈழத் தமிழரைக் காத்திடையா

வாவிபுடை சூழும் மண்டூர்ர் பதியிலே
வாழ்ந்து வரும் எங்கள் வேலவனே
வாழ்விழந்து வாழும் ஏழைத் தமிழரை
வாழ்விக்க நல்வழி காட்டுமையா

ஆண்டிச் சித்தனுன்னை பூசித்திட அன்று
ஆலயம் சின்னதாய்க் கட்டி வைத்தான்
அண்டம் புகழ்ந்திடும் சித்தாண்டி வேலனே
வேண்டும் வரம் தர வாருமையா

தாந்தா மலையிலே தங்கி அருள் செய்யும்
சுந்தர வேலனே காத்திடுவாய்
சூரபத்மன் உடல் கூறு செய்த வேலால்
ஓரவஞ்சனைகள் மாய்த்திடுவாய்

வெருகல் பதியிலே வீற்றிருக்கும் எங்கள்
வேழமுகத்தவன் சோதரனே
வேங்கை மரமாக நின்றவனே எங்கள்
வேதனை தீர்த்திட வாருமையா

மாணிக்க கங்கை வளங்கொழிக்க மிக்க
மாட்சிமை பெற்ற திருத்தலமாம்
சாதி மொழி பாகு பாடு இன்றி மக்கள்
சங்கமம் ஆகும் கதிர்காமம்

சூரனைச் சங்காரம் செய்த இடம் வள்ளி
நாயகியை மணம் செய்த இடம்
ஏமகூட மென்று கந்தப் புராணமும்
கூறும் தலமே கதிர்காமம்

கல்லடியின் கடல் ஓரத்திலே வாழும்
வல்லகுருநாதா வேல்முருகா
நல்லூர்ப் பதியிலும் நீ அமர்ந்தாய் எங்கள்
தொல்லை தொலைத்திடு மால் மருகா

ஆனைப் பந்தியானின் சோதரனே அதி
அற்புதங்கள் செய்யும் வேலவனே
ஈனர்களின் செயல் இன்னும் தொடராமல்
ஈழத் தமிழரைக் காருமையா

ஆதவன் உதிக்கும் வேளையிலே
அதிகாலை சிவபூசை காணவந்தோம்
ஆனந்தமான அரோகரா ஓசையில்
அத்தனை துன்பமும் போனதையா

மங்கை மாரி அன்னை பாசம் வைக்க அண்ணன்
மாணிக்கப் பிள்ளையார் நேசம் வைக்க
தங்கவடிவேலன் இங்கிருக்க இனி
என்னகுறை என்று நாம் மகிழ்வோம்

திருப்பரங்குன்றமும் செந்தூரும் மற்றும்
திருவாவி நன்குடி சுவாமிமலை
திருத்தணிமலையும் பழமுதிர்ச் சோலையும்
திருக்கோவில் வேலனின் வீடுகளே

கந்தப் புராணம் கந்தர் அனுபூதி
கந்தர் அலங்காரம் ஆற்றுப்படை
சேவல் விருத்தம் மயில் விருத்தம் - நூல்கள்
வேலவனின் புகழ் ஓதிடுமே

வேல்முருகா திருமால் மருகா - கோவில்
போரதீவின் வடிவேல் அழகா
மாவிட்ட புரத்து மாணிக்கமே எங்கள்
மண்ணை மீட்டுத்தர வா முருகா

சகல கலை அம்மன் உன் அன்னையாம் அவள்
சண்முகன் உன்னையே பார்த்திருப்பாள்
சங்கரன் மைந்தனே சித்திர வேலனே
எங்கள் குறை தீர்க்க வாரும் ஐயா

தம்பிலுவில் ஊரின் எல்லையிலே வாழும்
தாயே காயத்திரி மைந்தனே வா
நாம் தமிழர் என்ற நாமம் நிலைத்திட
நல்ல வழிகளைக் காட்டும் ஐயா

ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஸ்டியில்
ஆறுதினங்களும் நோன்பிருந்தால்
மாறாத நோய்களும் மாறிவிடும் - எங்கள்
ஆறுமுகன் அருள் கூடிவரும்

மங்களமே சுபமங்களமே - எங்கள்
தங்கவேலனுக்கு மங்களமே
தந்திடுமே அருள் தந்திடுமே இந்த
கந்தன் கும்மி நலம் தந்திடுமே

பாடல் : இரா.தெய்வராஜன்

## முருகன் திருவூஞ்சற் பாட்டு

வேதங்கள் நான்கினையும் காலாய் நாட்டி
வித்தகஞ்சேர் ஆகமமாம் விட்டம் பூட்டி
போதமிகு கலைவிதமாம் வடமும் மாட்டி
புகலவரு ஓங்காரப் பீடம் இட்டு
ஏதமிலா வண்டமிழ்ப்பா வூஞ்சல் மீதே
இளமுருகா குழலழகா இனித மர்ந்தே
சீதவள வயல்சூழ் திருக்கோவில் வைகும்
சித்திர வேலாயுதரே ஆடீர் ஊஞ்சல்

சங்கரனின் நெற்றிவிழிப் பொறிகள் ஆறும்
சரவணத்துப்பொய்கைதனிற் குழந்தை ஆகிப்
பொங்குமன்பால் உமையணைக்கக் கந்தனானாய்
பூதலத்தோர் வாழவருள் பூத்து நின்றாய்
இங்கயனைச் சிறைசெய்தாய் மயூரம் ஊர்வாய்
இளமுருகா சிவகுருவாம் பெயரும் பெற்றாய்
மங்களஞ்சேர் திருக்கோவில் பதியில் வாழும்
மதகரியின் சோதரனே ஆடீர் ஊஞ்சல்

அருள்பொழியும் ஈராறு விழிகள் ஆட
ஆதவனின் ஒளிநாணும் வதனம் ஆட
திருவாரும் பன்னிருகை சேர்ந்தே ஆட
திருப்புகழின் ஒலிகேட்டே செவிகள் ஆட
மருள்நீக்கும் மலரடிகள் ஆர்த்தே ஆட
மயூரமொடு குக்குடமும் மகிழ்ந்தே ஆட
உருகுமெய் அடியரொடு தேவர் ஆட
உமைதந்த குமரேசா ஆடீர் ஊஞ்சல்

செஞ்சடையை அணிசெய்பொன் மகுட மாட
செந்தூரத் திலகமொடு குழையும் ஆட
விஞ்சுமெழில் கொஞ்சுசிரம் ஆறும் ஆட
வினைகளையும் வீரவடி வேலும் ஆட
நெஞ்சுதனை ஈர்க்குமிதழ் முறுவல் ஆட
நித்திலவித் தாரமணி ஆரம் ஆட
குஞ்சரியார் வள்ளியொடு கூடி ஆடக்
குறிஞ்சிவளர் குகபரனே ஆடீர் ஊஞ்சல்

சிந்திடுவெண் தண்மதியம் வட்டம் தாங்கச்
செம்பரிதி திருக்கரத்திற் குடையு மேந்த
இந்திரனும் மெய்மறந்து கவரி வீச
ஈடில்லாத் தும்புருவின் சுருதி நீட
செந்தமிழ்த்தாய் சரசுவதி வீணை மீட்டத்
தேசுமலி திருமாலார் குழலும் ஊத
நந்திமுழ வதிரவயன் தாளம் போடஷ
நயந்தருள்சண் முககுகனே ஆடீர் ஊஞ்சல்

சூரனைத் தோற்கடித்தே சுரனைக் காத்தாய்
சுவைவிஞ்சத் தேன்தமிழில் மாந்தி நின்றாய்
தீரமொடு பிரணவத்தின் பொருளைச் செப்பிச்
செஞ்சடையான் சிவபரனை மகிழ வைத்தாய்
ஊரறிய நக்கீரர் உருகி வேண்ட
ஒளியுடையுன் திருக்கோலம் காட்டி நின்றாய்
பாரதனில் பற்றறுத்துப் போகம் ஈயும்
பன்னிருகை சிவமுருகா ஆடீர் ஊஞ்சல்

கொஞ்சுமொழி வஞ்சியுமா தேவி யோர்பால்
கூத்துகன்றோன் பிறைசூடிச் சிவனும் ஓர்பால்
விஞ்சுமெழிற் கஞ்சமலர்க் குஞ்சரி யோர்பால்
விதுமேவு நுதலிவடி வள்ளி யோர்பால்
தஞ்சமெனக் கெஞ்சிடுநல் லடியார் ஓர்பால்
தவமுருகா அரிமருகா என்றே ஏத்த
வஞ்சமல மாயைவினை கெடுத் தருளும்
வரசரண சிவகுமரா ஆடீர் ஊஞ்சல்

ஏவர்கண் தோற்றிடா தெங்கும் தங்கும்
எண்குணத்துப் பஞ்சரனே குருவே போற்றி
தேவர்கள் ஏத்துமுயர் செந்தமிழ்க் குமரா
சீரிலங்கு திருக்கோயிற் சேந்தா போற்றி
பாவல்லோர் சமைத்திட்ட பைந்தமிழ் அமுதைப்
பற்றோடும் மாந்தியருள் பரனே போற்றி
ஆவலிக்கும் திருத்தொண்டர் இடுக்கண் தீர்க்க
அமலபர சிவமுருகா ஆடீர் ஊஞ்சல்

வானாகிப் பிரபஞ்ச வடிவாய்க் காற்றாய்
வலிமருவும் உருவாகி அருவா யொன்றாய்
ஊனாகி உயிராகி உள்ளம் புக்கே
உணர்வாகி ஒளிகாலும் அருளா யென்றும்
தேனாகிப் புலவர்நாத் தமிழாய் ஊறும்
திருவாகி ஆறுபடை முருகா இன்று
கோனான குளக்கோட்டன் சீரமைத்த
கோவிலுறை வேலவனே ஆடீர் ஊஞ்சல்

பாடல் : இரா.தெய்வராஜன்

## கந்தப் புராணச் சாரம்

சங்கமான் கண்டியனின் பாதமலர் தொட்டோம்
சண்முகனின் புகழ்பாட ஓடோடி வந்தோம்
சங்கடங்கள் அணுகாது நீ காக்க வேண்டும்
சக்தி உமைபாலனே துணையாக வேண்டும்

சங்கரனின் சற்குருவேதிருக்கோவில் வேலா
சந்ததமும் நாம் வணங்கும் சங்கீத லோலா
சிங்கார வேலனே சித்ர வேல் முருகா
சிந்தையிலே நாம் தாங்கும் தங்கவடி வேலா

அசுரகுல 'மாயை'யுடன் 'காசிபமுனி' உறவு கொண்டு
அவுணர்களைத் தந்தார்களே
அசுரகுரு சொன்னபடி கடியதவம் புரிந்து அவர்
அரிய வரம்பெற்றார்களே

அண்ணனான சூரபத்மன் தம்பிமார்கள் சிங்கமுகன்
தாரகா சூரன் என்பார்
அஜமுகியாம் தங்கையுடன் அமரர்களைத் துன்புறுத்தி
அடி பணிய வைத்தார்களே

பாற்கடலில் பரந்தாமன் சக்கரம் இழந்தான்
பத்மாசூரன் புத்திரனோ சூரியனை வென்றான்
அஜமுகியின் வில்வலனோ முனிவர்களைத் தின்றான்
அமரர்களோ அசுரருக்கு மீன் சுமந்து தந்தார்

இந்திரனை அசுரதேவன் இழுத்துவரச் சொன்னான்
இதை அறிந்து அமரராஜன் நிலைகுலைந்து போனான்
சீர் காழிச் சோலையிலே தலை மறைவாய் நின்றான்
மூங்கில் மரமாகியே உருமாறி வாழ்ந்தான்

வாயுதேவன் அஞ்சி ஓடி கார் இருளில் மறைந்து வாழ
வருண தேவன் கடலுள் ஒளிந்தான்
அசுரர்களின் ஆணைகேட்டு அக்கினியும் அடிபணிந்தார்
அமரர் எல்லாம் அடிமைகளானார்கள்

தக்சனது வேள்வியிலே இந்திராதி தேவர்களும்
இஸ்டமுடன் இணைந்தே நின்றார்
ஈசனுக்கு எதிரான இளி செயலால் தேவர்களும்
ஊழ்வினையால் உளமே நொந்தார்

இந்திரனும் தேவருடன் இமய மலை சென்றான்
ஈசன் அருள் வேண்டி அங்கு அரிய தவம் செய்தான்
எல்லாமே அறிந்த சிவன் தரிசனமும் தந்தான்
தன் மகனால் துன்பம் எல்லாம் தீரும் என்று
சொன்னார்

இமவானின் மகளாக உமையவள் வளர்ந்தாள்
பரமசிவன் துணைநாடிப் பணிவிடைகள் செய்தாள்
கானகத்தில் தவம்புரிந்து விரதங்களும் இருந்தாள்
பரம் பொருளைத் தினம் நினைத்து மனம் உருகி
நின்றாள்

சனகாதியோருக்கு ஞானத்தை எடுத்துரைக்க
சங்கரனார் நிஷ்ரையிருந்தார்
மன்மதனின் மலர் அம்பு நிஷ்ரையினைக் கலைத்துவிட
காமனையே பொடியாய்ச் செய்தார்

பார்வதியைக் கைப்பிடித்து பாலகனும் அவதரித்தால்
தேவர் துயர் தீரும் என்றார்
இந்திரனின் வேண்டுதலை ஆதிசிவன் செவிமடுத்தான்
அமரர்களும் மகிழ்ந்தே நின்றார்.

புரோகிதர்கள் சேர்ந்தே மந்திரங்கள் ஓத
முனிவருடன் தேவரும் முன் இருந்து வாழ்த்த
பரமசிவன் பார்வதியின் கரம் பற்றி நின்றான்
பிறவிப்பயன் கிடைத்ததென்று பார்த்தவர் மகிழ்ந்தார்

மன்மதனின் உயிர்மீட்டு `ரதி' மட்டும் காண
பரம்பொருளே வரம் கொடுத்து `ரதி' மகிழச் செய்தான்
மணவினைகள் முடித்துவிட விடை கொடுத்துச் சென்றான்
மனைவியுடன் மனம் மகிழ்ந்து கைலைமலை சேர்ந்தான்

அசுரர்களின் அட்காசம் அடங்காது போயிடவே
ஈசனிடம் இந்திரன் சென்றான்
தலைவிரித்து ஆடிடும் கொடுமைகளைச் சொல்லிவிட்டு
தாங்கிக் கொள்ள முடியாதென்றான்

தன்னுடைய சக்தி அன்றி அழிவில்லை அசுரருக்கு
வரந்தந்தார் பரமன் அன்று
அகந்தையால் அறிவிழந்த அவுணர்களை அழித்திடவே
நெற்றிக் கண் திறந்தார் இன்று

நெற்றிக்கண் உமிழ்ந் தெறிந்த தீப்பொறிகள் ஆறும்
கங்கையினால் தாங்கியே காங்கேயன் ஆகி
சரவணத்துப் பொய்கையிலே சரவணனும் ஆகி
கார்த்திகைப் பெண் வளர்த்த கார்த்திகேயன் ஆனான்

சரவணத்தில் வளர்ந்துவந்த செல்வங்களைக் காண
பரமசிவன் தேவியுடன் பொய்கைக் கரை வந்தார்
அறுவரையும் உமை அணைக்க ஆறுமுகன் தோன்றி
அனைவருக்கும் கந்தனாகக் காட்சி அளித்தானே

சோமஸ்கந்த காட்சியினை சரவணத்தில் காட்டியவர்
கைலைமலை சென்றார்களே
பார்வதியின் காற்சிலம்பில் நவமணிகள் சிதறி அங்கு
நவசக்திகள் வந்தார்களே

சக்திகளின் நாபிவழி நவவீரர் வெளிவந்து
முருகனோடு நின்றார்களே
நவதேவி வியர்வையினால் உருவான ஒரு லெட்சம்
வீரர்களும் சேர்ந்தார்களே

ஓம் கார ரூபனாக முருகனே வந்தான்
ஓம் என்னும் பிரணவத்தின் உட்பொருளைக் கேட்டான்
பிரம்மனோ தடுமாறி மௌனியாய் நின்றான்
சென்னியில் குட்டியே சிறையினில் அடைத்தான்

மந்திரத்தின் பொருள் கேட்ட ஈசனையே இருத்தி
குருவாகி மந்திரத்தின் பொருள் கூறிச் சென்றான்
தந்தைக்கே உபதேசம் செய்ததனால் கந்தன்
தகப்பன் சுவாமி என்று பெயர் வாங்கினானே

அசுரர்குலம் அழிந்திடவே ஆறுமுகன் அவதரித்தான்
அதுகண்டு தேவர் மகிழ்ந்தார்
அவுணர்குலத் தலைவர்களோ கதிகலங்கி மதிமயங்கி
அபசகுனத் தடைகள் கண்டார்

இந்திராதி தேவர்களும் கந்தவேளைச் சரண் அடைய
கந்த கிரி நாடிச் சென்றார்
லெட்சத்து ஒன்பது பேர் புடை சூழச் சரவணனும்
விஸ்வரூப தரிசனம் தந்தார்

சிவன் இட்ட கட்டளையை சிரசுமேல் ஏற்றான்
சிறுவனோ அசுரர்களைக் கொன்றிட எழுந்தான்
சிவசக்தி வேல் தந்து வழிஅனுப்பி வைத்தாள்
சாரதியாய் வாயுவும் தேரோட்டிச் சென்றான்

சூரபத்மனின் தம்பி தாரகனைக் கொல்ல
சுப்ரமண்யன் வில் விளைத்து அம்புகளை விட்டான்
கிரவுஞ்ச மலையினையும் அசுரனையும் வீழ்த்தி
தாரகா சூரனது ஆவியைப் பிரித்தான்

தாரகா சூரனவன் உயிரற்று வீழ்ந்திடவே
தேவர் மலர் தூவி மகிழ்ந்தார்
அசுரர்களை வதஞ்செய்யப் புறப்பட்ட வேல்முருகன்
வீரருடன் தென்திசை சென்றார்

இமயத்தின் எல்லையினை அவர் கடந்த வேளையிலே
'தேவகிரி' வந்தார்களே
ஆலயம் ஒன்றமைத்து குமரனையே உள்ளிருத்தி
அர்ச்சனைகள் செய்தார்களே

தேவசேனை புடைசூழ தென்புலம் நகர்ந்தார்
கேதார சேத்திரமும் காசியும் கடந்தார்
ஸ்ரீசைலம் சென்று அவர் வேங்கடம் அடைந்தார்
காளத்தி காஞ்சிபுரம் அண்ணாமலை சேர்ந்தார்

திரு வெண்ணை நல்லூரும் சிதம்பரமும் வந்தார்
மணி ஆற்றங் கரைதனிலே ஓய் வெடுத்து நின்றார்
திருச் சேய்ஞ்ஞலூரிலே ருத்திரனே வந்தார்
பாசுபத அஸ்திரத்தை முருனுக்குத் தந்தார்

திருவாரூர் வான்மீக நாதரை வணங்கியவர்
திருப்பரங்குன்றம் வந்தார்
மீன்களாகி மீண்டு வந்த பராசரர் புதல்வர்களை
தம்முடனே அழைத்தே சென்றார்

திருச் செங்கூர் சென்றவர்கள் கடலோர நகரான
திருச்செந்தூர்ப் பதி நாடினார்
சூரபத்மன் முதலான அசுரர்களின் வரலாற்றை
பிரகஸ்பதி கதையாய்ச் சொன்னான்

தேவகுரு கதைகேட்டுக் குறுநகை புரிந்தான்
தேவர்துயர் தீரும் என்று திருவாய் மலர்ந்தான்
அசுரரை அழிக்கவே அவதாரம் என்றான்
அவுணர்குலம் பொடியாகும் இது திண்ணம் என்றான்

அறுமுகனின் அருள் வார்த்தை ஆறுதல் அளிக்க
வானவரும் முனிவர்களும் அகமகிழ்ந்து நின்றார்
சூரனிடம் வீரவாகு தூதுவனாய்ச் செல்ல
ஆறுமுகன் ஆணையிட்டு வழியனுப்பிவைத்தான்

சூரபத்மன் வாழுகின்ற நகரத்தை நாடியே
வீரவாகுத் தேவன் சென்றான்
சிறைக் கூடம் சென்று அவன் தேவர்களைக்
கண்ணுற்று
ஆறுமுகன் தூதன் என்றான்

ஆறுதலைக் கூறிவிட்டு மாளிகையின் உள் நுழைந்து
அத்தாணி மன்றம் சென்றான்
அசுரர்களின் தலைவனிடம் தூது வந்த காரணத்தை
அமைதியாக எடுத்தே சொன்னான்

அமரர்களின் துயர் துடைக்க வந்துதித்த கந்தன்
ஆறுமுகப் பெருமானின் வீரர்களுள் ஒருவன்
வீரவாகுத்தேவன் நான் தூதுவனாய் வந்தேன்
தேவர்களை விடுவித்தால் வந்த வழி செல்வேன்

தாரகா சூரனுடன் கிரவுஞ்ச மலையும்
இரு கூறாய் வீழ்ந்த பின்னர் நாம் வந்தோம் என்றான்
தாமதித்தால் உன்னுடன் உன் சுற்றமும் அழிக்க
படை எடுத்து வந்திடுவோம் பதில் சொல்லும் என்றான்

தூதுவனாய் வந்ததாலே உயிர் பிழைத்தாய் என்ற
சூரன்
ஆணவத்தால் தன்னை மறந்தான்
காவலரை ஏவிவிட்டு தூதுவனைச் சிறை பிடித்து
இழுத்துவர ஆணை இட்டான்

வீரவாகு காவலரை ஒரு நொடியில் கொன்றழித்து
வேகமாக செந்தூர் வந்தான்
நடந்தவற்றைக் கேட்டறிந்து கொதித் தெழுந்த
வேல்முருகன்
போர் தொடுப்போம் நாளை என்றான்

அன்னத்தில் நான்முகனும் கருடனில் திருமாலும்
ஐராவதத்திலே இந்திரனும் ஏற
மனவேகத் தேரிலே வேலவன் இருக்க
வாயுவே சாரதியாய்த் தேரோட்டிச் சென்றான்

வீரவாகுத் தேவருடன் வீரர்களும் செல்ல
வீரமுடன் பூதபடைஅணிவகுத்துப் போக
சூரர்களைக் கொன்றே தேவர் துயர் தீர்க்க
மகேந்திரபுரி எல்லையிலே பாசறை அமைத்தார்

ஹேம கூடம் என்று அந்தப் பாசறைக்கு நாமம் இட்டு
சேனை சூழ வேலன் நின்றான்
சேதி கேட்ட சூரபத்மன் சீற்றமுடன் வெகுண்டெழுந்து
தன் மகனைக் களம் அனுப்பினான்

வீரபாகுத் தேவனுடன் பூதங்களும் சேர்ந்தெதிர்க்க
பானுகோபன் பின்வாங்கினான்
இதை அறிந்த சூரபத்மன் தான் சென்று எதிரிகளை
அழித்துவிடச் சபதம் செய்தான்

சிங்கமுகன் மைந்தனான அதிசூரனோடு
தாரகா சூரன்மகன் அசுரேந்திரன் வந்தான்
இருவருமே அசுரபடைத் தளபதியாய்ச் சென்றார்
சூரபத்மன் போர்க்களத்தில் முருகனெதிர் நின்றான்

பூதப்படைத் தளபதியால் அதி சூரன் மாண்டான்
அசுரேந்திரன் களம் இறங்கி போர் புரியச் சென்றான்
வீரபாகுத் தேவரினால் தலை அறுந்து வீழ்ந்தான்
சூரபத்மன் இதை அறிந்து கொதித்தெழுந்து நின்றான்

ஆவேசம் கொண்ட சூரன் முன்னணிக்கு ஓடிவந்து
அமரர் வீழ பாணம் தொடுத்தான்
சூரபத்மன் அஸ்திரத்தால்தேவசேனை கொந்தளிக்க
ஆறுமுகன் முன்னே வந்தான்

கோடி சூர்ய ஒளியுடனே குமரன் தங்கத் தேரில் வர
கொக்கரித்தான் பத்மா சூரன்
திருமாலும் நான்முகனும் சூரனென்றால் துவண்டிடுவர்
திரும்பிப்போ சிறுவா என்றான்.

ஆயிரத்தெட்டண்டமும் நீ ஆண்டு வந்தாய்
ஆணவத்தால் அறிவிழந்து அழிந்து போக வந்தாய்
அமரர்களைச் சிறையிலிட்டு அவர் பொருள் கவர்ந்தாய்
ஆதி சிவன் சக்தியாலே அழியா வரம் பெற்றாய்

சிறுவன் சொன்ன வார்த்தைகளைன் கேட்டிடாத சூரன்
சீறிப் பாயும் பாணங்களை முருகன் மீது போட்டான்
பாணங்களைப் பார்த்த வேலன் புன்னகை புரிந்தான்
பத்மாசூரன் செருக்கழிக்க அஸ்திரத்தை விட்டான்

குடைஅறுந்து முடிதெறித்து நகைதொலைத்து நின்ற சூரன்
நிலைகுலைந்து தனியாய் நின்றான்
சுழன்று வந்த சக்கரத்தால் சூழநின்ற அசுரர் குலம்
தலை அறுந்து களத்தில் வீழ்ந்தார்

அஸ்திரங்கள் பலவிடுத்து தோல்வி கண்ட சூரபத்மன்
சிவபாணம் தொடுத்தே நின்றான்
*தந்தையாரின் அஸ்திரத்தை பணிவுடனே கையில் ஏந்தி*
"தவறுணர்ந்தால் பிழைப்பாய்" என்றான்

மாயையினால் தனை மறைத்து மாளிகைக்குச் சென்றான்
மறுபடியும் போர்புரியும் மார்க்கம் தேடி நின்றான்
ஈசன் மகன் வேல்ப் படையால் இரணியனும் தோற்றான்
அக்னிமுகன் சிங்கமுகன் பானுவும் அழிந்தார்

அவுணர் சேனை திரண்டு செல்ல சூரன் மீண்டும் வந்தான்
அமரர் படைத் தலைமை ஏற்று வேலனும் எழுந்தான்
இருபடையும் உக்கிரமாய் சமர் புரிந்து நின்றார்
முருக வேளும் வில் வளைத்துப் பாணங்கள் சொரிந்தார்

ஆறுமுகன் அஸ்திரங்கள் பன் மடங்காய் பெருகிவந்து
அசுரர்களைக் கொன்றழித்ததே
சூரபத்மன் மன நிலையோ சூழ்ச்சிகளால் வெல்வதற்கு
மாயையிடம் சரணடைந்ததே

பல உருவாய் பறவையுமாய் பல அண்டம் சென்ற சூரன்
பலம் இழந்து தனியாய் நின்றான்
அழியாத தன்உருவை சூரனுக்கு காட்டிடவே
விஸ்வரூபக் காட்சியும் தந்தான்

ஆறுமுகக் கந்தனின் பேருருவவைக் கண்டான்
அகந்தைகள் அடங்கியே சூரனும் பணிந்தான்
பேர் உருவம் மாறியே சிறுவனானகத் தோன்ற
போர்க்குணம் மிகுந்து மீண்டும் வல் அசுரன் ஆனான்

மாயையின் மந்திரத்தை மனதில் நினைத்தான்
மாய இருள் ஆகியே கர்ஜ்ஜனைகள் செய்தான்
மாயையைக் கொன்றழித்து சூரனைப் பிளக்க
வேலினை ஏவினானே செந்தில் வடிவேலன்

சீறியே பாய்ந்துவரும் வீரவேலைக் கண்ட சூரன்
மாமரமாய் உயர்ந்தே நின்றான்
சிவசக்தி வேலவனின் வெற்றிவேல் ஊடுருவ
இரு கூறாய் பிளந்தே வீழ்ந்தான்

இறைவனிடம் சூரன் பெற்ற இறவாத வரங்களினால்
சேவல், மயில் இரண்டாய் வந்தான்
மயிலைத் தன் வாகனமாய் சேவலையும் கொடியாக்கி
பத்மாசூரன் மமதையை ஒழித்தான்

ஜயந்தனுடன் தேவர்களை சிறைமீட்ட கந்தன்
போர்க்களத்தில் உயிர்நீத்த பூதங்களை மீட்டான்
தேவசேனை சூழ்ந்துவர திருச் செந்தூர் வந்தான்
ஈசனுக்கு முறையான பூசைகளைச் செய்தான்

செந்தில் பதி விட்டகன்று வேல் முருகன் சென்றான்
கூடல்மாநகர் அருகே தங்குவோம் என்றான்
திருப்பரங்குன்றதிலே மனமுவந்து நின்றான்
தேவயானை கரம்பிடிக்கச் சம்மதத்தைச் சொன்னான்

அமிர்தவல்லி சுந்தரவல்லி சோதரிகள் இருவருமே
திருமாலின் புதல்வியராவார்
முருகன்மேல் ஆசை கொண்டு அரியதவம் செய்தவரை
பூவுலகில் மணப்பேன் என்றான்

அமிர்தவல்லி தேவயானை தெய்வேந்திரன் புதல்வியாகி
முருகன் துணை நாடி இருந்தாள்
தேவராஜன் ராணியுடன் தேவானையைக் கைப்பிடித்து
குமரனுக்கே தத்தம் செய்தார்

பரமசிவன் தேவியுடன் பரங்குன்றம் வந்தான்
வேலவனின் திருமணத்தைக் கண்குளிரப் பார்த்தான்
கந்தபுரி சென்ற வேலன் வள்ளியை நினைந்தான்
வள்ளிமலைப் பக்கம் உள்ள திருத்தணிக்கு வந்தான்

சிவமுனிவன் மகளாகி மான் வயிற்றில் சேர்ந்தே
சுந்தரவல்லி அவள் நம்பி மகள் ஆனாள்
தோழியுடன் தினைப்புனத்தைக் காவல் காத்துவந்தாள்
வள்ளியாக வளர்ந்தவளை நாரதமுனி கண்டார்

மனம் மகிழ்ந்த நாரதரும் முருகனிடம் சேதி சொல்ல
தணிகை மலை நாடியே வந்தார்
வள்ளி நங்கை பேரழகை விதவிதமாய்ச் சொல்லியவர்
வேலனுக்கு ஏற்றவள் என்றார்

நம்பிராஜன் புத்திரிக்கு அருள்புரிவோம் என்ற கந்தன்
வேடுவனாய்த் தினைப் புனம் சென்றார்
வள்ளியுடன் பேசுகையில் நம்பி வரும் அரவம் கேட்டு
வேங்கை மரமாகியே நின்றார்

நம்பிராஜன் வந்து செல்ல வேடுவனாய் மாறி
மணம் முடிக்கச் சம்மதத்தை வள்ளியிடம் கேட்டான்
முறை தவறி நடந்திடும் பெண் நான் இல்லை என்றாள்
"தயைகூர்ந்து இங்கிருந்து போய்விடுங்கள்" என்றாள்

முதுமையான சிவனடியார் வேடம் புனைந்தார்
வேட ராஜன் நம்பி முன்னே தள்ளாடி வந்தார்
மன அமைதி வேண்டி இங்கு வந்ததாகச் சொன்னார்
மகளுடனே தங்கும்படி நம்பியும் பகன்றார்

தேனுடனே தினைமாவும் பிசைந்து வள்ளி தந்திடவே
ஆவலுடன் வாங்கியே உண்டார்
தாகத்துக்குத் தண்ணி கேட்டு விக்கி விக்கி தவித்த அவர்
மோகம் தீர வழியைக் கேட்டார்

முதியவரின் சபல எண்ணம் புரிந்தவராய் வள்ளியம்மை
கானகத்தே ஓடிச் சென்றாள்
ஆனைமுகன் அண்ணன் வந்து யானையாகத் துரத்திவர
தாத்தாவை இறுக அணைத்தாள்

போதும் என்று விளையாட்டை நிறுத்திய மால்மருகன்
ஆறுமுகக் கந்தனாகக் கண் எதிரில் நின்றார்
தான் வணங்கும் வேல்முருகன் தரிசனத்தைக் கண்டாள்
கண் கலங்கி மெய் சிலிர்த்துப் பாதங்களில் வீழ்ந்தாள்

சிறு பிரிவும் தாங்க வொண்ணாச் சிற்றிடையாள் வள்ளி
அவள் துயரம் தீர்க்க வென்று உடன் அழைத்துச் சென்றான்
கள்வனோ கவர்ந்ததென்று நம்பி தேடிச் சென்றான்
தணிகையிலே முருகனுடன் வள்ளியையும் கண்டான்

கவர்ந்துசெல்லல் இழுக்கு என்று தமது ஊரில் இருவருக்கும்
திருமணத்தை முடித்தே வைத்தான்
நாரதரும் வாழ்த்துரைக்க தேவர்களும் பூச்சொரிய
'கந்தபுரி' அழைத்தே சென்றார்

தங்கை வள்ளி நாயகியை குமரனுடன் வரவேற்று
தெய்வயானை அழைத்தே சென்றாள்
பக்தர் குறை தீர்ந்திடவே தெய்வயானை வள்ளியரை
அணைத்தபடி காட்சி கொடுத்தார்

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று

மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்று
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

பொங்கி வந்த அசுரர்களை போரில் வென்ற தீரனுக்கு
மங்களமோ ஜெய மங்களம்
கோழிக்கொடி தாங்கி நின்று குலவு மஞ்ஞை ஏறிவரும்
குமரனுக்கு ஜெய மங்களம்
கந்தபுராணச் சாரத்தினை விருப்புடனே கேட்டுணர்ந்த
பக்தருக்கும் ஜெயமங்களம்
வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருந்து காட்சி தரும்
வேலனுக்கும் ஜெய மங்களம்

பாடல் : இரா.தெய்வராஜன்

## தமிழ்க் குமரன் பாமாலை

மாமாங்கக் கணபதியின்தாள் பணிந்து நின்றோம்
மயிலேறும் பெருமானை நாம் பாட வந்தோம்
தடையேதம் நேராமல் நீ காக்கவேண்டும்
தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகனே சரணம்

திருக்கோவில் ஸ்ரீ சித்ர வேலவனைக் கண்டோம்
தீராத மனச் சுமைகள் நீங்க வழி கேட்டோம்
தமிழர் படும் இன்னல்களை மன முருகச் சொன்னோம்
துயர் மாறத் தமிழ்க்குமரன் சேவடி பணிந்தோம்
(அரோகரா)

சித்தாண்டி வேலவனின் எழில் காண வேண்டும்
சித்தமுடன் கசிந்துருகி நாம் பாடவேண்டும்
சீர் அழியும் தமிழர்கதை சொல்லி அழவேண்டும்
சிங்கார வேலனே எம் துயர் மாற்றவேண்டும்

மாவிட்டபுரக் கந்தன் கண் திறக்கவேண்டும்
மாண்புடனே தமிழர் இனித் தலை நிமிரவேண்டும்
மகிழ்வுடனே எம் மண்ணில் நாம் வாழவேண்டும்
மாணிக்க வடிவேலன் அருட்பார்வை வேண்டும்
(அரோகரா)

மண்டூர் முருகனின் மனம் இரங்கவேண்டும்
புண்பட்ட நெஞ்சத்தில் மகிழ்வூட்ட வேண்டும்
பண்பாடு மறவாத தன்மானம் வேண்டும்
கண்கண்ட தெய்வமே வழிகாட்டவேண்டும்

நல்லூர்க் கந்தனே எமைப் பார்க்கவேண்டும்
நல்லவராய் யாவரையும் நீ மாற்றவேண்டும்
தொல்லையின்றி வாழ்வாங்கு வாழவரம் வேண்டும்
வல்லசுரர் செருக்கழித்த உன் துணையே வேண்டும்

தாந்தாவில் சண்முகன் வேலோடு நின்றான்
தமிழர் துயர் தீர்த்திடவே ஓடோடி வருவான்
தமிழ்ச் சங்கம் வைத்தே ஆய்வு பல செய்தான்
தரணியிலே தமிழரினம் வாழ வழி செய்வான்

உகந்தை மலை வீற்றிருக்கும் முருகனே வாராய்
அகந்தையாலே அறிவிழந்தோர் திருந்த வரம் தாராய்
இகமதிலே தமிழர் இனம் அலைகிறதே பாராய்
உரிமையுடன் எமைக்காக்க உடன் வந்து சேராய்
(அரோகரா)

கதிர்காமப்பதி வாழும் ஆறுமுகக் கந்தா
கதி எமக்கு வேறில்லை ஈராறு தோளா
விதி என்று நாம் தொடர்ந்து வாடுவது முறையா
பதில் சொல்ல வேண்டும் மயிலேறி நீ வா

தொண்ட மானாற்றில் உறை சந்நிதிச் செல்வா
தெய்வானை வள்ளி மகிழ் தங்க வடிவேலா
தாங்காது சோதனைகள் தவிக்கின்றோம் குமரா
தொய்யாது தமிழ் மானம் காத்திடவே நீ வா
(அரோகரா)

உன்பாதம் பணிந்தோமே சிவக்கனலே முருகா
வன் மனமே இல்லாத உறவுகளை நீ தா
பொன் பொருளை நாடி நாம் வரவில்லை குமரா
அன்பினால் தமிழர் துயர் துடைத் தெறிய நீ வா

முருகாற்றுப் படை நூலின் பாட்டுடைத் தலைவா
அருணகிரியார் பாடும் முத்தமிழ்ச் செல்வா
குருவாகித் தந்தைக்குப் பொருள் சொன்ன குமரா
இருள் ஓடி விடிவுவர ஒளியாக நீ வா

எந்த மதம் சாதி என்ற பேதம் எமக்கில்லை
எப்போதும் எல்லோரும் ஒருதாயின் பிள்ளை
ஏன் வந்ததோ இந்த இன வாதக் கொள்கை
இதை மாற்றித் தரவேண்டும் வேல் தாங்கும் உன்கை

கந்தனின் தந்தை சிவன் திருத்தலங்கள் செல்வோம்
கேதீசா கோணேசா என்றுரக்கச் சொல்வோம்
கற்பூரச் சட்டியுடன் காவடியும் ஆடி
உயிர் அச்சம் இன்றி எங்கும் சென்றுவரக் கேட்போம்

தமிழர் குலத் தெய்வமாம் தமிழ்க்குமரன் வருவான்
தார்மீக வழிநின்று மன அமைதி தருவான்
சன்மார்க்க நெறி தந்து சகலரையும் காப்பான்
சாதி மத பிணக்கழித்து சமரசமும் செய்வான்

பாடல் : இரா.தெய்வராஜன்

## முருகா முத்துக் குமரா

முருகா முத்துக் குமரா திருமாலின் மருகா - உன்
திருவடி பணிந்தோம் செந்தூர் வடிவேலனே - உன்
திருவருள் ஒன்றே என்றும் அது போதுமே
வருவாய் வள்ளி நேசா வரம் தருவாய் உகந்தை
வாசா
சிவசங்கரன் நெற்றிக்கண்ணால் வந்த பாலனே
ஐங்கரன் தம்பி மண்டூர் உறையும் கந்தனே
(முருகா)

ஆறுமுகன் பார்வைபட்டால் அல்லல் அறுந்துபோகும் -
நம்
ஊறு செய்யும் எண்ணம் எல்லாம் தீயில் வீழ்ந்து மாயும்
ஏறுமயில் கோலம் பார்த்தால் ஏழ்மை விலகி ஓடும் -
அவன்
வீறு கொண்ட வேலைக் கண்டால் வெற்றி வந்து சேரும்
நல்ல தமிழ் கேட்டிடவே நாவற்பழம் நீ பறித்தாய்
தொல்லை இன்றி வாழ்ந்திடவே தீயவற்றை நீ அழிப்பாய்
(முருகா)

ஆடி அமாவாசை அன்று தீர்த்தமாட வருவான்
தேடித் திருக்கோவில் வந்தால் வேண்டியதைத் தருவான்
நாடிவரும் அடியாருக்கு கோடி நன்மை செய்வான்
பாடிப் பரவும் தொண்டர் வாழ பாவவினை அறுப்பான்
கோவில்க் கொடி ஏறியதும் வீதியுலா வந்திடுவான்
நாவல்பதி வேல்முருகன் நல்லவழி காட்டிடுவான்
(முருகா)

## எனக்கும் இடம் உண்டு

எனக்கும் இடம் உண்டு - அருள்
மணக்கும் முருகன் மலரடி நிழலில்
கார்த்திகை விளக்குப் பெண்களுடன் - திருக்
காவடி சுமக்கும் தொண்டருடன் - தினம்
பூத்திடும் ஞான மலர்களுடன் - ஒரு
புல்லாய் முளைத்துத் தடுமாறும்
(எனக்கும்)

நேற்றைய வாழ்வு அலங்கோலம் - அருள்
நெஞ்சில் கொடுத்தது நிகழ்காலம் - வரும்
காற்றில் அணையாச் சுடர் போலும் - இனி
கந்தன் தருவான் எதிர்காலம்
(எனக்கும்)

ஆடும் மயிலே என்மேனி - அதில்
அழகிய தோகை என் உள்ளம் - நான்
உள்ளம் என்னும் தோகையினால் - கந்தன்
உறவு கண்டேன் ஆகையினால்
(எனக்கும்)

# சாயி பாடல்கள்

## சிவசக்தி ஸ்வரூபனே

சிவசக்தி ஸ்வரூபனே சாயி நாதா - எங்கள்
சிந்தை எல்லாம் குளிர செந்தமிழ் அருள்வாய்
குவலயத்துன் புகழ் பாடிடும் அன்பர்கள்
குறைவில்லா நிறைவுகள் அருளிய மறையோனே
(சிவசக்தி)

தவம் முறை நிலை என்னும் தனி இன்பம் கண்டவன் நீ
தன்னிகரில்லா தனிப் பெருங் கருணையே
நலமுடைய வாழ்வெனும் நல்லவை அருள்வாய்
நானுந்தன் பாதாரம் நம்பியே இருக்கின்றேன்
அரநாரி ப்ரம்பமமாய் அமர்ந்தவன் நீ என்பார்
அருளுடைய இராமகிருஷ்ணர் அவதாரம் நீ என்பார்
பெரும் பெயர் முருகோனும் பேசுவர் நீயென்றே
அருள் தந்து எங்கள் உள்ள இருள் நீக்க வேண்டிநின்றோம்.
(சிவசக்தி)

## கலியுகத்தில் அவதரித்த

கலியுகத்தில் அவதரித்த கண்கண்ட முதல் தெய்வம்
ஈஸ்வராம்பா ஈன்றெடுத்த சாயி நாதனே
ஆந்திராவில் நீ பிறந்து அகிலமெல்லாம் காத்தருளும்
சர்வலோக நாயகனே சாயி தெய்வமே
(கலியுக)

ராமகிருஸ்ணர் வாழ்ந்திருந்த யுகங்களை நாம் பார்த்ததில்லை
பர்த்தியிலே உமைக் கண்டோம் சாயி நாதனே.... - எம்மை
பாதுகாத்து வழி நடத்தும் சாயி தெய்வமே
(கலியுக)

வல்ல சாயி தேவன் எம்மை சோதனையில் வாட்டுவது
பொல்லா வினை அறுத்து வாழ வைக்கவே - இதை
உணர்ந்தோம் உமை மறவோம் சாயி தெய்வமே
(கலியுக)

கருணைமிகு இயேசுவும் நீ நபிகள் நாயகம் நீ
கௌத்தம புத்தரும் நீ சாயி நாதனே - என்றும்
சர்வ மத சம்மதனே சாயி தெய்வமே
(கலியுக)

இலவசமாய் கல்வி தந்து பசி போக்கும் அன்னபூர்ணி சாயியே
பருக நல்ல நீர் வழங்கி நோய் நொடிக்கு மருந்தளிக்கும் சுவாமியே
மாதவனின் பூசை என மானிடர்க்குச் சேவை செய்ய
மாறாத மனம் தருவாய் சாயி தெய்வமே
மாறாத மனம் தருவாய் சாயி தெய்வமே
மாறாத மனம் தருவாய் சாயி தெய்வமே

## ஜெய் சாயி ராமா சத்ய சாயி ராமா

ஜெய் சாயி ராமா சத்ய சாயி ராமா
ஜெகம் தனைக் காத்து ரெட்சிக்கும் ஸ்ரீ சாயி ராமா
(ஜெய்)

சேய் நலந்தனைக் கண்டு தாயுள்ளம் மகிழ்வது போல்
என் இசைதனை ரசிக்கும் ஆனந்த ராமா
(ஜெய்)

பக்தி என்னும் விதையை சித்தமதில் பதித்து
நித்தம் உன்னைத் துதிக்க சக்திதனை அளிக்கும்
சாந்தி எனும் இன்பம் தாங்கி வரும் எங்கள் தெய்வம்
ஏங்கித் தினம் தவிக்கும் மாந்தருக்கருள் செய்யும்
(ஜெய்)

## சத்யசாயி பாபா சரணம் ஐயா

**தொகையறா**

கார்மேகக் கண்ணனைப் போலே
காளை முருகனைப் போலே
கயிலை மலை அப்பனைப் போலே - நாங்கள்
எண்ணுகின்ற தெய்வம் போலே
எங்களுக்குக் காட்சி தந்து இடர் நீக்கும் திரு விளக்கே
சத்ய சாயி பாபா சரணம் ஐயா

பாடல்
சத்யசாயி பாபா சரணம் ஐயா
நித்தம் உனைப் பணிந்தோம் சரணம் ஐயா ஐயா
(சத்யசாயி)

சத்ய சாயி பாபா....... சத்ய சாயி பாபா

கும்பிட்டு நின்றால் குறை தீரும் என்றே
நம்பிக்கை கொண்டோம் சரணம் ஐயா ஐயா
(சத்யசாயி)

பிறர் துன்பம் நீக்கப் பிறந்தவரே
பேரின்ப ஒளியாக உதித்தவரே
தெய்வங்கள் போலே வந்தவரே
தெரிசனம் தந்து ஆள்வீரே ஐயா
(சத்யசாயி)

## சத்ய சாயிபாபா சமரசம் கமழ் பூவா

சத்ய சாயிபாபா சமரசம் கமழ் பூவா
அருள் செய்வாய் நீ அருள் செய்வாய்
(சத்யசாயி)

நித்தமுன் பதமலர் நினைத்திடில் சாந்தி
நிலை பெறத் தெளிந்த நன் நீ ஒரு காந்தி
(சத்யசாயி)

அன்பிற் பழுத்த செழும் அற்புதக் கனியே
அருட்பெரும் ஜோதி மெய்யான மாமுனியே
இன்பப் பெருக்காய் வந்த இணை அருள் கனியே
ஈடேற்றி வைத்திடுவாய் அடியேனை இனியே
(சத்யசாயி)

## சத்ய சாயி நாதன் சாந்தஸ்வ ரூபன்

சத்ய சாயி நாதன் சாந்தஸ்வ ரூபன்
சந்ததமும் அன்பரைக் காக்கும் தயாளன்
(சத்ய)

சித்தரும் யோகியரும் சிறந்த பண்புடையோரும்
சிந்தை மகிழ்ந்து காண விந்தை பல புரிவான்
(சத்ய)

நேரினிலே கண்டு நெஞ்சம் உருகி நின்று
நீயே துணை பாபா எனத் துதிப்போர்க்கு கென்றும்
கோரிடும் வரம் அனைத்தும் கொடுத்தருள் புரிந்திடவே
குவலய மீதினிலே அவதரித்த ஞானி
(சத்ய)

சத்யசாயி நாதா
சத்யசாயி நாதா

## சாயி நாமம் சாயி நாமம் சத்ய நாமம் வாழ்கவே

சாயி நாமம் சாயி நாமம் சத்ய நாமம் வாழ்கவே
பர்த்தி வாழும் பரமன் நாமம் பவித்ர நாமம் வாழ்கவே
காவி உடையில் ஜோதி வடிவில் தோன்றும் சாயி நாமம் வாழி
கோவில் உருவாய் கீதை மொழியாய் மலரும் சாயி மகிமை வாழி
(சாயி நாமம்)

மாயாவி மாதவனாகி மணி தீப ஜோதியாகி
அன்பெனும் பாதை தந்தாய் சாயி ராமா
பூவாகி பூங்கனியாகி புவியாளும் தேவனாகி
பாசத்தைப் பரிசாய்த் தந்தாய் சாயிராமா
சாயி வழி சரணாகதி உயிரோ இனி உனக்கே என
ஸ்ரீ பர்த்தியில் உன் பாதத்தில் கலந்த பின் வேறு ஜென்மமேன்
(சாயி நாமம்)

தீராத தாகம் தீர்த்தாய் ஆகாய கங்கை வார்த்தாய்
வராது வந்த மழை நீர் சாயிராமா
வற்றாத நதியைப் போலே அதிலோடும் நீரைப் போலே
ஊரார்க்குக் கருணை செய்தாய் சாயிராமா
அழகாய் வரும் திருமால் ரதம் அதில் ஆடிடும் அருள் ஓவியம்
கார்மேகமாய் யார் மீதிலும் அன்பினைப் பொழியுமே மகிழ்ந்து வாழ்வேன்
(சாயி நாமம்)

சாயி ராம் சத்ய சாயி ராம்!!

## ஜோதிஸ்வரூபமான பாபா

ஜோதிஸ்வரூபமான பாபா - என்றும்
துரிய நிலையில் வளர் பாபா
ஜாதி மதங் கடந்த பாபா - அருள்
சத்திய ஞான சாயி பாபா

(ஜோதி)

சித்து பல புரியும் பாபா - அருள்
சித்தியெல்லாம் படைத்த பாபா
முத்தாய் முளைத்த முழு பாபா - பர
முத்தியும் ஈய வல்ல பாபா

(ஜோதி)

புட்டப்பர்த்தி தந்த பாபா - பரி
பூரண அவதார பாபா
அட்டதிக்கிலும் புகழ் பாபா - நாளும்
அடியேனை ஆண்டருள்வாய் பாபா

(ஜோதி)

## ஒருதரம் சத்யசாயி என்றால்

ஒருதரம் சத்யசாயி என்றால் நம் உள்ளத்தில் இன்பம்
பெருகுமையா
பெருமையுறும் வாழ்வும் பெறக்கரிய சுகமும்
பன்முறை அவர் நாமம் உரைப்பவர்க் கருள்பவனை
(ஒரு தரம்)

ஆழ்ந்த தவயோக சித்தியினால் பல அற்புதங்கள் பாரில்
செய்த மகான்
தாழ்ந்தோர் உயர்ந்தோர் எனும் பேதமில்லான் - என்றும்
தஞ்சம் என்றோர்க்கருளும் கருணையுள்ளான் தன்னை
(ஒரு தரம்)

பாழ்நிலம் எனத் தோன்றும் பாலைவனந் தன்னில் பயன்தரும்
சோலை
- கண்ட பரவச நிலை போல்
ஊழ்வினைப் பயன் எண்ணி ஓய்ந்தவர் வாழ்வில்
ஒளி தர அருள்பவனை உணர்ந்த முறையில்
(ஒரு தரம்)

சத்யசாயி................சத்யசாயி

## ஞானத்தின் உருவானவனே சத்யசாயிபாபா

ஞானத்தின் உருவானவனே சத்யசாயிபாபா
ஞாலத்தைக் காப்பவனே சத்யசாயிபாபா
துதிப்பவர்க்கு அருள்பவனே சத்யசாயிபாபா
துயர்களைத் தீர்ப்பவனே சத்யசாயிபாபா

ஏழைகளைக் காப்பவனே சத்யசாயிபாபா
இன்னல்கள் தீர்ப்பவனே சத்யசாயிபாபா
அந்நாளை சாயிபாபா சத்யசாயிபாபா
இந்நாளில் பிறந்து வந்தாய் சத்யசாயிபாபா
கரம் நல்கும் திருநீறு சத்யசாயிபாபா
கலி தீர்க்கும் அருமருந்து சத்யசாயிபாபா

கலியுகத்தில் தெய்வம் நீயே சத்யசாயிபாபா
கண்கண்ட தெய்வம் நீயே சத்யசாயிபாபா

ஞானத்தின் உருவானவனே சத்யசாயிபாபா
ஞாலத்தைக் காப்பவனே சத்யசாயிபாபா

சத்யசாயிபாபா ......... சத்யசாயிபாபா ...........
சத்யசாயிபாபா

## உன்னைக் கேட்டுப் பார் நீயாரென்று

உன்னைக் கேட்டுப் பார் நீயாரென்று - அந்த
உண்மை அறிவாயோ நீ எவரென்று
அவனைக் கேட்டுப் பார் நீ யாரென்று
அவன்தான் அறிவானே நீ எவனென்று

கள்ளம் நிறைந்த உள்ளம் தன்னைக் கழுவிட வேண்டாமா
காமம் புகுந்து கலக்கிய மனதைத் துடைத்திட வேண்டாமா
நீ ஒருமுறை சொல்லிப் பார் ஓம் சாயி - உயர்
நலங்களைச் சேர்த்திடுமே ஓம் சாயி
(உன்னை)

வீணருக்கும் ஈனருக்கும் அங்கோர் இடமுண்டு
ஊனுருக்கும் உயிருக்கும் அவன் திருமுகம் உண்டு
ஆடாத ஆட்டம் நீ ஆடினாய்
கூடாததெல்லாம் கூட்டாக்கினாய்
திருந்திட ஓர் பரிகாரம் அவன் திருக்கோவில்தான்
ஒருமுறைபோ பலமுறைபோ வருகின்ற தலைமுறை
விளங்கிடும் விளங்கிடும்
(உன்னை)

உலவி வந்த இடத்தை எல்லாம் உலகோர் தொழுகின்றார்
விளங்குகின்ற திருத்தலத்தை - கை குவித்தே
வணங்குகின்றார்
கை கூப்பி நின்றால் கண்ணீர் வரும்
பாபாவின் தோற்றம் கண்ணில் வரும்
நின்றாலும் நடந்தாலும் நினைத்திரு அவர் நாமம்
அதைவிட ஓர் துணையுமுண்டோ
இருக்கின்றவரையிலும் இனியொரு பயமில்லை
(உன்னை)

## ஓம்கார ஓசையுடன் உலகை அழைத்தாய்

ஓம்கார ஓசையுடன் உலகை அமைத்தாய்
பஞ்ச பூதக் கலவை சேர்த்து உயிரினம் தந்தாய்
பகுத்தறியும் பண்பு கொண்டு எம்மைப் படைத்தாய்
பிறவிப் பிணி நீங்கி வாழ மருந்தும் கொடுத்தாய்
சம்சார சாஹரத்துள் மூழ்கவும் வைத்தாய்

தெரியவில்லையே மர்மம் தெரியவில்லையே
தேவரகசியம் இன்னும் புரியவில்லையே

சாயி நாம தியானத்துடன் நாளைத் தொடங்குவோம்
சத்தியம் தர்மம் சாந்தியினால் நாளை நிரப்புபோம்
சத்யசாயி சொற்படியே நடந்து செல்லுவோம்
சகலருமே ஆனந்தமாய் வாழ விரும்புவோம்
இன்பம் என்று இறுமாப்புக் கொள்வதும் இல்லை
துன்பம் கண்டு எப்போதும் துவண்டதும் இல்லை

தெரியவில்லையே மர்மம் தெரியவில்லையே
தேவரகசியம் இன்னும் புரியவில்லையே

ஓடி ஓடி கிராம சேவை செய்து வருகிறோம்
கூடி கூடிக் உன் புகழைப் பேசி மகிழ்கிறோம்
தேடித் தேடி உரியவர்க்கு உதவி செய்கிறோம்
கோடி கோடி நாமம் சொல்லி உன்னை
அழைக்கிறோம்
நாடி நாடி இரும்பைக் காந்தம் இழுப்பதைப் பார்த்தோம்
பாடி பாடி உருகி எம்மை உம்முடன் சேர்ப்போம்

தெரியவில்லையே மர்மம் தெரியவில்லையே
தேவரகசியம் இன்னும் புரியவில்லையே

## மாயாவதாரா மங்களஸ்வரூபா

மாயாவதாரா மங்களஸ்வரூபா
மகிமைப்பிரதாபா சத்யசாயிபாபா

மாயாவதாரா மகிமைப்பிரதாபா
மங்களஸ்வரூபா சத்யசாயிபாபா......

காயெனும் மனதை அன்புக் கனியாக மாற்றி
தாயினும் மேலாக அணைத்தே அருள் ஊட்டும்
(மாயா)

ஓம் எனும் பிரணவ நாதத்திலே - இன்ப
ஓங்காரம் எழுந்திடும் கீதத்திலே
நாம சங்கீர்த்தனம் பாடிடவே
நான்கு வேதங்களின் சாரமதை விளக்கும்
(மாயா)

சத்யசாயி பாபா சத்யசாயி பாபா
சத்யசாயி பாபா

# பலதும் பத்தும்

## ஆதிஷக்தி அம்மன் அருளால்

ஆதிஷக்தி அம்மன் அருளால்
அல்லல் யாவும் அகன்றே விடும்
மோதி முட்டும் துயரம் யாவும்
மாயமாகி மறைந்தே விடும்

ஊரைக் காக்கும் காவல் தெய்வம்
ஆரையம்பதி கண்ணகி
உயிர்கள் உள்ளே உறையும் நீயே
உலகைக் காக்கும் நாயகி

(ஆதி ஷக்தி)

வறுமை இல்லா நிலையைத் தந்து
வாழ்வை மாற்றினாய் - தாயே
பொறமை அன்பு இரக்கம் தந்து
மேன்மை ஆக்கினாய் - நீயே

அம்மா பராஷக்தி ஆரையூர் கண்ணகி
அனைத்தும் நீதானே உமையே பார்வதி
தாயே என்றென்றுறம் சரணம் உன்பதம்
அம்மா சரணம் ஈஸ்வரி சரணம்

(ஆதி ஷக்தி)

இயற்கை சீற்றம் தணிந்தே அம்மா சாந்தம் அடையணும் - தாயே
இரக்கம் இன்றி உயிரை வதைக்கும் உணர்வைத் தடுக்கணும் - தாயே
அம்மா பராஷக்தி ஆரையூர்க் கண்ணகி
அனைத்தும் நீதானே உமையே பார்வதி
தாயே என்றென்றும் சரணம் உன்பதம்
அம்மா சரணம் ஈஸ்வரி சரணம்

(ஆதி ஷக்தி)

## ஆயிரம் கண்ணுடையாள்
## கண்ணகி திருக்குளுத்தி பதிகம்

1. ஆயிரம் கண்ணுடையாள் - நல்ல
அருளுடை பத்தினியாள்
தாயிடம் சரண் புகுந்தால் - அவள்
தஞ்சம் அளித்திடுவாள்

2. பஞ்சம் பசி மறந்தோம் - எதற்கும்
அஞ்சும் மனம் வெறுத்தோம்
துஞ்சுவதும் இல்லை - என்றும்
துவளுதலும் இல்லை

3. உத்தம பத்தினித் தாய் - முதலில்
ஊரக்கை நகர் வந்தாள்
செண்பகச் செல்வி எனும் - சிலையாய்
சிறப்புடன் கோவில் கொண்டாள்

4. தம்பிலுவில் பதியில் - நகர்ந்து
தனிமையில் வீற்றிருந்தாள்
நம்பிடுவோம் அவளை - என்றும்
நன்மைகளே செய்வாள்

5. ஆழியலை அடித்தும் - பேர்
அழிவுகள் எமைத் தொடர்ந்தும்
மேழி பிடிக்கும் எம்மை - என்றும்
மேம்படவே வைத்தாள்

6. ஆயுதப் போர் நிகழ்ந்தும் - மண்ணில்
அமைதி நிலை குலைந்தும்
தாயுள்ளம் கொண்டவளாய் - எம்மைத்
தாங்கியே அவள் நின்றாள்

7. வைகாசி மாதத்திலே - வரும்
வளர்பிறைத் திங்களிலே
குளுத்தியைக் காண வந்தோம் - மனக்
குமுறலை தணித்திடம்மா

8. காலத்தில் மழை பொழிந்தால் - கம
காரரின் மனம் குளிரும்
கல்வியில் தலை சிறந்தால் - கற்கும்
மாணவர் மனம் குளிரும்

9. பிள்ளைகள் மேன்மை கண்டால் - இங்கு
பெற்றோரின் மனம் குளிரும்
உன் மனம் குளிர்ந்தது போல் - அம்மா
எம்மையும் குளிர வைப்பாய்

10. எப்பணி செய்தாலும் - எந்த
எதிர்பார்ப்பும் எமக்கில்லை
தம்பிலுவில் கண்ணகியே - எங்கள்
மனம் குளிரச் செய்தாயே

## மங்கைமாரி தாயாரே

மங்கைமாரி தாயாரே மனமிரங்கிப் பார்த்திடம்மா
எங்கள் குறை தீர்த்திடவே ஈஸ்வரியே வாருமம்மா
கடற்கரை மணற்பரப்பில் கால் புதைய நடந்து வந்தோமே
குடம் குடமாய் சுமந்து குளிர்ந்திடவே பால் சொரிந்தோம்
(மங்கைமாரி)

மடைப்பெட்டி தலையில்வைத்து மாரித்தாயை
காணவந்தோம்
தடைகளைத் தகர்த்துவிடு தலை நிமிர்ந்து வாழவிடு
தாயே உன் மனம் குளிர்ந்தால் தப்பாது விடிவு வரும்
நீயே எம் துணை அம்மா நிம்மதியைத் தாருமம்மா
வானத்தைப் பார்த்திருக்கும் வயல் நிலம் வாடுதம்மா
மௌனத்தைக் கலைத்துவிடு மும்மாரி பொழிந்து விடு
(மங்கை மாரி)

ஐந்திலே வளைந்திடாமல் அடங்காமல் இருந்துவிட்டோம்
அஞ்சாமல் பாவங்களை அரவணைத்தே வாழ்ந்துவிட்டோம்
நெஞ்சிலே உனை நினைத்து நெடுநாளாய்க் கெஞ்சுகிறோம்
வெஞ்சினங்னங்கள் வஞ்சகங்கள் விலக்கிடவே வந்திடம்மா
பூலோக வாழ்வுயர பொருள் பெற உதவிடம்மா
மேலோக வாழ்வினிக்க அருளை அள்ளிக் கொடுத்திடம்மா
(மங்கை மாரி)

## ஜென்மம் நிறைந்தது

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்ட தென்றது சாம்பலும் எங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி(த்) தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க

பாடல் : கவிஞர் வைரமுத்து (இந்தியா)

## இந்தப் புறப்புத்தான்

இந்தப் புறப்புத்தான் நல்லா ருசிச்சிச் சாப்பிடக் கிடைத்தது
அத நெனைச்சித்தான் மனம் உணவு தேடியே அலையுது
அட சுட சுட இடிஅப்பமும் புட்டும் இருக்குதே......
இறால் சொதியில அதப் பினைஞ்சு சாப்பிட எச்சிலு ஊறுது
- உள்ளுக்குள்ளே
(இந்தப்)

மட்டக்களப்பு வாவியில் பிடித்த மட்டறாலுக்குத் தனி ருசி
கோரக்களப்பு- பனிச்சங்கேணி ஆத்து நண்டுக்கு ஒரு ருசி
ரூபஸ் குளத்து செல்வன் மீனுக்கும் விரால் மீனுக்கும்
தனி ருசி
பெரிய களப்புச் சள்ளல் மீனுக்கும் உழுவை மீனுக்கும்
ஒரு ருசி

மணப்புக்கு ஐயாமாசி கல்லாத்துக் கூனியுண்டு
கணயான் - கட்டாப்பாரை கருவாட்டுக் குழம்புண்டு
வெள்ளாடு நாட்டுக்கோழிக் கறியுண்டு பொரியல் உண்டு
சீரகச் சம்பாச் சோறு சுடச்சுட இங்கே உண்டு
உணவிலே ஒரு உறவு இருக்குது ஒவ்வொரு சுவையிலும்
மனசு லயிக்குது
(இந்த)

வெயிலு அனலாய்க் கொதிக்கும்போது வெள்ளரிப் பழத்தை ருசிக்கணும்
வியர்வை உடலை நனைக்கும்போது தயிரு கரைச்சிக் குடிக்கணும்
தோடை எலுமிச்சை பிழிஞ்சு குடிச்சு கோடை வெயிலைத் தாங்கணும்
வாடைக் காத்து வாட்டும்போது இளநீர் நொங்கு பருகணும்
மையோரிக் கிழங்கிற்கு மாறாத தனிச் சுவை
ஒடியல் மா கூழுக்கு எப்போதும் ஒரு சுவை
கொழுக்கட்டை மோதகம் அம்மம்மா என்ன சுவை
பாலப்பம் - வாரப்பம் - குண்டப்பம் தனிச் சுவை
ஒவ்வொரு சுவையிலும் உணவு இருக்குது
சுவைத்துச் சாப்பிட கவிதை பிறக்குது
(இந்த)

மண்டூர்க் கீரை பூசணித் தலைப்பு கடையலுக்கொரு தனிருசி
பொன்னாங்கண்ணி - குப்பைக் கீரைச் சுண்டலுக்கொரு தனிருசி
பிஞ்சுச் சோழன் பச்சைக் கச்சான் அவித்துச் சாப்பிட ஒருருசி
விளாம்பழத்தை தேனும் சேர்த்து குழப்பிச் சாப்பிட ஒருருசி
பினாட்டுடன் தண்ணிச் சோறு ஆஹாஹா என்ன சுவை
பால்ச் சோறு கட்டைச் சம்பல் ஓஹோஹோ என்ன சுவை
பருத்தித்துறை வடை ஆஹாஹா என்ன சுவை
திருக்கோவில் தொதளுக்கு ஓஹோஹோ என்ன சுவை
உணவிலே உற்சாகம் இருக்குது உழைத்துச் சாப்பிட உணர்வு பிறக்குது
(இந்த)

## வளமான பெருவாழ்வை

வளமான பெருவாழ்வை வடிவேலன் தருவான்
வருந்தாமல் இரு நெஞ்சமே - என்றும்
மயங்காமல் இரு நெஞ்சமே

வேலய்யா சித்திர வேலய்யா
முருகையா மண்டூர் முருகையா

நிலையில்லா வாழ்வை நிரந்தரம் என்றே
அலைவதில் ஆசைதான் மிஞ்சுமே - மாய
வலையென நீ உணர்வாய் நெஞ்சமே

வினைகளை அறுத்தே விடியலைக் காண
வழிவகை தந்திடுவான் வடிவேல் முருகனே

வேலய்யா சித்திர வேலய்யா
முருகையா மண்டூர் முருகையா
(வளமான)

பயன் கருதாமல் திருப்பணி தொடர்ந்தால்
பவ வினை கரைத்திடுவான் கந்தனே - மரண
பயமின்றி வாழ வைப்பான் முருகனே

உனை நீ அறிவாய் உண்மையைக் காண்பாய்
உயிர்களுள் உறைவது முருகன் என்றுணர்வாய்

வேலய்யா சித்திர வேலய்யா
முருகையா மண்டூர் முருகையா
(வளமான)

பாடல் : இரா.தெய்வராஜன்



# வாழ்த்துரை

## மைத்துனரின் இசை ஆர்வம்

சின்ன வயசிலிருந்தே இசை என்ற மகா சமுத்திரத்தில் இறங்கி அதன் முத்துக்களை எடுக்காவிட்டாலும் அதன் கரையினில் நின்று கிளிஞ்சல்கள் பொறுக்கிய அனுபவத்தில் என் மைத்துனர் இரா. தெய்வராஜன் அவர்கள் தனது பிரயத்தனத்தால் இசையின் நுணுக்கங்களை கற்றுக்கொண்டு பல பாடல்களை தானே எழுதி இசையமைத்து அறுபதுகளில் மேடை நிகழ்ச்சிகளில் பாடியவர். சற்று வளர்ச்சியடைந்து மட்டக்களப்பில் இசைக்குழு அமைத்து அதில் பிரதம பாடகராக இருந்ததோடு மற்றப் பாடகர்களுக்கும் இசையின் நெளிவு சுளிவுகளை சொல்லிக் கொடுத்தவர். மறைந்த மட்டக்களப்பின் கவிஞர் எருவில் மூர்த்தி அவர்கள் எழுதிய பாடல்களுக்கு இவர் இசையமைத்து அதை இலங்கை வானொலியில் பாடினார். சிறந்த கவிஞராகவும் இவர் இருப்பதால் பல பக்திப் பாடல்களை எழுதி மெட்டமைத்து பாடி இருகின்றார். இவர் பாடிய பாடல்கள் இன்று மட்டக்களப்பு பிரதேசங்களில் உள்ள கோவில்களில் ஒலிக்கின்றன. பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பார்களே அதுபோல இவருடன் சேர்ந்து சில பாடல்களை நானும் பாடியது என் பாக்கியம். பஜனைப்பாடல்கள், கும்மிப் பாடல்கள், காவியங்கள் திருப்பள்ளி எழுச்சிகள் காவடிப்பாடல்கள், கதிர்காம பாத யாத்திரை விருத்தம், என்று இவர் பாடிய பாடல்கள் ஏராளம். இவர் எழுதிய சத்ய சாயி கீதங்களை இசையரசி பி.சுசிலா அவர்களும் மலேசியா வாசுதேவன் அவர்களும் மகாநதி சோபனா அவர்களும் இசையமைத்து பாடி இருக்கிறார்கள். மேலும் இவர் எழுதிய பல மெல்லிசைப் பாடல்களை, மாணிக்கவிநாயகம், எஸ்.என் சுரேந்தர், கிருஷ்ணராஜ், அனந்த் ஆகியோரும் பாடி இருக்கிறார்கள். இவர் இதுவரை இருபத்தியாறு இறு வட்டுகளை வெளியிட்டு, இருகின்றார். எனது மைத்துனரின் மக்களும், இவர் போல் பாடக்கூடியவர்களே. இப்பொழுது நோர்வேயில் வசிக்கிறார். இங்கும் இவர் இசையின் உபாசகராகவே இருக்கின்றார். ஒவ்வொரு நாளும் ஒரு பாடல் என்று, அந்தக் காலத்தில் இசையரசர் டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாடிய பாடல்களை தானே விசைப்பலகையை மீட்டி, அதை தனது அலைபேசியின் தன்னியக்க காணொளி மூலம் பாடி பதிவு செய்து பின்னர் அதை முகநூலில் பதிவேற்றி உள்ளார். சொல்வார்களே தனிமனித சாதனை என்று அதைத்தான் இவர் செய்திருகின்றார். இவரது 100வது முகநூல் பாடலை நான் கேட்டு இரசித்து வாழ்த்தியும் இருக்கின்றேன். பின்னர் அதை மெருகூட்டும் விதமாக இவரின் உறவுக்கார இசையமைப்பாளர் எம்.சி. ராஜ்குமார் அவர்களுடன் இணைந்து அதை புது இசை வடிவ இறுவட்டாக மாற்றி உள்ளார். தனது இசைப்பணியை மேலும் முன்னிலைப்படுத்த இவர் எழுதிப் பாடிய முருகன் பாடல்களை நூல் உருவாக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு அதை செயல்படுத்தும் போது, எனது பாடல்களையும், திரு.எஸ்.பி கனகரெத்தினம், சங்கீத பூசணம் சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பாடல்களையும், தம்பிலுவில் சி.பொ.த. வில்லியம்பிள்ளை ஐயா அவர்களது பாடல்களையும் இணைத்துள்ளது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. என் மைத்துனர் தெய்வராஜனின் இசை பணி மேலும் தொடரவேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**- கோவிலூர் செல்வராஜன் -**

AT அச்சகம், திருக்கோவில் 0774074862